வாராந்த சஞ்சிகை
பெப்ரவரி 23 - மார்ச் 03 2015

# சுடர் ஒளி

பக்கம் 24
விலை 30/



# ஜெசிக்காவும் ஈழமும்





# உயிர் குடித்த இறால் கறி

குரோதம், வைராக்கியம் போன்ற அனைத்து தீய குணங்களின் மொத்த வடிவமாக இருந்த சிறிய தந்தை அவள் குடும்பத்தை வேரறுக்க வேண்டும். புதிய விடியலில் அவள் உயிருடன் இருக்கக் கூடாது என்று இரவு முழுவதும் தனது இமைகளை சற்றும் மூடாமல் அவளைப் பழி வாங்க வேண்டும் என்ற வெறியுடன் காத்திருந்தான்.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்டது தான் வாழ்க்கை. இந்த வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு தான் அன்பு; பாசம், காதல், பாதுகாப்பு என்ற உணர்வுச் சுவர்களினால் குடும்பம் என்னும் அழகிய கோயில் கட்டப்பட்டுள்ளது.

தாத்தா, பாட்டி, மாமன், மாமி, சித்தி, சித்தப்பா, பெரியம்மா, பெரியப்பா என்று அன்பாக பெயர் சொல்லி அழைக்கும் கூட்டுக்குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு ஏது குறைவு. ஆனால் இன்று கூட்டுக் குடும்பம் என்றால் என்னவென்றே தெரியாதவர்களே அதிகம்.

இதற்குக் காரணம் புரிந்துணர்வின்மை, விட்டுகொடுப்பின்மை, சந்தேகம் என்ற தீய சக்திகளின் கட்டுக்களில் குடும்பங்கள் கட்டப்பட்டுள்ளமையே ஆகும்.

அதுவும் சிறு சிறு பிரச்சினைகளுக்கெல்லாம் விலை மதிப்பற்ற மனித உயிர்களை மிக துச்சமாக வேட்டையாடுதல் குடும்பங்களில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு அண்மையில் காலி, தடல்ல பிரதேசத்தின் மகமூதலி மாவத்தையில் இடம்பெற்றது. இந்தக் கொலைச் சம்பவத்தில் 24 வயது மதிக்கத்தக்க யுவதியொருவர் உயிரிழந்ததுடன், அவ்ளது தாயும் சகோதரனும் கடுமையான வெட்டுக் காயங்களுடன் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அவரச சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

இதேவேளை 58 வயதான குறித்த யுவதியின் மாமன் முறையான கொலையாளி கிங்தொட்ட, பாலத்துக்கு அருகில் ரயில் பாதையில் தலை வைத்து தற்கொலை செய்துள்ளான்.

இதை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து யுவதியின் கணவரது சித்தாப்பாவுக்கும், யுவதியின் குடும்பத்தாருக்குமிடையே நிலவிய சச்சரவே இந்த கொலைக்கான காரணம் என்று தெரிய வருகின்றது.

இதன்படி இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த எஸ்.ஜே சந்தமாலி மூன்று மாதங்களுக்கு முன் தான் யாழ். இராணுவ முகாமில் இராணுவ வீரராகக் கடமையாற்றும் சிசிரவை (பெயர் மாற்றப்பட்டுள்ளது) திருமணம் செய்து கொண்டாள்.

அதன்படி தனது திருமணத்தின் பின் தனது பிறந்த வீட்டை விட்டு காலி, தடல்ல பிரதேசத்தின் மகமுதலி மாவத்தையிலுள்ள தன் கணவனான சிசிரவின் வீட்டுக்கு புது மணப்பெண்ணாக தன் புகுந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தாள்.

திருமணமாகி சில நாள்கள் மட்டுமே சந்தமாலிக்காக நேரத்தை செலவழித்த சிசிர மீண்டும் தனது தொழிலுக்காக யாழ்ப்பாணத்துக்கே சென்றுவிட்டான். அதன் பின் விடுமுறை நாள்களில் மட்டுமே சிசிர வீட்டுக்கு வருவான்.

எனவே பெரும்பாலும் சந்தமாலி கணவனின் தாய், தந்தை, சகோதரன் என்ற தனது புகுந்த வீட்டு சொந்தங்களின் பாதுகாப்பிலேயே இருந்தாள். மேலும், அனைவருடனும் சகஜமாக பழகும் இயல்புடைய அவளுடன் மாமன், மாமி, மைத்துனன் என அனைவருமே அன்பாக இருந்தார்கள்.

அதுமட்டுமின்றி கணவனின் சிறிய தந்தையின் வீடும் இவர்களின் வீடு அமைந்திருந்த அதே வளவுக்குள்ளேயே அமைந்திருந்தது.

இது தான் குடும்ப உறுப்பினர்களிடையே குரோதம், வைராக்கியம் போன்ற தீய சக்திகளை ஊடுருவச் செய்ததுடன் இறுதியில் சந்தமாலியின் உயிரைக் குடிக்குமளவுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது.

கணவனின் சிறிய தந்தைக்கு ஆரம்பத்திலிருந்து சந்தமாலியை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. சிறிய சிறிய விடயங்களுக்கும் அதிகமாக குழப்பமடையும் குணவியல்பினைக் கொண்ட அவர் தொட்டதுக்கெல்லாம் அவள் மீது குறைகளைச் சுமத்தியவாறே இருந்தார்.

இவருடைய இந்த நடவடிக்கையினால் இரு குடும்பங்களுக்கும் இடையில் அடிக்கடி முறுகல் நிலைகள் தொடர்ந்த வண்ணமே இருந்தன.

இதனிடையே பௌர்ணமி தினமான பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி விடுமுறை நாள் என்பதால் அன்றைய தினத்தில் தன்னைப் பார்க்க காலி தடல்ல, மகமுதலி மாவத்தையில் அமைந்துள்ள தனது கணவனின் வீட்டுக்கு வருமாறு, தன் தாய்க்கும், சகோதரனுக்கும் சந்தமாலி அழைப்பு விடுத்திருந்தாள்.

எனவே மகளின் அழைப்பினை ஆசையுடன் ஏற்ற தாய் தனது மகனையும் கையோடு அழைத்துக் கொண்டு மகள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளையும் செய்து எடுத்துக் கொண்டு சந்தமாலியின் புகுந்த வீட்டுக்கு பெப்ரவரி இரண்டாம் திகதி வந்து சேர்ந்தாள்.

சந்தமாலியினதும், சிசிரவினதும் திருமணத்துக்குப் பிறகு மகளை பார்க்க அவள் புகுந்த வீட்டுக்கு அவர்கள் வருவது அதுவே முதல் தடவை. எனவே தான் மகளின் அழைப்பினை அவர்களால் தட்டிக்கழிக்க முடியவில்லை.

பகல் வேளையாகும் பொழுது மகளின் புகுந்த வீடான காலி தடல்ல பிரதேசத்தை வந்தடைந்த இருவரையும் கை, கால் முகத்தை கழுவி விட்டு சாப்பிட வருமாறு கூறி, அவர்களை வரவேற்பதற்காக வகை வகையாக சமைத்த உணவுப்பொருள்களை மேசையில் ஆயத்தமாக்கினாள்.

இதேவேளை, அயல் வீட்டிலிருந்த சந்தமாலியின் கணவனின் சிறிய தந்தை தனது இளைய மகன்



- வசந்தா அருள்ரட்ணம்

முறையான இளைஞனுக்கு ஒரு கோப்பை இறால்க் கறியை கொடுத்து அனுப்பியுள்ளார்.

இதனைக் குறித்த பிள்ளையிடமிருந்து பெற்றுக்கொண்ட சந்தமாலி அந்தப் பிள்ளையின் செய்கை காரணமாக சற்றுக் கடிந்தும் கொண்டாள். இதனை தொலைவிலிருந்து மாமன் முறையான குறித்த நபர் அவதானித்ததுடன் சந்தமாலியின் வீட்டினை நோக்கி வந்துள்ளார்.

இதேவேளை, சந்தமாலி அந்த பிள்ளை கொண்டு வந்திருந்த இறால் கறியில் தனது தாயாருக்கும் தம்பியாருக்கும் சற்று அதிகம் பரிமாறி விட்டு தனது கணவரின் தம்பிக்கு குறைந்த அளவில் பரிமாறியுள்ளார்.

இதனையும் அவதானித்த மாமன் முறையானவர் சந்தமாலியுடன் சற்று ஆவேசமாக முரண்பட்டுக்கொண்டார். அவர் இதற்கு முன்னும் சந்தமாலியின் மீது எதற்கெடுத்தாலும் குறை கண்டு பிடிப்பவர். எனவே இதை அவர் விடுவதாக இல்லை.

நான் அவனுக்கு தான் அந்த இறால் கறியை அனுப்பினேன். நீ எப்படி உன்னுடைய தாய்க்கும், சகோதரனுக்கும் இதைப் பரிமாற முடியும் எனப் பலத்த சத்தத்துடன் கத்தியதுடன், கூடாத வார்த்தைகளையும் அவளை நோக்கி பிரயோகித்துள்ளார்.

அதுமட்டுமின்றி அவளின் தாயையும் தம்பியையும் கூடவே பேசியுள்ளார். எனவே அவளும் பதிலுக்கு அவரைத் தீட்டித் தீர்த்தாள். இதேவேளை சாந்தமாலியின் தாயாரோ ஆசையாய் மகளைப் பார்க்க வந்த இடத்தில் இப்படி நடந்து விட்டதே என்று மகளை சாந்தப்படுத்தினாள்.

அதன் பின் அந்த இடத்தைவிட்டுச் சென்ற சிறிய தந்தைக்கு மாலை வேளையில் நடந்த சம்பவத்தை அவனால் மறக்க முடியவில்லை.

எனவே குரோதம், வைராக்கியம் போன்ற அனைத்தின் தீய குணங்களின் மொத்த வடிவமாக இருந்த சிறிய தந்தை அவள் குடும்பத்தை வேரறுக்க வேண்டும். புதிய விடியலில் அவள் உயிருடன் இருக்கக்கூடாது என்று இரவு தனது இமைகளை சற்றும் மூடாமல் அவளை பழி வாங்க வேண்டும் என்ற வெற்றியுடன் காத்திருந்தார்.

அதன்படி முழுமதி தினமான பெப்ரவரி மூன்றாம் திகதி அதிகாலை வேளையிலேயே ஆழ்ந்த நித்திரையிலிருந்த சந்தமாலியை கொலை செய்யும் நோக்கத்துடன் வீட்டின் மூலையிலிருந்த கோடரியை எடுத்துக் கொண்டு அவளை வெட்டச் சென்றார். அதன்படி இளம் பெண்ணான சந்தமாலியின் உடலை சரமாரியாக வெட்டிச் சாய்த்தார்.

அதுமட்டுமின்றி சந்தமாலியை காப்பாற்ற முனைந்த அவளது தாயை , சகோதரனையும் சரமாரியாக வெட்டினான். இதைத் தொடர்ந்து சந்தமாலி ஸ்தலத்திலேயே உயிரிழந்ததுடன் ஏனைய இருவரும் பலத்த வெட்டு காயங்களுடன் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சந்தமாலியின் சகோதரனின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலையில் இருந்து வரும் செய்திகள் மூலம் அறியப்படுகின்றது.

கோடரியால் தனது மருமகளையே தாக்கிக் கொலை செய்த கொலை குற்றவாளியான சிசிரவின் சிறிய தந்தை கொழும்பு, காலி பிரதான ரயில் பாதையில் உள்ள கிங்தோட்டை ரயில் பாதையின் பாலம் அருகே சென்று அங்கு தண்டவாளத்தில் தன் தலையை வைத்து ஓடும் ரயில் முன் தற்கொலை செய்து கொண்டான்.

இதைத் தொடர்ந்து சடலம் துண்டு துண்டாகச் சிதறிய நிலையில் ஜீன் கங்கையிலிருந்து மீட்கப்பட்டது.

எனவே ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பார்கள். சாதாரணமாக தீர்க்க வேண்டிய ஒரு பிரச்சினை இது. அற்பத்தனமாக ஒரு கோப்பை இறால் கறிக்காக ஒரு குடும்பத்தையே வேரறுத்து உள்ளமை மனிதாபிமானமில்லாத அரக்கன் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

- ஆசாத்

# மீண்டும் துளிர்க்கும் சிம்மாசனக் கனவு





அண்மையில் கொழும்பு நுககொடையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்குவதற்காக அவருக்கு வாக்களித்த 57 இலட்சம் மக்களுக்கு அறை கூவல் விடுக்கப்பட்டு ஒரு மாபெரும் பேரணி நடத்தப்பட்டது. இதில் விமல் வீரவன்ச,வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, தினேஸ்குணவர்த்தன,பிரசன்ன ரணதுங்க உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகளின் தலைவர்களும், பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அனைவரும் மஹிந்த ராஜபக் ஷவைப் பிரதமாக்கி இந்த நாட்டின் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றப் போவதாக சூளுரைத்தார்கள்.இதில் உரையாற்றிய வாசுதேவ நாணயக்கார ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டது அரசியலமைப்புக்கு விரோதமானது .தற்போதைய அமைச்சரவை சட்டமூலமற்றது எனத் தெரிவித்தார்.

அவர் இப்படி மக்கள் மத்தியில் தெரிவித்த போதும், புதிதாக நிறுவப்பட்ட அரசாங்கத்தை ஏற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்று நாடாளுமன்றத்தில் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உத்தியோக பூர்வமாக இந்தப் பேரணியில் கலந்து கொள்ளப் போவதில்லை என அறிவித்திருந்தது. எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா சுயமாகச் செயற்படுவதில்லை எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவரை ஆட்டிப் படைக்கிறார் எனவும் விமல் வீரவன்ச குற்றம் சாட்டினார்.ஒட்டுமொத்தத்தில் அங்கு உரையாற்றிய அனைவரும் இந்த நாட்டை ஆட்சி செய்யும் தகுதி தமக்கு மஹிந்த ராஜபக் ஷவுக்கு மட்டுமே உண்டு எனவும், நாட்டைப் பாதுகாக்கும் தகுதியும் அவருக்கே உண்டு எனவும் கருத்துப்பட உரையாற்றியிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கும் நோக்குடன் இந்தப் பேரணி நடத்தப்பட்ட போதிலும் அதில் அவர் கலந்து கொள்ளவில்லை என்பது முக்கியமானதாகும். எனினும் அவர் இதை நிராகரிக்கவில்லை. அந்தப் பேரணிக்கு அவர் தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருக்கிறார். அதை இலங்கையின் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கைப் பிரதிநிதியாகப் பணியாற்றி மஹிந்தவால் பதவி நீக்கப்பட்ட தயான் ஜெயதிலகமேடையில் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக் ஷ தனது வாழ்த்துச் செய்தியில் தன்னை ஆதரித்த மக்களுக்கு நன்றி தெரிவித்ததுடன் அவர்களை என்றும் தான் கைவிடப் போவதில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார். மேலும் தான் ஓய்வு பெற்றுவிடப் போவதில்லை எனவும் சிறை செல்ல நேர்ந்தாலும் தான் தொடர்ந்து மக்களுக்கு சேவை செய்யப் போவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். தேசத்தைப் பாதுகாத்தமைக்காகத் தான் பெருமைப்படுவதாகவும் குறிப்பிட அவர் மறக்கவில்லை.

ஒட்டு மொத்தத்தில் அவரோ அல்லது அவர்களின் ஆதரவாளர்களோ மீண்டும் சிம்மாசனம் ஏறி ஒரு சர்வதிகார ஆட்சி முறையைக் கொண்டு வருவதில் உறுதியாக உள்ளனர் என்பதை இந்தப் பேரணி மூலம் தெட்டத் தெளிவாக உணர்த்தியுள்ளார்கள்.

அதற்கான அத்திவாரத்தை அவர்கள் இனவாத அடித்தளத்தில் ஏறி நின்று வெகு லாவகமாகவும், குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவும் அமைத்து வருகின்றனர்.

இவர்கள் ஆட்சியிலிருந்த போது எவ்வாறு புலிஎதிர்ப்பை மூலதனமாக்கி அரசியல் நடத்தினரோ அவ்வாறே தற்சமயமும் தமிழர் எதிர்ப்பை மூலதனமாகக் கொண்டு மக்கள் மத்தியில் கடைபரப்ப ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் எட்டாம் நாள் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையை விட்டு வெளியேறிய போது தான் தமிழ் மக்களின் வாக்குகளாலேயே தோற்கடிக்கப்பட்டதாக தெரிவித்திருந்தார். இன்னொரு வார்த்தையில் சொல்லப் போனால் தான் தோற்கடிக்கப்படுவது முன்னே தெரிந்திருந்தால் தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையை இல்லாமற் செய்ய தனது நிறைவேற்று அதிகாரத்தை பாவித்திருப்பார் போல் தெரிகிறது.

அது மட்டுமன்றி அவரின் வலது கரமாகச் செயற்படும் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் போரின் போது இடம்பெயர்ந்து போய் இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கையில் குடியேற்றுவது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானதுஎனத் தெரிவித்துள்ளார். 1970 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து இங்கு வந்த தமிழர்களே தனி நாட்டுக் கோரிக்கையை முன் வைத்துப் பேரை ஆரம்பித்தனர் எனவும்,அகதிகள் இங்கு திரும்பி வந்தால் அவ்வாறே மீண்டும் போரை ஆரம்பித்து விடுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்படியான பரப்புரைகள் மூலம் முழுத் தமிழ்ச் சமூகத்தையுமே மக்களுக்கு ஆபத்தான எதிரிகளாக சித்தரிப்பதன் மூலம் அவர்கள் மத்தியில் இனக்குரோத உணர்வுகளை வளர்த்து அதன் மூலம் அரசியல் வெற்றிகளைப் பெற அவர்கள் முனைகின்றனர் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

தமிழர்கள் சிங்களவர்களுக்கு மிக ஆபத்தான எதிரிகள் எனவும் அவர்களை வெற்றி கொண்ட வீர புருஷனான மஹிந்த ராஜபக்ஷவால் மட்டுமே சிங்கள இனத்தைப் பாதுகாக்க முடியும் என்ற கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் நிலை நிறுத்துவதில் திட்டமிட்ட வகையில் ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

"கடந்த ஜனவரி மாதம் எட்டாம் நாள் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையை விட்டு வெளியேறிய போது தான் தமிழ் மக்களின் வாக்குகளாலேயே தோற்கடிக்கப்பட்டதாக தெரிவித்திருந்தார். இன்னொரு வார்த்தையில் சொல்லப் போனால் தான் தோற்கடிக்கப்படுவது முன்னே தெரிந்திருந்தால் தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையை இல்லாமற் செய்ய தனது நிறைவேற்று அதிகாரத்தை பாவித்திருப்பார் போல் தெரிகிறது."

இலங்கையில் இடம்பெற்ற முதலாவது நாடாளுமன்றத் தேர்தலின் போது மலையகத்தில் 7 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆறு இலட்சம் மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்ததன் மூலம் அந்த 7 பேரினதும் பிரதிநிதித்துவத்தையும் இல்லாமல் செய்தனர். இதன் காரணமாக இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ்மக்களின் பலம் குறைக்கப்பட்டது.

இப்போதும் இந்தியாவில் உள்ள ஒன்றரை இலட்சம் தமிழ் அகதிகள் இலங்கையில் மீள் குடியேற்றப்பட்டால் தமிழர்களின் வாக்களிப்பு அதிகரித்து பிரதிநிதிகளின் எண்ணிக்கை கூடலாம் என்ற நயவஞ்சக நோக்குடனேயே இவர்கள் தமிழர்களின் மீள் குடியேற்றத்தை எதிர்க்கின்றனர். எனவேதான் அதற்கும் வழமை போலவே புலிகளின் பெயரைப் பாவிக்கின்றனர்.

எப்படியிருப்பினும் இவர்களின் ஒவ்வொரு நகர்வும், தமிழ் மக்களுக்கு எதிரான வெறுப்புணர்வையும் ,குரோதத்தையும் சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்து அதன் மூலம் ஆட்சியை கைப்பற்றக் கனவு காண்பதாகவே இருக்கின்றது. அதிகாரத் துஷ்பிரயோகம், லஞ்சம்,ஊழல்,மோசடி போன்ற முறைகேடுகள் மூலம் சுகபோகத்தை அனுபவித்த அவர்கள் மீண்டும் ஒரு முறை குறுக்கு வழியில் சிம்மாசனம் ஏற முயல்கின்றனர்.

ஆனால் அவர்களின் ஆட்சியில் சிங்கள மக்களும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர் என்பதைச் சிங்கள மக்கள் உணர்ந்து விட்டதால், அந்தச் சிம்மாசனக்கனவுகள் கானலாகவே போய்விடும்.

# இன்னுமொரு துரோகம்

- அனுஷ்கன்

மீண்டும் சர்வதேசத்தின் முன் மூக்குடைபட்டிருக்கிறது தமிழினம். இறுதிப் போர் அரங்கில் தமிழினம் மீது சிங்களப் பேரினம் முன்னெடுத்த இன அழிப்புக்கான நீதி மேலும் ஆறு மாதத்துக்கு தள்ளிப் போயிருக்கிறது. குத்திப் பிளக்கப்பட்டு குருதி வடியும் எமது காயங்களுக்கு கட்டிடும் பணியை மேலும் ஆறு மாதத்துக்கு பிற்போட்டிருக்கிறது ஐ.நா மனித உரிமைகள் பேரவை. எதிர்வரும் மார்ச் மாதம் வெளியிடப்பட இருந்த பிரேரணையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை பிற்போடுமாறு மனித உரிமை ஆணையாளர் முன்வைத்த பரிந்துரைக்கு ஐ.நா மனித உரிமைக் கவுன்சில் ஒப்புதல் அளித்திருக்கிறது.




இந்த ஒப்புதலே அறிக்கை பிற்போடப்பட காரணமாகியிருக்கிறது. தமது ராஜதந்திர நலனுக்காக தமிழ் மக்கள் தொடர்ந்தும் பலிக்கடாக்கள் ஆக்கப்படுகிறார்கள் என்ற உண்மையை இந்த அறிக்கையை பிற்போட்டதன் மூலம் பட்டவர்த்தனமாக வெளிக்காட்டியிருக்கிறது சர்வதேசம்.

இலங்கை நல்லெண்ண முயற்சியைக் காட்டுகிறது மனித உரிமை விடயத்தில் முன்னேற்றத்தை காட்டுகிறது. ஆகவே ஆறு மாதத்துக்கு இலங்கையை அவதானிப்போம் என்ற தொனிப்பொருளிலேயே ஐ.நா. மனித உரிமைப் பேரவை ஆணையாளரின் அறிக்கை அமைந்திருக்கிறது. அத்துடன் இந்த ஆறுமாதத்துக்குள் மேலும் சில ஆதாரங்கள் கைகளுக்கு கிடைக்கலாம். ஆகவே பிற்போடுவது தவறாகப் படவில்லை என்ற சாரப்படவே அவரின் உரை அமைந்திருக்கிறது. குறித்த கால நீடிப்பு. விசாரணைகளை நீர்த்துப் போகச் செய்யும் எனப்பாதிக்கப்பட்டவர்கள் அச்சமடையலாம் என்ற உண்மையையும் அவர் ஏற்று கொண்டிருக்கிறார்.

வன்னிப்பெரு நிலப்பரப்பில் வெளியுலகுக்குத் தெரியாது என்ற மமதையில் பேரினப் படைகள் முன்னெடுத்த அனைத்து விதமான அராஜகங்களும் எந்த வித ஒளிவு மறைவுமின்றி சர்வதேச ஊடகங்கள் முன் வெளியிடப்பட்டுவிட்டன.

இவை இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஆய்வுகளுக்கு இடமின்றி நிரூபித்துவிட்டன. ஜெனிவாவில் இடம்பெறும் ஒவ்வொரு மனித உரிமைக் கூட்டத்தொடரின் போதும் ஏதோ ஒரு குருதி கசியும் பதிவுகள் வெளியாகும் என்ற நிலையே இருந்து வருகின்றது. இப்படி இலங்கையின் முகத்திரையைக் கிழித்து அம்மணமாக்கி ஒரு இனம் திட்டமிட்ட முறையில் கடற்கரையோரம் கொத்து கொத்தாக வேட்டையாடப்பட்ட உண்மைகளை சனல்- 4, த இண்டி பெண்டென்ஸ் போன்ற ஊடகங்கள் நிரூபித்து விட்டன.

கண்கள் கட்டப்பட்டு. கைகள் விலங்கிடப்பட்டு. ஆடைகள் களையப்பட்டு இழுத்துச் செல்லப்படும் ஆண்களும், பெண்களும் முட்டுக்காலில் நிறுத்தப்பட்டு, சப்பாத்துக் கால்களால் மிதிக்கப்பட்டு ஈவிரக்கமற்ற முறையில் பின்னந்தலையை துப்பாக்கிக் குண்டுகள் துளைத்தெறியும் வீடியோப் பதிவுகள் ஏற்கனவே வெளியாகிவிட்டன.

தமிழ்ப் பெண்கள் சீருடையாளர்களால் பிடிக்கப்பட்டு. ஆடைகள் களையப்பட்டு. கடித்துக் குதறப்பட்டு. கொன்று வீசப்பட்ட காட்சிகள், அவர்களின் நிர்வாணச்சடலங்களுக்கு முன்னால் வக்கிரமான முறையில் சீருடையாளர்கள் நின்று புகைப்படங்கள் எடுத்துக்கொண்ட காட்சிகள், தமிழ் இளைஞர்கள் பிடித்துச் செல்லப்பட்டு ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் கொலைப்பாணியில் தென்னைமரம் ஒன்றில் கட்டப்பட்டு சீருடையாளர்களால் கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு கொன்று வீசப்படும் காட்சி, பாலகனான பாலச்சந்திரன் உயிருடன் பிடிக்கப்பட்டு பதுங்கு குழியொன்றில் இருத்தப்பட்டு பிஸ்கட் உண்ணக்கொடுக்கப்பட்டு, உண்ட பிஸ்கட் தொண்டைக்குழியில் இறங்குவதற்கு இடையில் கொன்று வீசப்பட்ட காட்சிகள், ஊடகரான இசைப்பிரியா உயிருடன் பிடிக்கப்பட்டு ஆடைகள் களையப்பட்டு நீர் நிறைந்த பகுதிக்குள் இருந்து இழுத்து வரப்பட்டு அதன் பின் கோரமான முறையில் உயிரிழந்து கிடக்கும் வீடியோ, விடுதலைப்புலிகளின் தளபதிகள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் கொல்லப்பட்ட வீடியோக்கள், அப்பாவி மக்கள் மீதும் மருத்துவமனைகள் மீதும், மோதல் தவிர்ப்பு வலயங்கள் மீதும் தாக்குதல்கள் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகள் என அனைத்தும் குருதி உறையும் பதிவுகளும் ஏற்கனவே வெளியாகிவிட்டன.

அக்சன்பாம் படுகொலை, திருகோணமலை மாணவர் படுகொலை, காணாமல் போனவர் படுகொலை போன்றவற்றின் மூலம் போர்க் காலத்தில் இலங்கை ஆயுதப் படைகள் எப்படிச் செயற்பட்டன என்பது துலாம்பரப்படுத்தப்பட்டுவிட்டது.

போதாக்குறைக்கு இலங்கைக்கு வந்து திரும்பிய சர்வதேசப் பிரதி நிதிகளிடம் மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட அத்தனை அநீதிகளையும் எந்தவித ஒளிவு மறைவுமின்றிச் சொல்லி முடித்து விட்டனர். இலங்கை அரசு ஏற்பாடு செய்த அனைத்து ஆணைக்குழுக்களிலும் தமது பிள்ளைகளைக் கவர்ந்து

**ஜெனிவாவில் இடம்பெறும் ஒவ்வொரு மனித உரிமைக் கூட்டத் தொடரின் போதும் ஏதோ ஒரு குருதி கசியும் பதிவுகள் வெளியாகும் என்ற நிலையே இருந்து வருகின்றது. இப்படி இலங்கையின் முகத்திரையை கிழித்து அம்மணமாக்கி ஒரு இனம் திட்டமிட்ட முறையில் கடற்கரையோரம் கொத்து கொத்தாக வேட்டையாடப்பட்ட உண்மைகளை சனல்- 4, த இண்டி பெண்டென்ஸ் போன்ற ஊடகங் கள் நிரூபித்து விட்டன.**

சென்றவர்கள் பற்றி மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக உள்ளதை உள்ளவாறு சொல்லி அழுது தீர்த்துவிட்டனர்.

இலங்கையில் விசாரணையின் போது பாலியல் வல்லுறவு ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உண்மையை ஏற்கனவே பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் கூறி முடித்துவிட்டன. ஐ.நா வுக்குச் சென்றடையும் என்ற நம்பிக்கையில் சாட்சியம் வழங்கிய சிறுமி விபூசிகாவும் அவரது தாயாரும் கைது செய்யப்பட்டு, தாயார் இன்னும் சிறைகம்பிகளுக்கு பின்னாலேயே இருக்கிறார். தமக்கு நல்லெண்ணத்தைக் காட்டுகிறது என ஐ. நா. கூறும் மைத்திரி அரசு அவரை விடுவிக்க எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தனது மகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்கும் அனுமதியெடுத்தே வர வேண்டிய நிலையில் இருக்கிறார் அந்தத்தாய். நீதிமன்ற அனுமதியுடன் தனது தாயை பார்க்க மகசின் சிறைக்கு சென்ற அந்த சிறுமியை பல மணி நேரமாக காக்க வைத்து கதற வைத்த பின்னரே புதிய அரசு தாயுடன் பேச அனுமதியளித்திருக்கிறது.

போதாக்குறைக்கு வடமாகாண சபை தீர்மானம் இலங்கையின் காலாதி காலமாக திட்டமிட்ட முறையில் இனப்படுகொலை இடம்பெற்றது என ஆணித்தரமாக நிரூபித்திருக்கிறது. இவ்வாறு எல்லா உண்மைகளும் ஏற்கனவே போதுமான அளவு கிடைத்து விட்ட நிலையில் வேறென்ன ஆதாரத்தை சர்வதேசமும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரும் எதிர்பார்க்கின்றனர்?

மொத்தத்தில் புதிய அரசுடன் பேரம் பேசலை நிகழ்த்த போர்க்குற்றம், மனித உரிமை மீறல் எனும் ஆயுதங்களை சர்வதேசம் மீண்டும் கையில் எடுத்திருக்கிறது என்பதை யதார்த்தச் சூழல் தெளிவாகவே வெளிப்படுத்து கிறது. சர்வதேச அரசியலில் பாவபுண்ணியங்கள் நீதி நியாயம் என்பவற்றுக்கு அப்பால் ராஜ தந்திர நலன்களே முன்னிலைப்படுத்தப்படும் என்பதையும் ஐ.நா.அறிக்கை பிற்போடப்பட்டமை சொல்லி நிற்கின்றது.

# விஷப்பற்களின் அரசியல்

-அக்கினிகுமாரன்



இன ஒடுக்குமுறை, அதிகாரத் துஷ்பிரயோகம், கீழ்த்தரமான முறையில் பழி வாங்கல், எதிர்ப்பவர்களை வேருடன் அழித்தல், லஞ்சம், ஊழல், மோசடி எனச் சகல விதமான மனித குல விரோத நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ஒரு கொடிய சர்வதிகார ஆட்சியை நடத்தி வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும், அவரது ஆதரவாளர்களதும் கொடூரமான விஷப்பற்கள் உடைக்கப்பட்டு அதிகாரத்திலிருந்து தூக்கி எறியப்பட்டனர்.

இவர்களின் மனிதாபிமானமற்ற இன ஒடுக்குமுறை நடவடிக்கைகள் காரணமாக இவர்களின் ஆட்சியை அகற்றுவதில் தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் பிரதான பாத்திரம் வகித்தனர்.

இப்படியாகச் சிறுபான்மை மக்கள் இவர்களின் பற்களை உடைத்து இவர்களுக்கு தகுந்த பாடம் கற்றுக் கொடுத்த போதிலும் இவர்கள் சிறுபான்மை மக்களுக்கெதிராக விஷம் கக்குவதையோ, கடித்துக் குதறச் சந்தர்ப்பம் தேடுவதையோ நிறுத்திக் கொள்வதையோ இன்று வரை நிறுத்திக் கொள்ளவில்லை.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தொடர்பான தீர்மானம் கருத்து வெளியிடும் போது இது நல்லிணக்க முயற்சிகளையும் குழப்பும் வகையிலானது. மாகாண சபைக்கு இப்படியான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும் அதிகாரம் இல்லை .இது இலங்கையில் இறுதிப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பான அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிடுவதன் மூலம் உருவாக்கப்பட்ட சமாதானத்தை சீர் குலைத்து விடும். இலங்கையில் மேற்படி குற்றங்கள் தொடர்பாக நடத்தப்படவுள்ளதாகக் கூறப்படும் உள்ளக விசாரணைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் குமுறிக் கொந்தளித்துள்ளார் .

அடிப்படையில் இது ஒரு நியாயத்தைத் தேடும் கருத்து வெளிப்பாடா. அல்லது உண்மைகள் வெளிவருவதற்கு எதிராகச் சிங்கள மக்களிடம் இனவெறியைத் தூண்டி சிறுபான்மையினர் தொடர்ந்து அநீதிகளுக்கு உட்படுத்தப்படுவதைத் தட்டிக் கேட்பதற்கு எதிராகச் சிங்கள மக்களை அணி திரட்டும் ஒரு நயவஞ்சக முயற்சியா என்ற கேள்வி எழுகிறது. பதில் நிச்சயமாக இரண்டாவது கூற்றுத்தான்.

காலம் காலமாக தமிழ் மக்கள் தொடர்பாக மட்டுமன்றி சகல மட்டங்களிலும் நீதிக்கும் நியாயத்துக்கும் எதிராக செயற்பட்டுக் கொண்டு அவற்றைப் போர் வெற்றி மாயையால் மறைத்து அரசியல் அதிகாரத்தில் வீற்றிருந்தவர்கள் இவர்கள். இப்படியானவர்கள் இந்த விதமான மனித குல விரோத அரசியலிலிருந்து இன்னமும் விடுபடவுமில்லை. எக்காலத்திலும் விடுபடப் போவதுமில்லை.

வடமாகாண சபையின் தீர்மானம், ஐ.நா. மனித உரிமை ஆணையாளரினால் வெளியிடப்படவுள்ள அறிக்கை ஆகிய இரு விடயங்கள் தொடர்பாகவும், எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா வெளியிட்ட கருத்துகளுக்குள் மிரட்டல் தன்மை இழையோடுவதை நாம் அவதானிக்க முடியும்.

அதாவது இலங்கையில் தமிழர் மீது இன அழிப்பு மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்பட்டால் சமாதானம் இல்லாமல் போகும். அடுத்தது விடுதலைப்புலிகளைத் தோற்கடித்தே சமாதானம் உருவாக்கப்பட்டது என்ற இரண்டு விடயங்களும் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியவை.

விடுதலைப்புலிகள் போர்வெறி கொண்டோ அல்லது உயிர் வாழும் ஆசை கொண்டோ போராடவில்லை. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் மீது அடிமைத்தனம் பல வழிகளிலும் திணிக்கப்பட, அடிமைத்தனத்திலிருந்து விடுபட மேற்கொண்ட ஜனநாயக வழிகள் பயனற்றுப் போன நிலை லேயே ஆயுதப் போரட்டம் உருவாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவே புலிகள் போராடினார்கள். சந்தர்ப்பம் வாய்த்த போது சமாதானப் பேச்சுகளையும் நடத்தினார்கள். இறுதியாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுகளை முறிவடையும் நிலைக்குக் கொண்டு வந்த அரசாங்கக் குழுவுக்கு தலைமை தாங்கியவர் இந்த நிமால் சிறிடிபால சில்வா தான்.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப் பட்டதால்தான் சமாத்தானம் உருவாக்கப்பட்டதென்றால் அதன் அர்த்தம் தமிழ் மக்களின் உரிமைகள் மட்டுமன்றி உரிமை கோரும் தலைமையும் கூட பறிக்கப்பட்டு உருவாக்கப் பட்ட சமாதானம் என்பது தான் அது.

எனவே இடம்பெற்ற கொடூரங்கள் ஒரு இனத்தின் மீதான இன அழிப்பு நோக்கம் கொண்ட படுகொலைகள் என்பது வெளிப்படுமானால் இன்றைய போலிச் சமாதானத்தின் உண்மை முகம் வெளிப்பட்டு விடும். அடிமைத் தனத்தை நிலை நிறுத்த கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மனித குல விரோத நடவடிக்கைகள் அம்பலப்பட்டு விடும்.

வடமாகாண சபையின் தீர்மானம் மூலம் சமாதானம் சீர்குலையும் என்றால் அந்தச் சமாதானத்தை சீர்குலைக்கப் போகின்றவர்கள் யார்? நிச்சயமாக அது தமிழர் தரப்பாக இருக்க முடியாது.

எனவே தான் நிமால்சிறிபால டி சில்வா மறைமுகமாக தமிழ் மக்கள் வாயை மூடிக் கொண்டு, நடப்பதை சகித்துக் கொண்டு இருக்காது விட்டால் மீண்டும் பெரும் இன அழிப்பு ஏதோ ஒரு வகையில் கட்டவிழ்த்து விடப்படும் என மிரட்டுகிறார். இனக்கலவரம் என்ற பேரில் மூன்று தடவைகள் இன அழிப்பு வெறியாட்டம் நடத்தி தமிழ் மக்களின் இரத்தத்தில் பேயாட்டம் போட்டவர்களை நாம் இன்றும் மறந்து விடவில்லை.

அவரின் அடுத்த குமுறல் ஐ.நா. ஆணையாளரின் விசாரணை அறிக்கை தொடர்பானது. ஐ.நா அறிக்கை வெளிவந்தால் அது இலங்கையில் நடக்கவுள்ள உள்ளக விசாரணைகளில் பாதிப்பு ஏற்படுத்தி விடுமாம்.

**விடுதலைப்புலிகள் போர்வெறி கொண்டோ அல்லது உயிர் வாழும் ஆசை கொண்டோ போராடவில்லை. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் மீது அடிமைத் தனம் பல வழிகளிலும் திணிக்கப்பட, அடிமைத் தனத்திலிருந்து விடுபட மேற்கொண்ட ஜனநாயக வழிகள் பயனற்றுப் போன நிலைலேயே ஆயுதப் போரட்டம் உருவாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.**

அவருடைய அரசின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான உள்ளூர் விசாரணைகள் பற்றி தமிழ் மக்களுக்கும், சர்வதேசத் துக்கும் எப்போதும் போதிய அனுபவம் உண்டு. தெளிவான புரிதலும் உண்டு.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்ய சர்வதேசத்தின் அழுத்தத்தின் பேரில் ஒரு நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அது நீண்ட விசாரணைகளை நடத்தி - அவற்றின் அடிப்படையில் பல பரிந்துரைகளை முன் வைத்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 2012,2013 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற கூட்டத் தொடர்களில் இலங்கை தொடர்பான தீர்மானத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற இரு தடவைகள் அவகாசம் வழங்கியது. ஆனால் இலங்கை அரசோ தொடர்ந்து ஏமாற்று நடவடிக்கைளிலேயே இறங்கியது.

இறுதியில் 2014 ஆம் ஆண்டு கூட்டத் தொடரிலேயே விசாரணைக்குழு அமைக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இப்போது அதன் அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

இப்போது அறிக்கை வெளிவரவுள்ள நிலையில் அது வெளிவந்தால் இலங்கையில் நடைபெறவுள்ள விசாரணைகளை அது பாதித்து விடுமாம் என்று நிமால் புலம்புகிறார்.

இலங்கையில் நடைபெறவுள்ள விசாரணை நேர்மையாக நடத்தப்படுமானால் ஐ.நா. அறிக்கையில் வெளிவரும் விடயங்கள் அந்த விசாரணைக்கு உதவ முடியும். அதில் பிழையான விடயங்கள் முன் வைக்கப்பட்டாலும் உள்ளூர் விசாரணைகள் மூலம் அவற்றை ஆதாரபூர்வமாக நிராகரிக்க முடியும்.

அப்படியானால் ஐ.நா. அறிக்கைக்கு ஏன் அஞ்ச வேண்டும். எனினும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் விடயம் தற்சமயம் செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது.

அடிப்படையில் இவர்கள் பல்லுடைபட்டு அதிகாரத்திலிருந்து தூக்கி வீசப்பட்ட போதிலும் தொடர்ந்து தமிழ் மக்கள் மேல் இழைக்கப்பட்ட கொடுமைகளை நியாயப்படுத்தவும் தமிழ் மக்களை அடிமைகளாக வைத்திருக்கவும் தொடர்ந்து விஷப்பற்களுடன் குரல் கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள். எனினும் முட்டாள்கள் கல்லைத் தூக்குவது தங்கள் சொந்தக் காலில் போடவே என்று ஒரு பழமொழி உண்டு. காலம் அவர்களுக்கு இதைக் கற்றுக் கொடுக்கும்.

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# ஜெசிக்காவும் ஈழமும்

ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து வசிக்கும் ஜெசிக்கா என்ற சிறுமி தனியார் தொலைக்காட்சி ஒன்றின் பாடல் இறுதிப் போட்டியில் "விடைகொடு எங்கள் நாடே" என்ற பாடலைப் பாடியதும் , தனக்கு பரிசாகக் கிடைத்த ஒரு கிலோ தங்கத்தை தமிழக மற்றும் ஈழத்திலுள்ள ஆதர வற்ற குழந்தைகளுக்கு தானமாகக் கொடுத்தது இப் போது சமூக வலைத்தளங்களில் மட்டுமல்லாது தமிழர் வீடுகளிலும் பிரதான பேசுபொருளாகியிருக்கிறது.

ஜெசிக்கா ஈழத்தை அடமானம் வைத்து வாக்குப் பிச்சை கேட்டார் என்று ஒரு சாராரும், தனக்குக் கிடைத்த மேடையை ஜெசிக்கா ஈழப்பிரச்சினையின் பால் திருப்பி சரியாகப் பயன்படுத்திக் கொண்டார் என்று இன்னொரு சாராரும் அடிபடாத குறையாக முரண்பட்டுக் கொள்கிறார் கள். உண்மையில் இதைத்தான் சில சக்திகள் விரும் பியிருந்தன. அவர்களின் விருப்பப்படியே எல்லாம் நல்லவிதமாக நடந்தேறி வருகிறது.

சில நாள்களுக்கு முன்னர் வரை சுன்னாகத்து தண் ணீர்ப் பிரச்சினையும்,ஐ.நா அறிக்கை தள்ளிப் போனது பற்றியுமே அதிகம் அங்கலாய்த்துக் கொண்ட ஊடகங் களும் , சமூக வலைத்தளங்களும் இப்போது அவற்றை யெல்லாம் கடாசி விட்டு ஜெசிக்காவை கெட்டியாகப் பிடித்துக் கொண்டுள்ளன.

ஈழத்தமிழர்களின் இத்தனை கால போராட்டமும் ஒரு கிலோ தங்கத்தை ஜெசிக்கா என்ற சிறுமி வெல்வதற் காகத் தான் நடத்தப்பட்டதோ என்ற மாயை இந்த சமூக வலைத்தளங்கள் ஊடாக உருப்பெற்று வருகிறது. இதே வேளை ஜெசிக்காவுக்காக வக்காலத்து வாங்குபவர்கள் சிறையிலிருந்து தாயை விடுவிக்க போராடும் விபூசி காவுக்காக ஏன் குரல் கொடுக்க வில்லை என்ற மூன்றாம் குரலும் சமூக வலைத்தளங்களில் எழாமல் இல்லை. இப்படி ஜெசிக்கா என்ற ஈழச்சிறுமியை மையப்படுத்தி நாங்கள் முரண்பட்டுக் கொண்டிருக்கையில், சந்தடி இல்லாமல் பேரினமும் சர்வதேசமும் தங்கள் இலக்கு களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். தென்னி லங்கையில் உள்ளக விசாரணைக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இலங்கையின் புதிய இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா நியமிக் கப்பட்டுள்ளார். இவர் இறுதிப் போரின் போது அப் போதைய பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவின் நம் பிக்கைக்குரியவராக விளங்கியவர். இதனால் தான் சரணடைந்த புலிகளையும்,பொதுமக்களையும் கொல் வதற்காக கிரிஷாந்த டி சில்வாவை பிரத்தியேகமாக களமுனைக்கு கோத்தபாய அனுப்பி வைத்தார். அப் படிப்பட்ட இனப்படுகொலையாளி ஒருவரை மைத்திரி அரசு இராணுவத் தளபதியாக்கியதை எந்த ஒரு தமிழினப் பற்றாளரோ, அரசியல் வாதிகளோ கண்டிக்க வேயில்லை.

இந்தியாவுக்கு இலங்கை ஜனாதிபதி மைத்திரி சென்றிருந்த போது அவரை சவேந்திர டி.சில்வா இரகசிய மாகச் சந்தித்திருந்தார். சவேந்திர டி.சில்வா தான் இசைப் பிரியா உள்ளிட்ட பெண் போராளிகள் பலரை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி கொடூரமாக கொலையுண்ட மைக்கு சூத்திரதாரி என்று குற்றம் சாட்டப்படுபவர். அப்படிப்பட்டவரை இந்தியாவில் மைத்திரி இரகசியமாக சந்தித்த காரணம் என்ன?

இந்தச் சந்திப்பு தொடர்பான தகவல்கள் வெளிவந்த போது கூட ஏன் எந்தவொரு எதிர்ப்பும் தமிழர் தரப்பி லிருந்து கிளம்பவில்லை.ஏனென்றால் தமிழர்களுக்கு இப்போது இனப்படுகொலை விடயம் மறைக்கப்படுவதை விடவும், இனப்படுகொலையாளிகள் தப்பிப்பதை விடவும் மிக முக்கியமான விடயம் விடைகொடு நாடே என்று ஈழத்து உணர்வை உலகறியச் செய்த (?) ஜெசிக்காவின் சாதனையைப் பற்றி பெருமை கொள்வது மட்டுமே.

- புருஜோத்தமன் தங்கமயில்



# தாமதிக்கப்படுகிறதா நீதி?

தமிழ் மக்கள் காலம் காலமாக தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக நீதி வேண்டி காத்திருக்கின்றார்கள். நீதி வேண்டிக் காத்திருத்தல் என்பது அதிகம் நம்பிக்கைகளினால் நிறைந்தது. ஆனால், அந்த நம்பிக்கைகள் பொய்த்து காத்திருத்தல் கொடும் கனவாக மாறிய வரலாறுகளே தமிழ் மக்களுக்கு மிஞ்சியிருக்கின்றன. அப்படியான தருணமொன்றை நோக்கியே தமிழ் மக்கள் நகர்த்தப்படுகின்றார்கள். இப்போது நம்பிக்கையின் அளவு அவ்வளவு அதிகமாக இல்லாததால் ஏமாற்றத்தின் அளவு அவ்வளவுக்கு பெரிதாக இருக்க வாய்ப்பில்லை.

இலங்கையின் இறுதி மோதல்களின் போது தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட் டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை யின் விசாரணையையும் அது தொடர்பி லான முன்னெடுப்புக்களையும் அப்படித்தான் கொள்ள வேண்டியிருக் கின்றது. ஏனெனில், அந்த விசார ணையோ, அதற்கான முன்னெடுப்புக் களோ அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளினால் உள சுத்தியோடு மேற்கொள்ளப்பட வில்லை. மாறாக, தமக்கு இசைவற்ற இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு குடைச்சல் கொடுக்கும் கருவியாகவே அதனை முன்வைத்தன. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு தமக்குச் சார்பான வர்கள் ஆட்சியில் அமர்த்தப்பட்டதும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் ஐக்கிய நாடுகள் விசாரணை மற்றும் அது சார்ந்த விடயங்களைக் கைவிடுவதற்கான முனைப்புக்களில் ஈடுபடுவது எதிர்பார்த்ததுதான்.

இலங்கையின் இறுதி மோதல்களின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணை அறிக்கையை ஆறு மாத காலத்துக்கு ஒத்திவைப்பதற்கு ஐக்கிய நாடுகளின் உரிமைகள் ஆணையாளர் இளவரசர் ஷெயிட் ராட் அல் ஹுசைன் பரிந்துரையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை கடந்த திங்கட்கிழமை (பெப் 16, 2015) ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த ஒத்திவைப்பானது ஒரு முறை மாத்திரமே நிகழக்கூடியதென்றும் விசாரணை அறிக்கை இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படும் என்றும் ஐக்கிய நாடுகளின் உரிமைகள் ஆணையாளர் ஷெயிட் ராட் அல் ஹுசைன் அறிவித்திருக்கின்றார்.

'இலங்கையில் மாறி வரும் நிலைமைகளில் இந்த அறிக்கையைப் பலப்படுத்தும் வகையில் மேலும் ஆதாரங்கள் கிடைக்கலாம். முன்னைய அரசாங்கத்தைப் போலல்லாது இலங்கையின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள் குறித்த பல விடயங்களில் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ள நிலையில், அவர்களது கடப்பாடுகளை யதார்த்தமாக்க எனக்கு இது உதவும். ஐக்கிய நாடுகளின் முன்னைய மனித உரிமைகள் ஆணையாளரான நவநீதம்பிள்ளை அவர்களுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட மூன்று நிபுணர்களும் இந்த கால நீடிப்பு அவசியமானது என்று கூறியுள்ளனர். இலங்கை மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சியம் வழங்கியவர்களும் இந்த காலநீடிப்பு இதனை நீர்த்துப்போகச் செய்யும் விசயமாக எண்ணி அச்சம் கொள்ளலாம். ஆனால், பாதிக்கப்பட்டவர்களுக்கான பலமான குரலாக நாம் ஒலிப்போம் என்பதில் எந்த மாற்றமும் கிடையாது' என்றிருக்கிறார் ஷெயிட் ராட் அல் ஹுசைன்.

> **'இலங்கைத் தமிழ் மக்களின் உரித்துக் களின் நிலை, அவர்களின் எதிர்பார்ப்புக் கள், அவர்களின் அபிலாசைகள், அவர் களின் தேவைகள், அவர்களின் வருங் காலம் ஆகியன யாவும் இன்று ஒரு மயக்க முற்ற நிலையை அடைந்துள்ளன. எமது நிலை, விளையாட்டுத்திடல் பந்து போன்று உலக அரங்கில் பலரின் உதைக்கும் எதிர் உதைக்கும், எறிவுக்கும் எதிர் எறிவுக்கும் ஆளாகி வருகின்றது.'**

ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு தொடர்பிலான ஷெயிட் ராட் அல் ஹுசைனின் மேற்கண்ட பதில், கேள்விகளுக்கு அப்பாலானது என்று தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்கிற ரீதியில் அமைந்துள்ளது. ஆனால், ஜனாதிபதித் தேர்தல் காலத்திலேயே தாய் நாட்டினை மீட்டுத் தந்த இராணுவத்தின ரையோ, தளபதிகளையோ தண்டிப்பதற்கான சந்தர்ப்பங்களை என்றைக்கும் வழங்கப்போவதில்லை என்று அறிவித்துவிட்டுத்தான் மைத்திரிபால சிறிசேன களம் கண்டார். ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை முன்னிறுத்திய பொது எதிரணியும் அது தொடர்பில் தெளிவாக அறிவித்திருந்தது.

அத்தோடு, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச விசாரணையொன்றுக்கு ஒத்துழைக்க முடியாது. அதற்கு இலங்கையின் இறைமை அனுமதிக்காது என்றும் அறிவித்திருந்தது. அதுபோக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் வழங்கும் உரோம் சட்டத்திலும் இலங்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. அப்படியான நிலையில், ஷெயிட் ராட் அல் ஹுசைன் சொல்வது போன்றதொரு நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. மாறாக, விசாரணையையும், அது தொடர்பிலான அறிக்கையும் நீர்த்துப்போகச் செய்யும் வாய்ப்பையே இந்தக் கால நீடிப்பு வழங்கும் என்று கொள்ள வேண்டியிருக்கின்றது.

'இலங்கைத் தமிழ் மக்களின் உரித்துக்களின் நிலை, அவர்களின் எதிர்பார்ப்புக்கள், அவர்களின் அபிலாசைகள், அவர்களின் தேவைகள், அவர்களின் வருங்காலம் ஆகியன யாவும் இன்று ஒரு மயக்கமுற்ற நிலையை அடைந்துள்ளன. எமது நிலை, விளையாட்டுத்திடல் பந்து போன்று உலக அரங்கில் பலரின் உதைக்கும் எதிர் உதைக்கும், எறிவுக்கும் எதிர் எறிவுக்கும் ஆளாகி வருகின்றது.' இந்தச் சொற்களை, கடந்த வாரம் வடக்கு மாகாண சபையில் 'இறுதி மோதல் களின் போது நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைகளே' என்கிற தீர்மானத்தை முன்வைத்து உரையாற்றிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந் தார். கடந்த வாரப் பத்தியிலும் இதனைக் கோடிட்டிருந்தேன். இப்போதும் அதனை கோடிடவேண்டியிருக்கின்றது. ஏனெனில், உதைபடும் பந்தாக எம்மை உணரும் சந்தர்ப்பமொன் றின் உச்ச கட்டமொன்றில் இப்போது இருக்கின்றோம். ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கை ஒத்தி வைப்பு அதனையே பிரதி பலிக்கின்றது.

ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கையை வரும் மார்ச் மாதம் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் வெளியிடப்படக்கூடாது என்பதில் இலங்கையின் புதிய அரசாங்கம் பெரும் முனைப்போடு செயற்பட்டது. அதற்காக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியையும் சந்தித்திருந்தார். அதில் வெற்றியும் கண்டிருக்கின் றார். ஆறு மாதங்களுக்கு அந்த அறிக்கை ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், உள்ளக விசாரணைக்கான பொறிமுறை குறித்து புதிய அரசாங்கம் வாக்குறுதியளித் திருக்கின்றது.

**நாடாளுமன்றத் தேர்தலொன்று இன்னும் மூன்று மாதத்துக்குள் வரவுள்ள நிலையில், இலங்கை யின் புதிய அரசாங்கம் இறுதி மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான உள்ளக விசார ணையை முன்னெடுக்கும் என்று நம்புவது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். அதுவும், சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ஆணி வேரிலேயே அறுப்பைச் செய்யக் கூடிய விசாரணை யொன்றை அதே சிங்கள பௌத்த தேசியவாத அரசாங்கம் முன்னெடுக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். குற்றவாளிகளைக் காப்பாற்றுவது தொடர்பில் இலங்கை அரசாங் கத்துக்கு பெரும் கடப்பாடு இருக் கின்றது. அதுதான், அவர்களை சிங்கள மக்களிடம் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்கும்.**

நாடாளுமன்றத் தேர்தலொன்று இன்னும் மூன்று மாதத்துக்குள் வரவுள்ள நிலையில், இலங்கை யின் புதிய அரசாங்கம் இறுதி மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான உள்ளக விசாரணையை முன்னெடுக்கும் என்று நம்புவது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். அதுவும், சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ஆணி வேரிலேயே அறுப்பைச் செய்யக் கூடிய விசாரணையொன்றை அதே சிங்கள பௌத்த தேசியவாத அரசாங்கம் முன்னெடுக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். குற்றவாளிகளைக் காப்பாற்றுவது தொடர்பில் இலங்கை அரசாங் கத்துக்கு பெரும் கடப்பாடு இருக் கின்றது. அதுதான், அவர்களை சிங்கள மக்களிடம் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்கும். அப்படியான நிலையில், வெளிநாட்டு நிபுணர்களையோ, ஐக்கிய நாடுகளையோ நேரடியாக விசாரணைகளுக்காக களம் காண அனுமதிக்கும் வாய்ப்புக்கள் இல்லை.



இன்னொரு விடயத்தையும் அவதானிக்க முடிகின்றது. இலங்கை மீதான ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கை வரும் மார்ச் மாதம் வெளியி டப்பட்டால் அது, மஹிந்த ராஜபக்ஷ சார்பு சிங்கள பௌத்த தேசியவாதிகளை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்கான வாய்ப்புக்களை வழங்கலாம். நியாயமான விடயங்களை விசாரணையாளர்கள் அறிக்கை யில் கோடிட்டு குற்றவாளிகளை தண்டிப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டால் அது, இலங்கையில் தாம் திட்டமிட்டு உருவாக்கிய தம் சார்பு அரசாங்கத்தை மாற்றுவதற்கான சூழலையும் ஏற்படுத்திவிடும் என்று அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் கருதியிருக்கலாம். அதுவும், விசாரணை அறிக்கை ஒத்திவைப்புக் காரணங்களில் ஒன்றாக இருக்கலாம்.

கடந்த பத்து ஆண்டுகளாக தமக்கு சார்பற்ற அரசாங்கமொன்று இலங்கையில் இருந்தது என்பதை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடுகள் உணர்ந்திருக்கின்றன. அப்படியான நிலையில், அவ்வாறனதொரு அரசாங்கத்தை மீண்டும் கொண்டுவருவதற்கான சூழ்நிலையை எந்தவொரு தருணத்திலும் அனுமதிக்காது. அதனை, அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஸா தேசாய் பிஸ்வாலின் இலங்கை விஜயமும் உணர்த்தியது.

குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின் போது, அவர் முன்வைத்த விடயங்கள், இலங்கையின் புதிய அரசாங்கத்தை தக்க வைப்பதற்காக எவ்வளவு விட்டுக் கொடுப்புக்களையும் செய்வதற்கு அமெரிக்கா தயார் என்பதான செய்தியைச் சொல்லியிருந்தது. அப்போதே, இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கை வரும் மார்ச் மாதம் வெளியிடப்பட மாட்டாது என்பது தெளிவாகிவிட்டது.

ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு விடயத்தை(யும்) முன்வைத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மையுள்ள அரசாங்கமொன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடும். ஏற்கனவே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்து அரசாங்கம் செய்த ஊழல்களை மெல்ல மக்களுக்கு காட்டி வருகின்றது. ஊழல்களுக்கு எதிரான விசாரணையை துரிதப்படுத்தாமல் சரியான கால இடைவெளியில் தேர்தல் காலம் நெருங்க நெருங்க அதனை வெளிப்படுத்தி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மீதான குற்றச்சாட்டுக்களை அடுக்க நினைக்கின்றது.

அதனையே, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மிக கச்சிதமாக முன்னெடுக்கின்றார். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை நீக்கப்பட்டு நிறைவேற்று நாடாளுமன்றம் அமைக்கப்படும் போது, தனிப் பெரும் பான்மையுள்ள அரசாங்கத்தை அமைப்பதே தன்னை நிலைபெற வைக்கும் என்பதில் அவர் தெளிவாக இருக்கின்றார். அதற்கான ஒத்துழைப்பையே ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கை ஒத்திவைப்பினூடும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளும் வழங்கியிருக்கின்றன.

இவ்வாறான நிலையில் தான், ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு விவகாரம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைமைகள் என்ன கருத்தை வெளிப்படுத்துவது என்று தெரியாமல் அல்லாடுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஐக்கிய நாடுகளின் அறிக்கை ஒத்திவைப்பு என்பது கவலையோ, மகிழ்ச்சியையோ அளிக்கவில்லை என்றிருக்கின்றார். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு மகிழ்வளிக்கவில்லை என்றிருக்கின்றார். ஆனால், அந்த கால எல்லை புதிய ஆதாரங்களை விசாரணை அறிக்கையில் சேர்க்க உதவக்கூடும் என்றும் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கை மீது சர்வதேச விசாரணை வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ, 'விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு காலத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு வந்து நேரடியாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாக்கு மூலங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.' என்று வலியுறுத்தியிருக் கின்றது. ஆனால், தமிழ் மக்கள் ஓரளவுக்கு தெளிவாக இருக்கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி என்பது சர்வதேச அரசியலுக்குள் சிக்கிவிட்ட தமிழ் மக்களுக்கு இலகுவாக கிடைத்துவிடாது. ஆக, இவ்வாறான சர்வதேச மாயைகளுக்குள் அதிகம் நம்பிக்கை கொள்ளாமல் அடுத்த கட்டம் நோக்கி நகர்வதற்கான முயற்சிகளை நாமே எடுக்க வேண்டும் என்பதே அது.

- பா.ரகுவரன்

# மார்கழி நினைவுகள்



### நினைவு-11

-------------

மூன்றாம் தவணைப் பரீட்சை எப்ப முடிவடையும்? பட்டம் ஏற்றலாம் என்ற தவிப்புடன் மார்கழி பிறக்கும்.தைப்பொங்கல் வரை பட்டம் ஏற்றி மகிழ்வோம். இந்தக்காலத்தில் எனக்கு நல்ல கிராக்கி இருந்தது.இத்தனைக்கும் ஒழுங்காக ஒரு பட்டம் கட்ட எனக்குத் தெரியாது. ஆனாலும் எனக்கு பட்டம் ஏற்றும் காலத்தில் நல்ல மதிப்பு இருந்தது.கோபம் போட்டவர்களும் உறவு கொண்டுவிடுவார்கள் பட்டக்காலத்தில் .ஏன்.?. என்ன காரணம்? ..எந்த மரமானாலும் சரி எப்படியோ ஏறி த்தொங்கிய பட்டங்களை எடுப்பதில் நான் வல்லவன்--அதுதான் காரணம்.

### நினைவு-12


எங்கள் ஊரில் பெரிய அண்ணாமார் பெரிய பட்டம் கட்டி ஏற்றி இரவிலும் வானத்தில் பட்டத்தை நிற்க விடுவார்கள்.நூலில் அரிக்கன் லாம்புக்கட்டிவிடுவார்கள் அந்த லாம்பு எங்கள் வீட்டுக்கு மேல்தான் உச்சம் தரும் வானத்தில் இந்த அரிக்கன் லாம்பைப் பார்ப்பதற்காக என்னை நடுச்சாமத்தில் எழுப்பிக்காட்டும் எந்தன் இனிய அம்மம்மாவை நினைக்கையில் கண்கள் குளமாகிய நிலையில் நான்.....அம்மம்மாக்கள் வாழ்க.

அம்மம்மாக்கள் பாட்டி சிறுவருக்கு உலகத்தைக்காட்டும் வெளிச்சவீடுகள் என்பேன் யான்.

### நினைவு-13

பெரிய அண்ணா ஒருவர் தங்கள் வீட்டில் தனியாகப் பட்டம் ஏற்றிக்கொண்டிருந்தார். பட்டம் ஓரளவுக்கு ஏறத்தொடங்கி விட்டது.அந்த நேரம் பார்த்து அவரது ‘சாரம்’ இடுப்பிலிருந்து கழரத்தொடங்கியது. பட்டமா..? சாரமா...? எது முக்கியம்.?. பட்டத்தை ஏற்றி மரத்தில் கட்டிவிட்டு ஓடிவந்து சாரத்தை எடுத்துக் கட்டிக்கொண்டார்.

அவரின் வீட்டு வேலிக்குவெளியில் நின்று எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த சிறுவர் நாங்கள் கை தட்டி மகிழ்ந்தோம்.அவரும்எமக்கு ஒரு “வரலாறு” ஆகிவிட்டார்.



### நினைவு-14

------------------

எனது ஊர் பெரியண்ணாமார்1970களில் ஏற்றிய பட்டம் வைரவர் கோயில் அரசமரத்தில் தொங்கிவிட்டது.மூன்று பெரியண்ணாமார் வைரவர் கோயிலைச் சுத்திக் கும்பிட்டு கற்பூரம் கொழுத்தி கும்பிட்ட பின்னர், வைரவர் கோயில் அரசமரத்தில் ஏறினார்கள்.அங்கிருந்து பட்டத்தை கீழேயுள்ள சிறியமரங்களின் மீது விழுத்தினார்கள். வேறு அண்ணாமார் சிறிய மரங்களில் ஏறி பட்டத்தை நிலத்துக்கு இறக்கினர்.

அன்றையதினம் பெரியண்ணாமார் வைரவரின் அரசமரத்தில் ஏறியது பற்றிய வாதப் பிரதிவாதங்களில் எமது ஊரார் தமது நேரத்தைப் போக்கினர்.பெரியண்ணாமாருக்கு வைரவர் கொடிய தண்டனை கொடுப்பார் என்றும் பேசிக்கொண்டனர்

மறுநாள் காலை பெரியண்ணாமாரின் குடும்பத்தினர் வைரவர் கோயிலில் பொங்கலிட்டனர்.. சர்க்கரைப்பொங்கலும், பால்பொங்கலும் எமக்குக் கிடைத்தன. ஊதி ஊதிச் சாப்பிட்டோம்.வேறு ஏதும் நடக்கவில்லை.

எங்கடை வைரவரை சரியாகக் கவனித்து அரசமரத்தில் ஏறினோம்.அவர் எங்களுக்கு ஏதும் செய்யமாட்டார் என்று பெரியண்ணாமார் நம்பிக்கையுடன் கூறினர் .

பெரியண்ணாமார் இன்றும் குழந்தை குட்டிகளுடன் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

### நினைவு-15

மார்கழி மாதத்தில் பட்டங்களை ஏற்றி வீட்டில் பகலில் கட்டி வைப்பதைவிட ,இரவுப்பொழுதிலும் ஏறிநிற்க விடுவது புகழ்ச்சிக்குரிய விடயமாக இருந்தது.

இராக்கொடியானது அடையாளம் காணப்பட வேண்டுமெனின் நல்ல விண் பூட்டி நார் கதற வேண்டும். அந்தக்கதறலில் எங்கள் பட்டத்தை அடையாளம் கண்டு மகிழ்வோம்.

இராக்கொடியாக விடும் போது, அது காற்றில்லாமல் படுத்தால், காற்றுக்கூடி குத்தினால் ,எங்கு விழும் என்று முதலிலேயே கவனித்து வைத்திருப்போம்.பொதுவாக இராக்கொடியாக படலம், நட்சத்திரக்கொடி, மணிக்கூட்டுக்கொடி....போன்றவையே விடப்படும்.

இராக்கொடியின் கதாநாயகன் நான் என்ற தகுதி எனக்குக் கிடைக்கவில்லை என்பதில் சிறிது வருத்தம்தான்.

## கலைமுகம் - சஞ்சிகை மதிப்பீடு




யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் கலை இலக்கிய சமூக இதழான “கலைமுகம்” சஞ்சிகையின் 59 ஆவது இதழ் அண்மையில் பிரசவமாகியுள்ளது. வழமை போலவே காத்திரமான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள்,நூல் மதிப்பீடுகள், பதிவுகள் என்பவற்றைத் தாங்கி , நேர்த்தியான தளக்கோலத்தோடு இந்த முறையும் கலைமுகம் வெளியாகியிருக்கிறது.

இன்றைய இலக்கி யச் சூழலில் ஒரு கனதியான இதழை தொடர்ச்சியாகக் கொண்டு வருவதென்பது மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கும் வேலை தான். ஆனால் அத்தகைய சிரமங்களை எல்லாம் தாங்கிக் கொண்டு கலைமுகம் 59 ஆவது இதழைக் கடந்து 60ஆவது இதழைத் தொட இருப்பது ஒரு ஆச்சரியமான ஆனந்தம் தான். ஏனோ தானோ என்று, பெயருக்கும், புகழுக்கும் மட்டுமே சஞ்சிகைகள் வெளிவரும் எமது சூழலில் உண்மையான இலக்கியத் தாகத்தோடும் , தீவிரமான சிந்தனைகளின் தேடலோடும் கலைமுகத்தின் ஒவ்வொரு இதழையும் கொண்டு வரும் ஆசிரியர் குழாம் பாராட்டுக்குரியவர்கள்.

# வல்லரசுக் கனவில் ஜப்பான்

- வேல்.தர்மா



ஜப்பான் தனது அமைதிவாதக் (pacifism) கொள்கையைக் கைவிட்டு ஒரு போர் புரியக் கூடிய நாடாக் மாறுவதற்காக தனது அரசமைப்பு யாப்பைத் திருத்துமா என்ற கேள்வி ஐ.எஸ் எனப்படும் இஸ்லாமிய அரசு அமைப்பினர் இரு ஜப்பானியர்களைக் கொலை புரிந்த பின்னர் மீளத் தலையெடுத் துள்ளது. 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி ஜப்பானிய நாடாளு மன்றத்தில் ஓர் உணர்ச்சி பூர்வமான உரையை ஆற்றிய ஜப்பானியத் தல்லமை அமைச்சர் ஷின்ஜோ அபே ஜப்பானிய மக்களே நம்பிக்கை கொள்ளுங்கள் எனச் சொன்னதுடன் எமது அரசியலமைப்பு யாப்பைத் திருத்துவதற்கான விவாதத்தை ஆழமாகச் செய்ய வேண்டிய நேரம் இதுவல்லவா? என்ற கேள்வியையும் எழுப்பினார். எதிர்காலத்தைக் கருத்திக் கொண்டு மிகப்பெரிய சீர்திருத்தத்தை ஜப்பான் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அபே எடுத்துரைத்தார்.

### ஐ.எஸ். கொடுத்த அவல்

ஈராக்கில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் இரு ஜப்பானியர்களைக் கொன்றதற்குப் பின்னர், ஜப்பானை ஒரு போர் செய்யக் கூடிய நாடாக்க வேண்டும் என்ற கொள்கையுடைய தலைமை அமைச்சர் ஷின்ஜோ அபேயின் செல்வாக்கு உயர்ந்துள்ளது. சீனப் பாதுகாப்புத் துறை நிபுணர் ஷி யொங்மிங் பணயக் கைதிகள் கொல்லப்பட்ட விவகாரத்தை வைத்து தலைமை அமைச்சர் ஷின்ஜோ அபே தனது போர் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றப் பார்க்கின்றார் எனக் குற்றம் சாட்டியுள்ளார். வலதுசாரி அரசியல்வாதியான ஜப்பானியத் தலைமை அமைச்சர் ஷின்ஜோ அபே பதவிக்கு வந்த நாளில் இருந்தே ஜப்பானை ஒரு போர்புரியக் கூடிய நாடாக மாற்றுவதற்குத் தடையாக இருக்கும் ஜப்பானிய அரசமைப்பு யாப்பின் ஒன்பதாவது பிரிவை மாற்ற வேண்டும் எனக் கடும் பரப்புரை செய்து வருகின்றார்.

இந்தத் திருத்தத்தைச் செய்வதற்கு ஜப்பானிய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மூன்றின் இரண்டு பங்கு ஆதரவு வேண்டும் என்பதுடன் ஜப்பானிய மக்களிடையேயான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் சாதாரண பெரும்பான்மையுடனான ஆதரவையும் பெற வேண்டும். உலக அமைதிக்கும் அபிவிருத்திக்கும் ஜப்பான் தனது நட்பு நாடுகளுடன் இணைந்து போர் புரியக் கூடிய வகையில் அதன் அரசமைப்பு மாற்றப்பட வேண்டும் என ஜப்பானியத் தலைமை அமைச்சர் ஷின்ஜோ அபேயும் அவரது ஆதரவாளர்களும் பெரும்பரப்புரை செய்து வருகின்றனர். அதாவது ஜப்பானும் அமெரிக்கப்படைகளுடன் இணைந்து போர் புரிய வேண்டும் என்பது அபேயின் கொள்கையாகும். ஜப்பான் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளல் அவசியம் என அபே கருதுகின்றார். அபே அரசியலில் ஈடுபடத் தொடங்கிய காலத்தில் இருந்தே ஜப்பானிய அரசமைப்பு யாப்பைத் திருத்த வேண்டும் என்ற கொள்கையு டையவர்.

உலக வரலாற்றிலேயே முதல் முதலாக அணுகுண்டால் தாக்கப்பட்ட நாடான ஜப்பான் ஐக்கிய அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தின்படி 1947 ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி நிறைவேற்றிய அரசமைப்பு யாப்பின்படி ஜப்பான் வேறு நாடுகளுடனான பிணக்கைப் போர் மூலம் தீர்க்க முடியாது. தனது நாட்டுக் குடிமக்களைப் பாதுகாக்க வேறு நாடுகளுக்குப் படை அனுப்ப முடியாது. தன்னைப் பாதுகாக்கும் படையை மட்டுமே வைத்திருக்கலாம். சுருங்கச் சொன்னால் ஜப்பானியப் படையினர் மீது வேறு யாராவது சுட்டால் மட்டுமே ஜப்பானியப் படைகள் திருப்பிச் சுடலாம். இரண்டாம் உலகப்போரில் தோல்வியடைந்த ஜேர்மனியின் அரசியல்யாப்பில் இல்லாத ஒன்று ஏன் ஜப்பானிய யாப்பில் இருக்க வேண்டும் என்பது சில ஜப்பானியர்கள் எழுப்பும் கேள்வியாகும். ஜப்பானின் படைத்துறைச் செலவு ஆண்டுக்கு 49 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கின்றது. அது சீனாவின் 188 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஈடாக மாட்டாது.

அதனால் ஆண்டுக்கு 640 பில்லியன் டொலர்கள் செலவு செய்யும் அமெரிக்காவில் ஜப்பான் தங்கியிருக்க வேண்டிய நிலை. அத்துடன் 23 படையினருக்கு ஜப்பானின் 58,000 படையினர் ஈடாகவும் முடியாது. உலகப் படைவலுப்பட்டியலில் சீனா மூன்றாம் இடத்திலும் ஜப்பான் பத்தாம் இடத்திலும் இருக்கின்றன. 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க அதிபர் பராக் ஒபமா சீனா ஜாப்பானுக்குச் சொந்தமான தீவுகளை அபகரிக்க முயன்றால் ஜப்பானைப் பாதுகாக்கும் அமெரிக்க - ஜப்பானிய பாதுகாப்பு உடன்படிக்கையின்படி அமெரிக்கா ஜப்பானைப் பாதுகாக்கும் என உறுதியளித்தார். அமெரிக்கா கைவிட்டால் என்ன செய்வது என்ற கேள்வியும் ஜப்பானிய மக்கள் மத்தியில் உண்டு.

### வேண்டாம் சீனப் பூச்சாண்டி

சீனா ஒன்றும் சிறந்த படைவலுவைக் கொண்ட ஒரு நாடல்ல. சீனாவின் படைக் கலன்களில் பெரும்பான்மையானவை பழுதடையும் நிலையில் உள்ளன. சீனாவிடம் இருக்கும் 7,580 டாங்கிகளில் 450 மட்டுமே நவீனமானவை. சீனாவிடம் இருக்கும் 1,321 போர் விமானங்களில் 502 மட்டுமே போர்க்களத்தில் பாவிக்கக் கூடியவை. எஞ்சியவை சோவியத் ஒன்றியத்திடம் வாங்கிய பழைய விமானங்களாகும். சோவியத் ஒன்றியத்தின் கப்பலை வாங்கித் திருத்தி சீனா உருவாக்கிய லியோனிங் என்னும் விமானம் தாங்கிக் கப்பல் நவீன தொலை தூரப் போர் விமானங்க்ளைத் தாங்கிச் செல்லக் கூடியது அல்ல. அவை சீனக் கரையேரப் பாதுகாப்புக்கு மட்டுமே போதுமானவை. அமெரிக்காவின் Fd35 போர் விமானங்கள் லியோனிங் விமானம் தாங்கிக் கப்பல் மீது 290 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தே லியோனிங்கால் இனம் காண முடியாத வரையில் பறந்து கொண்டே ஏவுகணைகளால் தாக்குதல் நடத்த முடியும். இது போலவே சீனாவின் Jd15 போர் விமானங்களால் இனம் காண முன்னரே அமெரிக்காவின் Fd35 போர் விமானங்களால் Jd15ஐத் தாக்கி அழிக்க முடியும். ஜப்பான் தனது தீவுகளை அமெரிக்காவிடம் இருந்து வாங்கிய Standard Missiled3, Patriot Advanced Capabilityd3 ஆகிய ஏவுகணை எதிர்ப்பு முறைமைகள் மூலம் பாதுகாக்கின்றது.

### ஜப்பான் வாங்கிக் குவிக்கும் படைக்கலன்கள்

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4.98 ரில்லியன் யென்கள் (41பில்லியன் டொலர்கள்) பெறுமதியான படைக்கலன்களை வாங்குவதாக முடிவு செய்துள்ளது. அதில் முப்பது AAVd7 Amphibious vehicle என்னும் நிலத்திலும் நீரிலும் பயணிக்கக் கூடிய ஊர்திகள், இருபது Pd1 கண்காணிப்புக் கடற்கலன்கள், ஆறு Fd35A போர் விமானங்கள், ஐந்து Bell Boing Vd22 போர் விமானங்கள், மூன்று Global Hawks ஆளில்லாப் போர் விமானங்கள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை இடைமறிக்கும் முறைமை போன்றவையும் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன.

### சீனாவுக்கு ஆப்பு வைக்கும் கூட்டு

ஜப்பானும் அமெரிக்காவும் இணைந்து SMd3dBlockdIIA என்னும் எறியங்களைக் (porjectiles) கொண்ட ஒரு ஏவுகணை எதிர்ப்பு முறைமையை உருவாக்குகின்றன. 21 அங்குல பரிமாணமுள்ள இந்த எறியங்கள் மற்ற எறியங்களுடன் ஒப்பிடுகையில் பெரியவையும் வேகமாகப் பாயக் கூடியவையுமாகும். அத்துடன் தாழவரும் ஏவுகணைகளையும் அழிக்கக் கூடியவை. ஜப்பான் ஏற்கனவே நான்கு உளவுச் செய்மதிகளை விண்வெளியில் விட்டுள்ளது. இனி அமெரிக்காவுடன் இணைந்து மேம்படுத்தப்பட்ட GPS எனச் சுருக்கமாக அழைக்கபப்டும் Global Positioning System உருவாக்கவிருக்கின்றது. இதன் மூலம் வானிலும் கடலிலும் நிலத்திலும் நடப்பவற்றைத் தடயமறிய முடியும். மேலும் இரு தகவற்பரிமாற்றச் செய்மதிகளையும் ஜப்பான் விண்வெளியில் சேவையில் ஈடுபடுத்தவிருக்கின்றது.

சீனா என்னதான் தனது படைவலுவைப் பெரிதாக்கினாலும் அதன் படைகளுக்கு போர் முனை அனுபவம் என்பது கிடையாது எனச் சொல்லலாம். இதுவே சீனாவின் பலவீனமாகும். நேட்டோப் படைகள் ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும், சிரியாவிலும் தமது நேரடிப் போர் முனை அனுபவங்களைப் பெற்றுள்ளன. ஜப்பான் மற்ற நாடுகளுடன் இணைந்து பாதுகாப்புப் போர் புரியலாம் எனத் தனது அரசியலமைப்பு யாப்பை மாற்றி உலகின் பல பாகங்களுக்கும் தனது படையினரை அனுப்பி நேரடிப் போர் முனை அனுபவங்களைப் பெற்றால் ஜப்பானியப் படையினரை எதிர் கொள்வது சீனாவுக்கு முடியாத காரியம் ஆகிவிடும். பன்னாட்டு அரங்கில் செய்யும் இந்தப் போர் முனைச் செயற்பாட்டை சமாதானத்துக்கான பங்களிப்பின் முனைப்பு (proactive contribution to peace) என்னும் பெயரிட்டுக் காட்ட ஜப்பான் விரும்புகிறது. ஜப்பானை வெறுப்பவர்கள் சீனர்கள் மட்டுமல்ல. கொரியர்களும் ஜப்பானை அதிகம் வெறுக்கின்றனர். ஜப்பானிய ஆதிக்கத்தின் கீழ் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை சீனர்களைப் போலவே கொரியர்களும் மறக்கவில்லை. வட கொரியா தனது அழிவு விளைவிக்கக் கூடிய படைக்கலன்களை வளர்த்து வருகின்றது. தென் கொரியா பொருளாதார ரீதியில் மட்டுமல்ல படைத்துறை ரீதியிலும் ஜப்பானுக்குச் சவாலாக அமையக் கூடிய ஒரு நாடு.

### ஜப்பானின் வல்லரசுக் கனவு

இந்தியா, ஜேர்மனி, தென் ஆபிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளைப் போல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தற்போது உள்ள வல்லரசு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது தாமும் ஒரு வல்லரசாக வேண்டும் என ஜப்பான் நினைக்கின்றது. ஜப்பானின் மக்கள் தொகை, பொருளாதார வலு, படை வலு ஆகியவை மற்ற நாடுகளுக்கு சளைத்தவை அல்ல.

அமெரிக்காவின் ஆசியச் சுழற்சி மையத் திட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டு அமெரிக்காவின் படைவலுவில் 60 வீதம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் நிலை கொள்ளவிருக்கின்றது. அத்துடன் ஆசிய பசுபிக் நாடுகளை இணைத்து அமெரிக்கா அமைக்கும் பொருளாதாரக் கூட்டமைப்பில் ஜப்பானும் இணையவிருக்கின்றது. அமெரிக்காவுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் ஜப்பானும் தனது படைவலுவைப் பெருக்க வேண்டும். அப்போதுதான் அமெரிக்காவின் பங்காளியாக ஜப்பான் செயற்படமுடியும் அல்லாவிடில் அமெரிக்காவின் பணியாளி நிலைதான் ஜப்பானுக்கு ஏற்படும். அத்துடன் தனது பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப ஜப்பானின் படை வலுவும் இருக்க வேண்டும். தொடர்ந்தும் அமெரிக்காவில் அது தங்கியிருக்க முடியாது.

கா ஸ்ட்ரோ எதையும் மறைக்கவில்லை. பள்ளியில் நடந்த அனைத்துச் சம்பவங்களையும் தன் அம்மாவிடம் சொன்ன்ான். இத்தனை முரட்டுத்தனமாக நடந்துகொண்ட தன் மகன் மீது லினாவுக்குக் கோபம் வந்தாலும் நடந்ததை மறைக்காமல் தன்னிடம் சொல்லிவிட்டதை எண்ணிப் பரிதாபம் கொண்டார். 'ஆசிரியர் என்பவர் கடவுள் மாதிரி. அவர் திட்டினாலும், உதைத்தாலும் எதிர்த்துப் பேசக்கூடாது. அப்படிப் பேசினால் கடவுளுக்கே கோபம் வந்துவிடும். நீ திட்டியதால்தான் கடவுள் உன்னை ஆணியால் குத்திவிட்டார். இனி அப்படிச் செய்யாதே' என்று அறிவுரை கூறினார். காஸ்ரோ மெய்யாகவே பயந்துவிட்டான். ஆசிரியரை அவ்வளவு கடுமையாகத் திட்டியிருக்கக் கூடாது என்று வருந்தினான். கடவுள் மீது அவனுக்குப் பயம் உண்டானது. கடவுளின் ஆற்றலைக் கண்டு வியந்துபோனான். தவறு செய்பவர்களை உடனுக்குடனே கண்டுபிடித்து, உடனுக்குடனே ஆணியால் குத்தி தண்டனை கொடுத்துவிட்டாரே, உண்மையிலேயே அவரது ஆற்றல் மகத்தானதுதான் என்று சொல்லிக்கொண்டான்.

கஸ்ட்ரோவை அடிக்காத, அவனை மிகவும் கவர்ந்த ஆசிரியர் ஒருவரும் அதே பள்ளியில் இருந்தார். பெரும்பாலும் வெள்ளை நிறத்தவரே ஆசிரியர்களாகப் பணிபுரியும் அந்தப்பள்ளியில் ஒரே கறுப்பினப் பெண் அவர்தான். சற்றுப் பருமனான உடல்வாகு கொண்ட இந்த ஆசிரியரை காஸ்ட்ரோவைத் தவிர அனைவரும் கிண்டல் செய்தனர். கண்டிப்பும் கருணையும் சமவிகி தத்தில் இவரிடம் இருந்தது. காஸ்ட்ரோ மீது தனிப்பட்ட பாசமும் அக்கறையும் கொண்டிருந்தார். 'நீ நன்றாகப் படிக்க வேண்டும். பெரிய ஆளாக வரவேண்டும்' என்று இவர் அடிக்கடி சொல்வது வழக்கம். க்யூபா சுதந்திரப் போராட்ட முன்னோடி மாத்தியின் தேச பக்திப்பாடல்களை முதல் முதலாக காஸ்ட்ரோவுக்குக் கற்றுக் கொடுத்தவர் இவர் தான். காஸ்ட்ரோ, மார்த்தியின் புரட்சிப் பாடல்களையும் பாடுவான். தேவாலய திருச்சபைப் பாடல்களையும் பாடுவான். இரண்டு




# சிம்ம சொப்பனம்

பாடல்களுமே அவனுக்குப் பிடிக்கும். இரண்டு பாடல்களுக்குமே அவ னுக்குப் பொருள் தெரியாது.

படிப்பைத் தவிர பிற் விஷயங்களில் அதிக ஆர்வம் காட்டுவான் காஸ்ட்ரோ. நிறைய ஊர் சுற்றுவான். ஆங்கிலத்தில் படு மோசம். குறைவான மதிப்பெண்களே கிடைக்கும். ஆனால், வீட்டில் திட்டுவார்கள் என்பதால் ஆசிரியர்களிடம் மதிப்பெண் சீட்டு தொலைந்துவிட்டதாகக் கூறி இன்னொன்றையும் வாங்கிக்கொள்வான். அந்தப் புதிய சீட்டில் தனக்கு விருப்பப்பட்ட மதிப்பெண்களைத் திருத்தி எழுதி வீட்டில் கொண்டு போய்க் காட்டுவான். 'ஆஹா!, என் பையன் எவ்வளவு நன்றாகப் படிக்கிறான்' என்று அகமகிழ்ந்து பாராட்டுவார் அவன் தந்தை. இன்னொரு சீட்டில் தன் அப்பா மாதிரியே கையெழுத்து போட்டு ஆசிரியரிடம் பவ்யமாகக் கொண்டு போய்க் கொடுத்து விடுவான்.

நிறையக் குறும்புகள், ஆசிரியர் பேச்சுக்குக் கட்டுப்படுவது கிடையாது. பொறுத்துப் பார்த்த ஆசிரியர்கள், ஒரு கட்டத்தில் பொறுக்கமாட்டாமல் காஸ்ட்ரோவைப் பற்றி ஒரு குற்றச்சாட்டைத் தயார் செய்து அவனுடைய வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். சரியாகப் படிக்கவில்லை. முறைப்படி நடந்துகொள்ளவில்லை. கட்டுப்பாடுகளை மதிப்பதில்லை. ஆசிரியர் களின் சொல்பேச்சு கேட்ப தில்லை. முரட்டுத்தனம் அதிகம். ஒழுக்கம் குறைவு. இப்படியாக நீண்டது அந்தக் குற்றச்சாட்டு. அதைப் படித்துப் பார்த்த ஏஞ்சல் மிகவும் வருந்தினார். இனி காஸ்ட்ரோவை பள்ளிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை எனும் முடிவுக்கு வந்தார். ஆனால் காஸ்ட்ரோ அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. என்ன தான் புதிய இடம் பிடிக்கவில்லை என்றாலும் அதற்காகத் தன்னுடைய படிப்பைத் துண்டித்துக்கொள்ள அவன் விரும்பவில்லை. தன் தந்தையிடம் பேசினான்.

'அப்பா, நான் திரும்பவும் பள்ளிக்குப் போகவேண்டும்.'

'அது நடக்காது' என்ற ஏஞ்சல். ' நீ யாருக்கும் அடங்க மறுக்கிறாயாம். உன்னால் எலோருக்கும் பிரச்சினையாம். திரும்பவும் உன்னைப் பள்ளிக்கு அனுப் பக் கூடாது என்று சொல்லி யிருக் கிறார்கள்' என்றார்.

'ஓ! அப்படியா' என்று தலையை ஆட்டிக் கேட்டு விட்டு நேராகத் தன் அம்மாவிடம் சென்றான் காஸ்ட்ரோ. 'அம்மா உங்களிடம் பேச வேண்டும்'

'என்ன?'

'நீங்களும் அப்பாவும் என்னைப் பள்ளிக்கு அனுப்புகிறீர்கள். இல்லையென்றால் இந்த வீட்டைக் கொளுத்தி விடுவேன்!'

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 661

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | ■ |
| 11 | | | | ■ | 12 | | 13 |
| | ■ | | ■ | 14 | | ■ | |
| 15 | | | 16 | | ■ | 17 | |
| | ■ | 18 | | | 19 | | ■ |
| 20 | | | ■ | 21 | | | |

**மேலிருந்து கீழ்**

1 - இது நல்ல குணம் என்பர்.
2 - வாய்க்கால்.
3- பன்னிரண்டாம் திதி.
4- அழகு.
5- இது அவசியம் எல்லோருக்கும்.
8- படிப்பு.
9 - ஆட்படுதல்.
10 - தகரப்படலம்.
13-பாகுநிலைப் பூச்சு மருந்து.
14- அரைவாசியின் அரைவாசி.
16- சிரசு.
17- கூடாததல்ல.
19 - மறைவில் தீட்டப்படுவது.

**இடமிருந்து வலம்**

1- தமிழர்களுக்கு இது இன்னமும் கிட்டவில்லை.
6- நிலைக்குத்துக்கு செங்குத்தானது.
7- தங்கித் தொழில் செய்யும் இடம்.
8- வர்த்தக நிலையம்.
9- சகாயம் செய்தல்.
11 - சில நாடுகளில் நடப்பது.
12- சுருங்கக் கூறி கிறங்க வைப்பது.
14- வனம்.
15- இரந்து சேகரித்தல்.
17 - எங்களது.
18 - வீட்டின் பிரதான வாயில்.
20 - காதல் .
21 - சேதங்களின் எச்சம்.

அனுப்புபவர் பெயர்:----------------------------------
விலாசம்:----------------------------------------------
------------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடர் ஒளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

திருமதி.வத்சலா துரைசிங்கம், ஆழ்வான் கிணற்றடி, பன்னாலை, தெல்லிப்பளை.

செல்வி.தி.பாரதி. கந்தசுவாமி கோயிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

செல்வி.ஸ்ரீ துஷாரா, ஆண்டு 10, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்

ஜ.விஜயபாலன், இல 10, மருதடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.

ஞா.துரை, இல 85/4 கார்மல் வீதி, குருநகர்,யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 661

■ சொற்சிலம்பம் போட்டி 661ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, மார்ச் 18 மற்றும் மார்ச் 25 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 658இல் பரிசு பெற்றோர்

1 கு.அர்ச்சனா, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

2 ச.அஞ்ரன், புதுக்குளம், கனகராயன் குளம் தெற்கு, கனகராயன் குளம்.

3 ரூபினி சிவரூபன், இலட்சுமணன் தோட்டம், தும்பளை, பருத்தித்துறை.

### சொற்சிலம்பப் போட்டி 659இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.பஞ்சமாபாதகம்.
2.குமர்.
3.வழுக்கை.
4.சடம்.
5.கார்.
7.களகு.
9.மலையகம்.
10.கலாநிதி.
13.பெரியன்னை.
17.அன்று.
18.திசை.
20.பசி.
22.வசி.

**இடமிருந்து வலம்**

1.பக்குவம்.
4.சகா.
6.மழு.
7.சுடர்.
8.சமர்க்களம்.
11.மாலை.
12.கைலாகு.
14.பாயம்.
15.சரி.
16.தக.
17.அதிதி.
19.கம்பன்.
21.சைவன்.
23.சிறுமி.
24.சினை.

**"என்ர தண்ணியத் தவிரவேற ஒண்டையும் குடிக்கமாட்டன்"**

**அழுத்தம் திருத்தமாக உலகத்துக்கு அறிவித்தாள் அந்தக் கிழவி. ஒரே ஒரு முறை மட்டுமே அவளது கண்களை நேரேபார்த்தேன் - ஆழமான இரண்டு கிணறுகளைப் போலிருந்த அந்தக் கண்களில் நீர் நிரம்பியிருந்தது.**

தனிப்பட்ட பயணமாக ஏழாலை வடக்கு மற்றும் மல்லாகத்திலும் உள்ள கழிவோயிலால் பாதிக்கப்பட்ட கிணறுகளைப் பார்வையிடவும் மக்களைச் சந்தித்து உரையாடவும், எனது இரண்டு நண்பர்களுடன் பயணித்தேன். ஒரு நண்பனின்நண்பனை மட்டுமே எங்களுக்கு தெரிந்திருந்தது. அவருடைய கிணற்றைப் பார்த்து விட்டு அவருடன்உரையாடினோம். தனதுமோட்டர் சைக்கிளையும் ஒருசைக்கிளையும் எங்களுடைய பயணத்தை தொடர்வதற்காக தந்தார். அவர் சொன்னவற்றிலிருந்து இப்போதைக்கு உங்களிடம் ஒன்றை மட்டும் பகிர்ந்துகொள்கிறேன் " . யோசிச்சுப் பார் மச்சான். 3 நாளைக்கு இரு நூற்றிஐம்பது ரூவா செலவாகுது நாங்கள் தண்ணி வேண்டிக் குடிக்க, சின்னக் குழந்தைப் பிள்ளையை குளிக்க வார்க்கிறதுக்கு ஒரு அண்ணை மினரல் வோட்டர் தால் [illegible]ாவிக்கிறார்".

அடுத்ததாக ஏழாலை [illegible]வடக்குக்கு சென்றோம். இலக்கமிட [illegible]ட்டு அங்கங்கே சில நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டிருந்தன. அருகே சிவப்பு நிற வர்ணத்தால் "நீரைவீணாக்காதீர்" என்று எழுதப்பட்டிருந்தது. ஒரு கடையில் சென்று 'வோட்டர்போட்டல்' ஒன்று தாங்கோ என்றவாறு உரையாடலைத் தொடங்கினோம். தண்ணீர் தாங்கிகளில் ஒழுங்காக வருகின்றதா? குளிப்பதற்கு என்ன செய்கிறீர்கள்? மினரல் வோட்டர் சனம் வாங்குதா என்று கேட்டுக் கொண்டிருந்த போது அம்பும் வில்லும் சகிதமாக ஒரு வேடுவர் கூட்டம் கடைக்கு வந்தது. ஆதி என்ற நண்பன் அவர்களுடன் உரையாடத் தொடங்கினான் .

'என்ன தம்பி மார் நாடகமோ?'

'ஓம் அண்ணை'

'என்ன நாடகம் ?'

'கண்ணப்ப நாயனார் கதை நாங்கள் வேடுவரா நடிக்கிறம்.'

மற்ற நண்பனான யதார்த்தன் அம்புகளை பரிசோதிக்க ஆரம்பித்தான் கடை அக்காவுடன் உரையாடிவிட்டு வந்தோம். டேய் ஓடிப் போய் அந்த பெடியள பிடிசுக்கதை எண்டான் ஆதி. நான் புறப்படுவதற்கு முன் ஏற்கனவே கொஞ்சத் தூரம் அவர்கள் சென்று விட்டார்கள். ஒரு பள்ளிக்கூடத்தடியில இருந்த தாங்கியில் நீர்குடித்தனர். ஒருவன் துப்பி விட்டு, இது குளோரின் தண்ணியா



என்று குடிக்காமல்வந்தான், ஒருவன் மட்டுமே அவர்களில் நீரை குடித்தான். நான் கேட்டேன். ஏன் தம்பி அப்ப மினரல் வோட்டர் குடிப்பியளோ, அதுவும் கைச்சல் தானே? இல்லை அண்ணை அது நல்லா இருக்கும் என்று சொல்லி விட்டு மகா சிவாரத்திரியான அன்று, வேடுவர் குலமாக, இயற்கையை தெய்வமாக வணங்கிய ஒரு காலத்துக்கு திரும்பிக் கொண்டிருந்தனர் அந்தச் சிறுவர்கள் .

இவர்கள் இரண்டு பேரையும் காணவில்லை. திரும்பி வந்தால் ஒரு முச்சந்தியில் சில இளைஞர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார்கள். பின் பக்கத்து வீடொன்றில் நுழைந்து கிணற்றைப் பார்த்தோம், தொட்டியில் தண்ணீரை நிறைத்திருந்தார்கள் எண்ணை கைகளில் மிதந்தது, அந்த நீரில் தான் குளிப்பதாகவும் சமைப்பதாகவும் அந்த வீட்டின் அம்மா சொன்னார், மிருகங்களுக்கு இந்த நீரைத் தான் தம்பி கொடுக்கிறோம், அது என்னமாதிரி, நல்லமோ கூடாதோ.

என்னம்மா, உங்களுக்கு நல்ல தண்ணி, ஆடு மாடுகளுக்கு எண்ணைத் தண்ணியோ?

என்ன தம்பி செய்யிறது, சமைக்கிறதுக்கே தண்ணியில்லை.

என்னிடம் பதில்களிருக்கவில்லை.

அம்மா, போராட்டங்கள் எல்லாம் நடக்குது போற நீங்களே ?

எங்கட வீட்ட ஒயில் வாரத்துக்கு முன்னமே, எண்ட பெடியன் போனவன், இப்ப இப்பிடியாப் போச்சு.

சரியம்மா.

எல்லாத்துக்கும் ஒரு தீர்வு வரும், நாங்கள் திருப்பியும் வருவம் என்று சொல்லி விட்டு வந்தேன். அவர்களிருவரும், இளைஞர்களிடமே பேசிக்கொண்டிருந்தனர், இதால போங்க அண்ணை இந்த ரோட்டு முழுக்கலும் எண்ணைதான் என்றார் ஒருவர் .

இந்த உலகத்தின் மனிதர்கள் எப்படிப் பட்டவர்கள்! வீடுகளும் அப்படித் தான், ஒருகதவைத் திறக்க, மேலும் மேலும் கதவுகளை அது திறந்து கொண்டே செல்கிறது.

இப்பொழுது ஒரு பாதி இடிந்த கதவற்ற வீடு. ஒரு வயதான ஜோடி, பேரன் பேத்தியோடு நின்றார்கள். கதைத்தோம், மருமகனுக்கு சமைச்சுக் குடுத்தன் தம்பி. அண்டைக்கு வயித்தால அடியாம், எனக்கும் வைத்துக்க குத்துது. அவர் கதைத்துக்கொண்டிருக்கும் போதே அந்த தாத்தா. கிணற்றிலிருந்து நீரை தொட்டிக்குள் விடுவதற்காக குழாயை பொருத்தினார். குபு குபுவென்று நீர் பாய்ந்து தொட்டியை நிரப்பத் தொடங்கி யது. அவருடைய பேர்த்தி ஓடிப் போய் நீரைக் குடித்தாள். தடுக்கப்பாய்ந்தோம் .

என்னம்மா இது

என்ன செய்ய தம்பி. அதுகள் சொல் வழி கேட்காதுகள், தாய் வெளிநாட்டில, ஏதும் நடந்தாலும் நாங்க தானே பொறுப்பு.




தங்கச்சி கவனம், இந்தத் தண்ணி குடிக்க கூடாது. குடிச்சா கடி வரும் என்று சொன்னோம்.

உங்கால இப்பிடியே போங்க சில வீடுகள் இருக்கு என்று சொன்னார்கள். சென்றோம் .

பட்டம் ஏற்றிக் கொண்டிருந்தார்கள் சிறுவர்கள். நடந்து சென்று கொண்டிருந்தோம். ஒரு அழைப்புக் குரல். திரும்பினோம். எங்க தம்பி போறியள் ?

அவர்களுடனும் கதைத்தோம். அவர்களுடைய வீட்டில் மூன்று பேருக்கு உடலில் புண் மற்றும் அலேர்ஜிக் தன்மையான கொப்புளங்கள் வந்திருந்தன. ஆஸ்பத்திரியில் மருந்து தந்ததாகவும் குணமாகவில்லை என்றும் சொன்னார்கள். தனக்கும் உடம்பில் கடியிருப்பதாக ஒரு அம்மா சொன்னார் .

தம்பி இந்தப் பாட்டிய கேளுங்கோ. சொன்னாலும் கேட்காம கிணத்துத் தண்ணியத் தான் குடிக்கிறா?

என்னம்மா,வருத்தம் வருமல்லோ என்றேன்?

என்ன வருத்தம், என்ர கிணத்து தண்ணியக் குடிச்சா ஒண்டும் வராது என்று சொன்னார். கிணற்றைப் பார்த்தோம், எண்ணைப் படிவு சாதாரணமாகவே தெரிந்தது.. என்ன தம்பி ஒயில் நிக்குதே ? என்றாள் கிழவி .

ஓம் என்று சொல்லிய பின் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டேன்.

அங்கு நின்ற சிறுவர்கள் வேறு இடங்களுக்கும் எங்களை அழைத்துச் சென்றார்கள்.

சில வீடுகளுக்கு சென்று உரையாடினோம். எல்லோருக்கும் போதிய விழிப்புணர்வு இல்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. இதன் பயங்கரமும் அவர்களுக்குத் தெரியவில்லை. பின் அவ்வளவு தூரம் வழிகாட்டிகளாக வந்த சிறுவர் படையை வீடுகளில் சேர்ப்பித்தோம். ஆங்கிலத்தில் அவ்வப்போது பேசியதற்காக ஏகமனதாக எல்லோருமே திட்டினார்கள். இனிமேல் ஆங்கிலம் கதைத்தால் பத்து முட்டையை உன்னுடைய வாய்க்குள் அடைவேன் என்ற மிரட்டலுக்கு அடி பணிவதை தவிரவேறு வழியிருக்கவில்லை. சொன்னவள் எனது முழங்கால் அளவு நின்ற சிறுமி.

ஆதியின் தூரத்து சொந்தக் காரர்களையும் தற்செயலாக சந்தித்தோம். நோய்வந்திருப்பவர்களில் சிலர் அவனுடைய உறவினர்கள். எல்லா மக்களையும் உறவாக நேசித்தல்லவா இந்தப் பயணத்தைத் தொடங்கினோம். பிறகு அவனுக்கு மட்டும் உறவினர் என்று பிரித்து எழுதி விட்டேன். 'மன்னித்துக் கொள்ளுங்கள். எல்லோரும் சொந்தங்கள் தான். மனிதர்கள் தான். மறுபடியும் அந்த கிழவி குடும்பத்தை கடந்தே செல்ல வேண்டும். அவர்கள் எங்களை அழைத்தார்கள். அந்த வீட்டில் மின்சாரம் இல்லை. ஆனாலும் அடுப்பில் வைத்து குளோரின் தண்ணீரில் போட்ட டீயை அந்தக் கிழவி வரவைத்துத் தந்தாள். குடித்து விட்டு நேரமாகிறது என்று அவசரப்படுத்தி வெளிக்கிட்டோம் "என்ர தண்ணியத் தவிர வேற ஒண்டையும் குடிக்க மாட்டன் "என்று அழுத்தம் திருத்தமாக உலகத்துக்கு அறிவித்த அந்தக் கிழவியை பிரிந்தோம். ஒரே ஒரு முறை மட்டுமே அவளது கண்களை நேரே பார்த்தேன் - ஆழமான இரண்டு கிணறுகளைப் போலிருந்த அந்தக் கண்களில் நீர் நிரம்பியிருந்தது போல் ஒரு பிரமை தோன்றவே அது கிணறுகளின் மீதான மனுஷி ஒருத்தியின் காதலை எண்ணிய படிநடந்தேன் நான்.

பின், யாழ்ப்பாணம் திரும்பி வரப் புறப்பட்டோம். மாலை கரைந்து விட்டது. இருட்டத்தொடங்கியது. நீங்கள் போங்கள் என்று அவர்களை மோட்டார் சைக்கிளில் அனுப்பிவிட்டு சைக்கிளில் வெளிக்கிட்டேன், வரும் போது எப்படி வந்தோம் என்று தெரியவில்லை. அப்படி இப்படியாக வந்து விட்டோம். அப்போது அவ்வளவாக இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவமும் தெரியவில்லை, அதன் பயங்கரங்களின் ஆழம் தெரியவில்லை. ஆனால் இப்போது திரும்பிய போது தான் தெரிந்தது எவ்வளவுதூரம் வந்துவிட்டிருந்தோம் என்பது.





# நான் நலம் மனோரமா

உங்கள் அன்பும், ஆதரவுடன் நான் நலமாகவே உள்ளேன் எ
மனோரமா கூறினார்.
தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் 1,000-
மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளவர் நடிகை மனோ
என்று செல்லமாக அழைக்கப்பட்ட இவர், சமீப காலமாக உ
பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.
இந்த நிலையில், மனோரமா உடல்நலம் குறித்து சென்னை
பகுதிகளில் வதந்தி பரவியது. இதில், அதிர்ச்சியடைந்த ரசிகர்
பூபதிக்கு போன் செய்து விசாரித்துள்ளனர். அப்போது, மனே
இருப்பதாக கூறிய பின்னரே, இந்த தகவல் வெறும் வதந்தி எ
செய்யப்பட்டது.
இந்த வதந்தி குறித்து நடிகை மனோரமா கூறும்போது, எ
எதுவுமில்லை. உங்கள் அன்பும், ஆதரவுடன் நான் மிகவும் ந
எனது உடல்நலனில் அக்கறை காட்டுவது எனக்கு பெருமை

நான் இறந்து விட்டதாக பரவிய வதந்தியை
கழிப்பாகவே எடுத்துக்கொள்கிறேன். என் ஆ
கொண்டிருக்கும் போதே என் உயிர் பிரிய வே
கடவுளை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.
நடிப்புதான் என் உயிர்மூச்சு. ரசிகர்களின் கை
களை வாழவைக்கும் டானிக் போன்றது. அ
முழுமையாக கிடைத்தது. எனக்கு வழங்கப்
கதாபாத்திரங்களில் நான் நடிக்கவில்லை, வா
காட்டினேன் என ரசிகர்கள் பாராட்டியது என
மகிழ்ச்சியை அளிக்கிறது'' என்றார்.

# சமந்தா ம

சமந்தா உள்ளா
விளம்பரத்தில் ந
என்பதுதான் கட
தலைப்புச் செய்த
பிகினியிலேயே ந
உள்ளாடை விள
நடிக்காமலா இரு
நினைத்தனர் ரசி
ஆனால் சமந்த
அடித்தாரே பல்
னிமா வேறு, வி
வேறு. அந்த மா
உள்ளாடை
விளம்பரத்தில்
நடிக்க மாட்டே
ஊர் வாயை
அடைத்ததோடு
மீடியாக்களையு
த் தள்ளிவிட்டா
இந்தப் பழம் பு

# அஜித் ஜோடி ஸ்ருதி ஹாசன்?

என்னை அறிந்தால் படத்தை தொடர்ந்து அஜித் மீண்டும் வீரம் சிவா இயக்கத்தில் நடிக்க உள்ளார். படத்துக்கு இசை அனிருத் என எதிர்பார்க்கப்படுகிறது. முற்றிலும் ஆக்ஷன் கதைக்களமான இதில் முதல்முதலில் அஜித்துக்கு ஜோடி என கிசுகிசுக்கப்பட்டவர் ஹன்சிகா. ஆனால் ஹன்சிகா அஜித் படத்தில் நான் நடிக்கவில்லை என டுவிட்டரில் கூறியிருந்தார்.

சிவா படம் என்றாலே தமன்னாதான் நாயகி என்ற ரீதியில் தமன்னா பெயரும் அடிபட்டது. ஆனால் அவரும் இல்லாமல் விஜய், சூர்யா, விக்ரம் தொடர்ந்து சமந்தா அஜித்துடன் ஜோடியாகிறார் என்ற ரீதியில் கிசுகிசுக்கப்பட்டது.

தற்போது படத்தில் ஸ்ருதி ஹாசன் நாயகியாக நடிக்கலாம் என கூறப்படுகிறது. சூர்யா, விஷால், விஜய் என டாப் நடிகர்களுடன் ஜோடி சேர்ந்த உலக நாயகனின் மகள் இதில் அஜித்துக்கு ஜோடியாக நடித்தால் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை.

அப்படி ஒருவேளை ஸ்ருதி அஜித் படத்தில் ஒப்பந்தம் ஆனார் என்றார் ஒரேசமயத்தில் தலதளபதி என இருவரின் படத்திலும் நடிப்பார். தெலுங்கிலும் தற்போது மகேஷ் பாபுவுக்கு ஜோடியாக ஸ்ருதி ஹாசன் நடிப்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் சூர்யா-சமந்தா!

அஞ்சான் படத்துக்குப் பிறகு மீண்டும் சூர்யாவுடன் ஜோடி சேருகிறார் சமந்தா. வெங்கட் பிரபு இயக்கத்தில் மாஸ் படம் முடியவிருக்கிறது. இதைத் தொடர்ந்து சூர்யா, பாண்டிராஜ் இயக்கத்தில் ஹைக்கூ படத்தில் சிறப்புத் தோற்றத்தில் வருகிறார்.

விக்ரம் குமார் இயக்கத்தில் 24 என்கிற புதிய படத்தில் சூர்யா நடிக்கவிருக்கிறார். தெலுங்கில் மனம் இயக்கியவர் விக்ரம் குமார். மனம் படத்தில் நாயகியாக நடித்த சமந்தா தான் இந்தப்படத்திலும் சூர்யாவுடன் நடிக்கிறார்.



எண்டெர்டெயின்மெண்ட் நிறுவனமே இந்தப்படத்தினை தயாரிக்கிறது. வைரமுத்து வரிகளில், ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கவிருக்கிறார். சூர்யா - சமந்தா ஜோடி சேர்ந்த அஞ்சான் படம் சொல்லும் அளவுக்கு வெற்றி பெறவில்லை எனினும், இந்தப் படம் கைகொடுக்குமா என்பது இனிதான் தெரியவரும்

# சூர்யாவின் 2டி



## ... நலம் - ...னாரமா!

... நலமாகவே உள்ளேன் என்று நடிகை

...வறு மொழிகளில் 1,000-க்கும்
...த்துள்ளவர் நடிகை மனோரமா. ஆச்சி
...ட இவர், சமீப காலமாக உடல் நலம்
...ருகிறார்.
...்நலம் குறித்து சென்னை உட்பட பல்வேறு
...், அதிர்ச்சியடைந்த ரசிகர்கள், அவரது மகன்
...ள்ளனர். அப்போது, மனோரமா உடல்நலத்துடன்
... தகவல் வெறும் வதந்தி என உறுதி

...னாரமா கூறும்போது, எனக்கு உடல் நலக்குறைவு
...ஆதரவுடன் நான் மிகவும் நலமாகவே இருக்கிறேன்.
...ட்டுவது எனக்கு பெருமையாக உள்ளது.

...டதாக பரவிய வதந்தியை ஒரு திருஷ்டி
...துக்கொள்கிறேன். என் ஆசை, நான் நடித்து
...ாதே என் உயிர் பிரிய வேண்டும் என்று
... கேட்டுக்கொள்கிறேன்.
...யிர்மூச்சு. ரசிகர்களின் கைதட்...ல் எங்
...ம் டானிக் போன்றது. அது என...ந
...த்தது. எனக்கு வழங்கப்பட்ட
... நான் நடிக்கவில்லை, வாழ்ந்து
...சிகர்கள் பாராட்டியது எனக்கு
...க்கிறது"" என்றார்.

## ...மந்தா மறுப்பு

சமந்தா உள்ளாடை விளம்பரத்தில் நடிக்கிறார் என்பதுதான் கடந்த வார தலைப்புச் செய்தி. பிகினியிலேயே நடித்துவிட்டார், உள்ளாடை விளம்பரத்தில் நடிக்காமலா இருப்பார் என்றே நினைத்தனர் ரசிகர்கள்.

ஆனால் சமந்தா அடித்தாரே பல்டி, சினிமா வேறு, விளம்பரம் வேறு. அந்த மாதிரி உள்ளாடை விளம்பரத்தில் நான் நடிக்க மாட்டேன் என்று ஊர் வாயை அடைத்ததோடு, மீடியாக்களையும் விளாசித் தள்ளிவிட்டார். சீச்சீ, இந்தப் பழம் புளிக்கும்!

... ஜோடி
... படம்
...ராஜ்
...
...
...பவர்
...தா

## ...தா!

...ண்ட்
...த்தினை
...த்து
...மான்
...றார். சூர்யா
...த அஞ்சான்
...வுக்கு
... எனினும்,
...டிக்குமா
...ரியவரும்

## ...ன் 2டி



இயக்குநர் சேட்டை கண்ணன், கார்த்திடமும் சந்தானத்திடமும் ஒரு கதை சொல்லியிருந்தார். ஒரு ஊர்ல ரெண்டு ராஜா படத்துக்கு முன்பே அவர்கள் நடிப்பதாக இருந்தது. சேட்டை, ஒரு ஊர்ல ரெண்டு ராஜா படங்களின் தோல்வியால் அவர்கள் நடிக்கத் தயங்க, இப்போது நாயகி அட்டகத்தி தினேஷ், சந்தானத்துக்குப் பதிலாக எதிர்நீச்சல் சதீஷும் நடிக்கின்றனராம். படத்தோட தலைப்பு போடா ஆண்டவனே என் பக்கம். யார் பக்கம்னு படம் வந்தா தெரியும்!



## ஒரு கதை

லிங்கா படத்தில் தன்னைவிட சோனாக்ஷிக்கு முக்கியத்துவம் கொடுத்து விட்டார்கள் என்று பொருமிக் கொண்டிருந்தார் அனுஷ்கா. என்னை அறிந்தால் படத்திலும் ஊறுகாய் அளவுக்கே பயன்படுத்தப்பட்டிருந்தார். இருந்தாலும் படம் அதிரி புதிரி பிரபலமாகியுள்ளதால், அம்மணி சைலன்ட். என்னமா இப்படிப் பண்றீங்களேமா?

சைலன்ட். என்னமா இப்படிப் பண்றீங்களேமா?

## நடிக்க தயக்கம்



# பூனையும் அதன் நிழலும்

முட்டாள் பூனை ஒன்று ஒரு வீட்டில் பெரிய கருவாட்டுத் துண்டைத் திருடியது. அதனை பத்திரமாக கவ்விக் கொண்டு தன் வீட்டுக்குப் புறப்பட்டது. செல்லும் வழியில் சில பூனைக்குட்டிகள் அந்த முட்டாள் பூனையிடம் கருவாட்டுத் துண்டைத் தருமாறு கேட்டன: ஆனால் அந்த முட்டாள் பூனையோ இதை யாருக்கும் தரமாட்டன். இதை முழுவதுமாக நான் மட்டுமே சாப்பிடப் போகிறேன் என்று கூறி விட்டுச் சென்றது.

செல்லும் வழியில் அந்த முட்டாள் பூனை் ஒரு பாலத்தைக் கடக்க வேண்டி ஏற்பட்டது. பூனை பாலத்தைக் கடக்கும் போது கீழே தண்ணீரைப் பார்த்தது. அந்தத் தண்ணீரில் அதன் உருவம் தெரிந்தது.

தண்ணீரில் தெரிந்த அதன் உருவத்திலும் வாயில் கருவாட்டுத் துண்டு இருந்தது. அதைக் கண்ட பூனை " இந்தப் பூனையிடம் ஒரு பெரியகருவாட்டுத் தூண்டு இருந்தது. அதையும் அபகரித்து விட வேண்டும்" என்று நினைத்தது. உடனே அது பலமாக " மியாவ் , மியாவ் எனக் கத்திக் கொண்டே தண்ணீரில் தெரிந்த பூனையின் மீது பாய்ந்தது. அதனால் அதன் வாயில் இருந்த கருவாட்டுத் துண்டும் தண்ணீரில் விழுந்தது. தண்ணீரில் விழுந்தவுடன் தான் இந்த முட்டாள் பூனைக்குப் புரிந்தது இது நிழல் விம்பம் என்று.

பெரிய கருவாட்டுத் துண்டைத் தேடிச் சென்ற பூனை தண்ணீரில் தத்தளித்தது. மிகவும் துன்பத்துடன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று கரையேறியது அந்த முட்டாள் பூனை.

என்வே எந்தவொரு விடயத்திலும் பேராசை கொண்டால் பெரு நஷ்டம் தான் ஏற்படும்.

## வர்ணம் தீட்டுங்கள்







இந்தஇரு படங்களிலும் இரு படங்களிலும் 05 வித்தியாசங்கள் உள்ளன. கண்டு பிடியுங்கள்.

## இல்லவே இல்லாத நாடுகள்

- திரையரங்குகள் இல்லாத நாடு பூட்டான்
- தினசரி பத்திரிகைகள் இல்லாத நாடு காம்பியா
- காகங்கள் இல்லாத நாடு நியூசிலாந்து
- ரயில் இல்லாத நாடு ஆப்கானிஸ்தான்
- பாம்புகள் இல்லாத நாடு அயர்லாந்து
- தனக்கென உத்தியோகபூர்வ தலைநகரம் இல்லாத நாடு நவ்ரு
- தனக்கென தாய்மொழி இல்லாத நாடு சுவிட்சர்லாந்து
- பொதுக்கழிப்பறைகள் இல்லாத நாடு -பெரு
- வாடகைக்கார்கள் இல்லாத நாடு பெர்முடாது.

## நம்பிக்கை

- இறங்குகிற தொழிலில் நம்பி இறங்கு. தொழில் திறமையே உனக்கு வந்து விடும்.
- தண்ணீரில் விழுந்து விட்டால், 'நீந்தத் தெரியும் என்று நம்பு; நீந்தத் தெரிந்து விடும்.
- கடன் வந்து விட்டால், 'கட்ட முடியும் என்று நம்பு; கட்டிவிட முடியும்.
- முடியாது, முடியாது என்பவனும், 'அது இல்லை, இது இல்லை என்று வாதிடும் நாத்திகனும் மரக்கட்டைகள்.
- உண்டு என்பவனுக்கே உள்ளம் வேலை செய்கிறது.
- எதையும் கண்ணால் கண்டால்தான் நம்புவேன், என்கிறவன் முகத்தில் மட்டுமே கண்களைப் பெற்றவன்; அகத்திலே கண்ணில்லாதவன்.
- ஊனக் கண் ஒரு கட்டத்திலே ஒளியிழந்து போகும்; ஞானக்கண் எப்போதும் பிரகாசிக்கும்.
- நம்பிக்கையோடு முயன்றால், சாணத்தில் தங்கம் கிடைக்கும்.
- சந்தேகத்தோடு பார்த்தால், தங்கமும் சாணம் மாதிரித்தான் தெரியும்.
- திருநீறோ, திருமண்ணோ இடும்போது கடனுக்கு இடாமல் நம்பிக்கையில் இடு. அவை இருக்கும் வரை மூளை பிரகாசிக்கும்.
- நம்பியவர் கெட்டாரா? நம்பாதவர் வாழ்ந்தாரா?
- ஒரு தாயின் தெய்வ நம்பிக்கையால், புத்தியில்லாது இருந்த நானும் ஓரளவு புத்தியுள்ளவனானேன்.
- என்னுடைய தெய்வ நம்பிக்கையால் நான் எதிர்பாராத அளவுக்குச் சூழ்நிலைகள் வாய்த்துள்ளன.

## பள்ளி சிறுவர்கள் நாம்

நித்தம் நித்தம் குளிக்கணும்
நினைவில் பாடம் பதிக்கணும்
சுத்தமாக உடுத்தணும்
சுறுசுறுப்பாக இருக்கணும்
-
சித்திரங்கள் பழகணும்
சிந்தனையை வளர்க்கணும்
முத்து முத்தாக எழுதணும்
முதுமை வரையில் படிக்கணும்
-
ஆடல் பாடல் பழகணும்
அன்னை தந்தையை வணங்கணும்
மூடச் செயலை எதிர்க்கணும்
மூத்தோர் சொல்லை மதிக்கணும்



**அப்பா:-** பரீட்சையில் கேள்வி எல்லாம் எப்படி இருந்தது?

**மகன்:-** மிகவும் "ஈஸியப்பா"

**அப்பா:-** அப்ப ஏன் வருத்தமாக இருக்கிறாய்?

**மகன்:-** கேள்வி எல்லாம் 'ஈஸி' தான். ஆனால் பதில் தான்......





# ஒளிபடாத இலைகள்

மாற்றங்களேதுமில்லாத அந்த
மரத்தின் அருகாமை
மீண்டும் சிறுவனாகவே
உணர்த்துகிறது
அதில் இன்னும் கூட
வெளிச்சம்
எத்தனையோ மாயைகளை
உருவாக்குகிறது..
ஒளிபட்ட இலைகளில் பளிச்சிடும்
இளமை
நிழலிலிருக்கும் இலைகளில்
முதுமையின் கணம்..

-செல்வா

# சாதி- நீதி

படிப்பில்லாமல்
இருந்தது - சாதி
படித்த பிறகும்
ஏனடா ( சாதியை)
கட்டி அழுகிறாய் -நீதி
எப்படி சொல்கிறாய்
உனக்கு நீ உயர்ந்தவன் என்றும்
மற்றவன் தாழ்ந்தவன் என்றும்
சாதியில் இல்லை
உன் உயர்வு
நல் பாதையை தேடு
நாம் சமம் என்று கூறு
நான் கூறுகிறேன்
நீ உயர்ந்தவன் என்று
சாதி எனும் சாக்கடையை
ஏன் இன்னும் மூக்கைப்
பிடித்துக் கொண்டு
முகர்கிறாய்

-கஜால்

# உடைந்த மனம்

அன்று நீ உன் காதலை என்னிடம்
சொன்ன போது அதை ஏற்க என்
மனசில் துணிச்சல் இல்லை
அன்று என் உறவினர் மீதுள்ள
பயத்தில் உன் காதலை ஏற்க
மறுத்தேன் ஆனால் இன்று
அதையெல்லாம் மீறி என் காதலை
உன்னிடம் சொல்லவந்தே ா அந்த
நிமிடம் நான் உன்னை
இன்னொருத்தியோடு
பார்த்த போது என் மனம் கண்ணா
போல்
சுக்கு நூறாக உடைந்து நொறுங்கிய
இனி எப்படி என் மனதை பழைய
நிலைக்கு கொண்டு வருவேன்
உடைந்து போன என் மனசை ஒட்ட
வைக்க ஒரு வழி சொல்......!!!!!

-மதி

# பிரம்மன் கடமை



உன்னைத் தவிர
மற்றப் பெண்களைக்
காணும் பொழுதெல்லாம்
பிரம்மன் கடமைக்கு
செய்திருப்பதை
உணர்கிறேன்...
என் தேவதையே
உன்னைக்
காணும் பொழுது
மட்டும் தான்
பிரமன் செய்த
கடமையை எண்ணி
வியந்து நிற்கின்றேன்!

-லாவி

# கவிதைப்புனல்

## பெண்ணின் நிலை ?



எப்படியும் அடுத்த வீட்டுக்கு
போகபோகிறவள் தானே
எப்படியும் அடுத்த வீட்டிலிருந்து,
வந்தவள் தானே
பெண்ணின் நிலை என்றும்
நிலையில்லாமல் தான் இருக்கிறது
பெண்ணாக பிறந்தது தான்
நீ செய்த பிழையா ????

-முத்து

உன்னை நாளையும்
சந்திக்கலாம்
என்ற சந்தோசத்தை விட
இன்று உன்னைப்
பிரிவதே கொடுமையிலும்
கொடுமை

-வித்யா

# நட்பு

உடலின் அழகைப்
பார்த்து
வராது நட்பு
சொந்தம் பந்தம்
பார்த்து
வராது நட்பு
ஏழை பணக்காரன்
பார்த்து
வராது நட்பு
ஜாதி மதம் பார்த்து
வராது நட்பு
அந்தஸ்து படிப்பு
பார்த்து
வராது நட்பு
ஒரு ஆத்மாவ...
இன்னிசை
கீதம் நட்பு...
நட்பின் இல கணம்
என்றும்
ஒரு நட்பு தான்...!!

-கலைவாணி,

உன்
கார்குழல்
கனியிதழ்
கயல்விழி
மழலைச் சிணுங்கல்
கிளிக் கொஞ்சல்
குயில் குரல்
செல்லக்கோபம்
அனிச்சை நாணம்
மெல்லிடை
அன்ன நடை
மயில் நாட்டியம்
கொலுசின் ஒலி
பாதத் தடங்கள்
இவைகளை வரையறுத்து
உன் பெயரை தலைப்பாக வைத்து
நான் எழுதிய வாக்கியங்கள்
உலகின் தலைசிறந்த
கவிஞனையும் வென்றுவிடும்......

-வேல்நந்தன்



- யதார்தன்

# நான் ஒரு நாடகக்காரன்

**(கடந்த வாரத் தொடர்ச்சி)**

இன்றைக்கு நினைத்துப் பார்க்கையில் ஆச்சரியமாக இருக்கிறது.

கேபி நாடகத்துக்கான எந்தக் கல்வியும் கற்றவரில்லை. அதற்கான பயிற்சிப் பட்டறைகளிலும் அதுவரை பங்கேற்றதில்லை. ஆனால், அவர் அளித்த பயிற்சிகள் ஒரு நடிகனை உருவாக்கும் திறனுடைவையாக இருந்தன. இருக்கின்றன. ஒரு பயிற்சி உடல்மொழியை பதப்படுத்தியது என்றால், மற்றொரு பயிற்சி குரல்மொழியை கற்றுத் தந்தது. மற்றொன்று மன இறுக்கத்தை விலக்கி, மனதை மலரச் செய்தது. இந்த பயிற்சிகளெல்லாம் குழுவுக்குள் ஒருங்கிணைந்து பணியாற்றும் மனப்பான்மையை நான் அறியாமலே எனக்குள் விதைத்தன.

அந்த வித்துதான் அடுத்த பத்து நாள்களில் நானும் ஒரு நாடகக்காரனாக உருமாற பெருங்காரணமாக இருந்தது.

ஆனால், அந்த பத்து நாள்கள் பத்து தர்க்கரீதியாகப் பார்த்தால், நான் சிறுவர் நாடகங்களை எளிதில் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். சிறுவயதில் பெரியவர் நாடகங்களில் மட்டுமே பங்கேற்றிருந்த நான், பெரியவனான பின் சிறுவர் நாடகங்களில்தானே பங்கேற்க வேண்டும்!

ஆனால், என் மனமோ வேறு வகையில் தர்க்கித்தது. சிறுவயதிலேயே பெரியவர் நாடகங்களில் பங்கேற்கும் அளவுக்கு முதிர்ச்சி அடைந்த நான், பெரியவனான பின் எப்படி சிறுவர் நாடகங்களில் பங்குபெறும் அளவுக்கு முதிர்ச்சி குறைவாக நடந்து கொள்ள முடியும்? (உண்மை தலைகீழ் என்பதை அனுபவம் பின்னால் புரியவைத்தது).

மட்டுமல்ல அந்த நாடகத்தை கேபி வடிவமைத்த விதம் கூட என்னால் ஒப்புக் கொள்ள முடியாததாக இருந்தது. செயற்கையான அசைவுகளுடன் கூடிய உடல்மொழி மற்றும் அதீத குரல்மொழி • என நான் அதுவரை அறிந்திராத ஒரு வடிவத்தில் இருந்த நாடகத்துக்குள் நாடக வகை ஆகிய இரண்டை இப்படி சொல்லிப் பார்க்கலாம்.

கொஞ்சம் அழகியல் மற்றும் கற்பனையைக் கலந்து நடிகனின் அந்த நேரத்து மனோபாவத்தின் அடிப்படையில் மேடை சலனங்களை ஏதாவது ஒரு பத்ததியில் அது நாட்டிய முறையாக இருந்தாலும் சரி அல்லது கூத்து போன்ற பாரம்பரிய சலன முறையாக இருந்தாலும் அதன் வழியாக வெளிப்படுத்துவது பத்ததி நாடக வகை.

உள்ளதை உள்ளவாறு எவ்வகையான மிகைப்படுத்தலும் இன்றி ஒரு காட்சியில் நடிகன் ஏற்கும் பாத்திரத்தின் மனநிலையை மேடையில் காட்சிப்படுத்துவதை யதார்த்த வகையாகக் கொள்ளலாம்.

இது மிகவும் சுருக்கமான ஒரு விளக்கம் மட்டுமே. இவை பற்றி கேபியிடம் நேரில் பேசினால், பேசுவார் பேசுவார் . பேசிக் கொண்டே இருப்பார். அவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன. பின்பு ஒருநாள் சாவகாசமாக அவருடன் வந்தேன். ஆனால், யாரிடமாவது பகிர்ந்துதானே ஆகவேண்டும். அதற்கென எனக்குக் கிடைத்தவன் நண்பன் ஃப்ரெடெரிக்ஸ்.

ஃபெட்ரி, எனக்கு என்ன பண்ற துன்னே தெரியல. நான் எதிர்பார்த்தது என்னவோ. ஆனா, இங்க நடக்கிறது வேற. என்னால இத நாடகம் என்று ஒத்துக் கொள்ள முடியவில்லை. ஆனா, கமிட் பண்ணிக்கிட்டேன். அதனால. இந்த ஒரு நாடகம்தான். இந்த நாடகம் முடிஞ்சதும் நான் யதார்த்தாவிலிருந்து விலகிடுவேன். நீங்க நம்ம நண்பர்கள் யாருகிட்டயும் இதப்பத்தி பேசவேணாம் என்று தொடர்ந்து புலம்பிக் கொண்டிருப்பேன். நான் புலம்புவதையெல்லாம் சற்றும் முகம் சுளிக்காமல் அக்கறையுடன் கேட்டுக் கொண்டிருப்பான். ஆனால், வாய் திறந்து ஒரு வார்த்தை பதிலாகக் கூறமாட்டான். என்ன செய்வது என்று உனக்குத் தெரியும். நீயே முடிவெடுத்துக் கொள். நான் இந்த விஷயத்தில் சொல்ல ஒன்றுமில்லை. ஆனால், நீ என்ன முடிவெடுத்தாலும் எனது ஆதரவு உண்டு என்று அந்த மௌனம் எனக்கு உணர்த்தும். எனக்கு அதுவே போதுமானதாக இருந்தது.

ஆனால்,' இதுவெல்லாம் கிட்டத்தட்ட பத்து நாள்கள்தான்.

நாள்கள் என்று குத்துமதிப்பாகத்தான் சொல்கிறேன் சற்றேறக் குறைய இருக்கலாம்.

அந்த பத்து நாள்கள் சற்று அவஸ்தையுடன்தான் கழிந்தன.

கேபி கற்றுக் கொடுத்த பயிற்சிகளை புதுப்புது விளையாட்டுகள் போல் கற்றுக்கொண்ட எனக்கு, நாடக ஒத்திகைகள் பெரும் பாரமாக இருந்தன.

பொதுவாகவே, பயிற்சிப் பட்டறைகள் ஒரு நடிகனை உருவாக்குமென்றால். பிரதியில் உள்ள கதாபாத்திரத்தின் தன்மைக்குள் அவன் சிரமமின்றி புகுந்து கொள்ளும்போதுதான் நடிகன் முழுமையடைவது நடைபெறும்.

அதற்கு நடிகன் தரப்பில் இரு செயல்கள் நடைபெற வேண்டும். பயிற்சிப் பட்டறையில் தன்னை முழுமையாக ஆசானிடம் ஒப்படைப்பது. இயக்குநர் காட்டும் வழியில் சென்று பாத்திரத்துக்குள் புகுந்து கொள்வது.

பயிற்சிப் பட்டறையில் என்னையறியாமலே முழுமையாக ஒப்படைத்த என்னால், ஒத்திகையின் போது அப்படியிருக்க முடியவில்லை. பிரதி எனக்கு இன்னும் சிறுவர் கதைகளையே நினைவூட்டிக் கொண்டிருந்தது. (உண்மையில் மூன்று பண்டிதர்களும் மாண்டதொரு சிங்கமும் சிறுவர் நாடகம்தான் என்ற தெளிவு எனக்கு பின்னாள்களில் ஏற்பட்டது).

சிறுவனாக இருந்தபோதே நான் பங்கெடுத்துக் கொண்டதெல்லாம் பெரியவர்கள் நாடகங்களில்தான். (இயக்கிய, இயக்க முயற்சி செய்த நாடகங்களும் அப்படித்தான்).

புகமுடியாமல் நான் கஷ்டப்பட்டது ஆச்சரியமான ஒன்றல்ல.

இன்றைக்கு அந்த வடிவத்தை என்னால் எளிதாக வரையறுத்துக் கூற முடியும் stylish theatre என்று.

இந்த இடத்தில் stylish theatre என்றால் என்ன என்று கொஞ்சம் விளக்குவது அவசியம் என்று நினைக்கிறேன்.

நாடகங்களை அடிப்படையில் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. Stylish theatre.
2. Realistic theatre.

தமிழில் கூறினால்

1. பத்ததி வகை நாடகங்கள்
2. யதார்த்த வகை நாடகங்கள்.

இந்த இரண்டு பிரிவுகளையும் பற்றி நான் விளக்குவதை விட கேபியால் இன்னும் அழகாக விளக்கமுடியு மென்பதால், அவருடைய வார்த்தைகளிலேயே கூறுகிறேன்.

பத்ததி நாடக வகை மற்றும் யதார்த்த இவ்விடயங்கள் பற்றி கதைப்போம்.

இப்போதைய விஷயம் அப்போது எனக்கு அந்நியமான ஒரு வடிவம் என்னை நாடகத்துக்குள் செல்லவிடாமல் தடுத்துக் கொண்டிருந்தது என்பதுதான். அதுவும், நான் முன் பத்திகளில் விவரித்திருக்கும் பயிற்சிப் பட்டறைக்குப் பின்னும் என்பதுதான் கவனத்தில் கொள்ள வேண்டியது.

கேபி அளித்த பயிற்சிகளை ஒத்திகைகளின்போது ஒரு நடிகனாக நான் apply செய்திருந்தால், எளிதாக உள்ளே நுழைந்திருக்க முடியும். ஆனால், பயிற்சி மற்றும் ஒத்திகை இரண்டையும் கோடு போட்டு தனித்தனி எல்லைகளுக்குள் நான் வைத்திருந்ததால் நாடகத்துக்குள் செல்லமுடியாமல் அவஸ்தைப்பட்டேன்.

எனது அவஸ்தைகளை பகிர்ந்து கொள்ள யாருமில்லை. யதார்த்தா நண்பர்கள் எனக்குப் புதியவர்கள். அலுவலக நண்பர்களிடமோ நான் நாடகத்தில் நடிப்பது பற்றி ரகசியம் காத்து



இந்தப் பத்துநாள்களில் என்னுடன் நடித்த சக நடிக நண்பர்கள் குணசேகரன், நரசிம்மன், வெங்கட் ஆகியோர் எனக்கு ஆதரவாக இருந்ததை மறந்தால் நான் நன்றியற்றவனாக ஆகிவிடுவேன். நான் விலகி இருந்தாலும், என்னை அவர்களுள் ஒருவனாக வரித்துக் கொண்டு, நான் தடுமாறும் இடங்களில் என்னை சரிசெய்து கொள்ள வழிகாட்டி உதவினார்கள். ஒத்திகையில் நான் இறுக்கமாவதைப் புரிந்து கொண்டு, தனியாக என்னை அழைத்துச் சென்று எனக்காக அவர்கள் அடவுகளை செய்து காண்பித்தும் வசனங்களை பேசிக் காட்டியும் கற்றுக் கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள். இந்த அம்சம் யதார்த்தாவின் மிகப் பெரிய பலம். டில்லியிலிருந்து பணியிடமாற்றலில் செல்லும்வரை இந்த கலாச்சாரம் தொடர்ந்ததை நான் கண்கூடாகவே பார்த்தேன். அனுபவித்தேன். அதன் ஒரு பகுதியாக நானும் இருந்தேன். அதற்குப் பின்னும் இதே கலாச்சாரம் தொடர்ந்திருக்குமென்றே நம்புகிறேன்.

இந்தக் கலாச்சாரத்துக்கும் ஒருவகையில் கேபிதான் காரணமாக இருந்தார்.

அவரைப் பற்றி அவரே கூறுவதைப் பாருங்கள்.

. நான் முறையாகப் பயிற்சி பெற்ற இயக்குநர் இல்லை. என்னுடைய நாடகங்களில் மிகப்பெரும் பிரச்சினை என்னவென்றால் நடிகனுடன் இயக்குபவனும் சேர்ந்து நாடகத்தை கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு சவால் எப்போதுமே தொடர்ந்தே வந்தது.

- அ. யேசுராசா

# பாலு மகேந்திராவின் ஐந்து குறும்படங்கள்!

## 5. ஒரு முக்கோணக் காதல் கதை - 24 நிமிடம்

ஒரு நண்பனைப் போல் பழகும் எழுத்தாளரான தந்தையுடன் வசிக்கும் அபூ, அலுவலகமொன்றில் வேலை பார்க்கிறாள். காதல், பாலுறவு, நட்பு, திருமணம், சமூக நிலைமை பற்றியெல்லாம் அவளுக்குத் தனித்துவமான கருத்துக்கள் உள்ளன. புத்தியும் உணர்திறனும் கொண்டவள் அவள். அலுவலகத்தில் ஒருநாள் மதிய உணவு வேளை, சாப்பிட்டபடி ஊழியர்கள் உரையாடுகின்றனர். திருமணம் நிச்சயமான ஓர் இளம் பெண் இனிப்புக் கொடுக்கிறாள். மணமகன் துபாயில் வேலையாம். திருமணத்துக்கு வந்து உடனே திரும்பிவிடுவானாம். இவள் இங்கேயே இருப்பாளாம். மூன்று வருட ஒப்பந்தம் முடியும்வரை ஆண்டுக்கு ஒருமுறை வந்து போவானாம்!

அவன இவள் பார்த்ததில்ல .... இவள அவன் பார்த்ததில்ல. ஆனா இரண்டுபேரும் கல்யாணம்



பண்ணிக்கப் போறாங்க....! ஒரு பெண் சொல்ல, அபூ சொல்கிறாள்.

என்னமா திருமணத்த வெறும் பொருளாதார ஒப்பந்தமா மாத்தி வச்சிருக்காங்க....

நம்ம நாட்டில நடக்கிற 'அரேஞ் மரேஜ்ஜில' நூற்றுக்கு தொண்ணூறு வீதம் பொருளாதாரம் தானே. அதற்கப்புறம் தானே மற்ற விஷயங்களெல்லாம். கோபி.

அபூ சொல்கிறாள், பெண் பார்க்கப்போய்.... ஒருவாட்டி பார்த்ததுமே புடிச்சிருக்கு.... இல்ல புடிக்கல.... என்று சொல்றாரே எத? அவளது உருவத்த.... அப்பட்டமா சொன்னா உடம்ப...

மாதவன் அவளையே பார்க்கிறான். கோபியில் வியப்பும் மகிழ்வும் கலந்த பார்வை!

கை கழுவும்போது கோபி சொல்கிறான், அபூ, உன்ன நான் பயங்கரமாக காதலிக்க ஆரம்பிச்சிட்டேனோன்னு தோணுது. இல்ல.... அப்பிடி ஒரு சந்தேகம்.

சந்தேகம்தானே! தெளிவாக்கிக்கிட்டு சொல்லுங்க! அபூ.

சில நாள்களின் பின்னர், மாதவனும் அபூவும் சாப்பிட்டபடி உள்ளனர். அவன் அவளிடம் ஒன்றைச் சொல்லவேண்டும் என்கிறான். அவன் அந்த அலுவலகத்துக்கு வந்து இரண்டு மாதங்கள்தான் ஆகின்றன.

விறாந்தையில் கை கழுவும்போது, அவன் ஏதோ சொல்லவேண்டு மென்று சொன்னதை அவள் நினைவூட்டுகிறாள். கதிரையில் அமர்ந்து இருவரும் கதைக்கின்றனர். அவன் உணர்ச்சி வசப்படுகிறான். தான் வந்த முதல்நாளே ஒரு தேவதை போல் அவள் இருந்ததை அவளது உடுப்பை, லிப்ஸ்டிக்கை, எளிமையான காதணியை, சிரிப்பை விவரிக்கிறான். இறுதியில், அபூ ஒரு மென்றல் மாதிரி ஆயிட்டேன்.... அபூ, ஐ லவ் யு என்கிறான். அவள் சங்கடத்துடன் அங்குமிங்கும் திரும்பிப் பார்க்கிறாள். தான் அப்படியொன்றும் எண்ணவில்லை. கொஞ்சம் அவகாசம் வேண்டும் யோசிப்பதற்கு எனச் சொல்லித் தப்பிக்கிறாள்.

வீட்டில் தந்தையிடம் இந்த நிகழ்வைச் சொல்லிச் சிரிக்கிறாள்.

சுத்த விடலைத்தனமா இருக்கு....

நிறைய தமிழ் சினிமா பார்ப்பான் போல... என்கிறார் தந்தை.

கண்டதும் காதல்! இது ஒருவிதமான மனோவியாதி இல்ல....? அபூ.

ஒரு மாதத்துக்குப் பிறகு, கோபி அலுவலகப் பரீட்சையில் சித்தியடைந்து பதவி உயர்வு பெறுகிறான். அபூ தொலை பேசியில் அவனை வாழ்த்துகிறாள்.

அபூ, இந்தப் போன் வ்ரப்பேர் நான் உங்களைத் தான் நினைச்சன்.

ரெலிபதி?

அது என்ன பதியோ, இற் இஸ் ஏ ஃவக்ற்.



அன்று அவளது வீட்டுக்கு வந்து, ஆவலுடன் கதைக்கிறான்.

.... அபூ, ஐ திங்.... நான் உங்களை சீரியஸா லவ் பண்ணுறன். ஒரு நிமிஷம் .... முடிச்சிர்றன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லயெண்டா நான் வந்து உங்க அப்பாட்ட பெண் கேட்கட்டுமா?

அவள் ஒன்றுமே சொல்லாததில்,

.... அபூ ஐ ஆம் சொறி. உங்களுக்கு இஷ்ரமில்லயெண்டா விட்டிரலாம்.... என் மனசில பட்டதைச் சொன்னேன்.

இஸ்ரமில்லன்னு யார் சொன்னாங்க.... எனக்கும் உங்கள....

கோபியின் முகம் மகிழ்ச்சியுடன்.



இரண்டு நாள்களின் பின்னர் மாதவன் அபூவின் வீட்டுக்கு வந்து அவளுடன் கதைகீகிறான். கொஞ்சம் ரைம் வேண்டுமென்று சொல்லிவிட்டு கோபியை மணக்கப் போவதைப பற்றிக் கேட்கிறான். அவளது விளக்கத்தை அவன் ஏற்கவில்லை. கடைசியில், சரி. ஒன்றுமட்டும் தெரியணும். என்னிட்ட இல்லாதமாதிரி அந்தக் கோபியிட்ட என்ன இருக்கு? என ஆற்றாமையுடன் கேட்க, நீங்க நேரடியாக் கேட்டதால நான் நேர்மையா பதில் சொல்லியாகணும். கோபிக்கக்கூடாது.... எனச் சொல்லத் தொடங்குகிறாள் .

உங்ககிட்ட இல்லாத முதிர்ச்சி இருக்கு. உங்ககிட்ட இல்லாத கம்பீரம் இருக்கு.

ஓ! வெளித்தோற்றம்.

வண் மினிற். நான் கம்பீரம் என்று சொன்னது அப்பியரன்ஸ அல்ல. அந்த மனுஷனோட மனக்கம்பீரத்த.... மாதவன்!, உங்ககிட்ட இல்லாத பொசிற்றிவ் திங்கிங் இருக்கு. வாழ்வப் பற்றின தெளிவான பார்வை இருக்கு. சம்பாதிக்கணும்....முன்னுக்குவரணும்.... கட்டிக்கப்போறவளுக்கு எல்லா சௌகரியங்களும் பண்ணிக் கொடுக்கணும்... இந்த ஆர்வ மிருக்கு. இது எல்லாத்துக்கும் மேல ஒரு அடிப்படை நாகரிகம் இருக்கு. மற்றவங்களுக்குப் பிடிக்கலேன்னா அதை அவங்கமேல திணிக்கக்கூடாது என்ற் அடிப்படை நாகரீகம்.

போதும். ஓல் த பெஸ்ற்.

மாதவன் துக்கத்துடன் எழும்பிச் செல்கிறான். அபூ மெல்லிய கோப உணர்ச்சியுடன்.... இருவரது முகங்களும் அண்மைக் காட்சிகளாக. இத்துடன் படம் முடிகிறது.

இந்தப்படத்துக்கான ஒளிப்பதிவு பாலு மகேந்திராவுடையது.

ஒளிப்பதிவில் பல நல்ல சட்டகங்கள் உள்ளன. ஆரம்பத்தில் தகப்பன் எழுதிக் கொண்டிருக்கிறார். இடதுகையில் புகைந்துகொண்டிருக்கும் சிகரெட்டும், கைக்கடிகாரமும், வலதுகையிலுள்ள பேனாவால் எழுதுவதுமான வெகு அண்மைக்காட்சி (ECU). மாதவனும் அபூவும் விறாந்தையில் கதைக்கும்போது ஒவ்வொருவரதும் தோளின்மேலால் காட்டும் காட்சி (OSS இதில் வெகு அண்மைக் காட்சிகளும்), தகப்பனும் மகளும் கதைக்கும்போதான OSS, மாதவனின் முகத்தைக் காட்டும் அண்மைக் காட்சி (CU) போன்றன அவை.

அபூ (மௌனிகா), மாதவன் (சஷிகுமார்), எழுத்தாளரான தகப்பன் பாத்திரங்கள் மிகச் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளன!

பாலு மகேந்திராவைச் சிலர் சிறந்த ஒளிப்பதிவாளராக மட்டும் காண்கின்றனர். சிறந்த நெறியாளர் என்பதை ஏற்பதில்லை. ஆயினும் சந்தியாராகம், அழியாத கோலங்கள், வீடு ஆகிய முழுநீளத் திரைப்படங்கள் அவரைச் சிறந்த நெறியாளராக உறுதிப்படுத்துகின்றன. அதுபோலவே, அவரது குறும்படங்கள் பலவும் அவரது நெறியாள்கைத் திறனை வெளிக்காட்டி நிற்கின்றன. புனே திரைப்பட தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் நெறியாளர் கற்கைநெறிக்கே அவர் விண்ணப் பித்தார். அது சாத்தியப்படாத தால் தான் ஒளிப்பதிவுத்துறையில் பயின்றார். அங்கும் ஒளிப்பதிவுத்துறை வகுப்புகளை விட்டு, நெறியாள்கைத் துறை முதலிய ஏனைய துறைகளுக்கான வகுப்புகளிலேயே தனது நேரத் தைச் செலவிட்டதாக, ஃவ்றொன்ற் லைன் இதழில் குறிப்பிட்டுள்ளார். உரிய சிறுகதைகளைத் தெரிவுசெய்து, சிறப்பான உரையாடல்களை எழுதி, பொருத்தமாக நடிகர்களைப் பயன்படுத்தி, சிறப்பான ஒளிப்பதிவுட னும் ஆக்க இசையுடனும் இயற்கை ஒலிகளுடனும், கலைநேர்த்தி கொண்ட குறும்படங்களாக உருவாக்கியுள்ளார். நெறியாளர் ஒரு சர்வாதிகாரி என்ற வழக்கொன்று உள்ளது. எல்லாத்துறை களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, வடிவச் செழுமைகொண்ட குறும்படங்களை உருவாக்கிய ஒரு நெறியாளர்தான் பாலு மகேந்திரா என்றே, ஒரு திரைப்பட ஆர்வலனாக உணர்கிறேன்!

**(முற்றும்)**

# இவ்வார இராசி பலன்

**25.02.2015 –03.03.201**

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

வாகன பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். புத்திரர் அறிவு, கருணை நிறைந்த மனதுடன் செயல்படுவர். எதிர்ப்பாளரால் இருந்த தொல்லை விலகும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில் சார்ந்த பண உதவி கிடைக்க அனுகூலம் உண்டு. பணியாளர், கூடுதல் வேலைவாய்ப்பை விருப்பமுடன் ஏற்றுக் கொள்வீர்கள். பெண்கள் குடும்ப உறவுகளை பொறுப்புணர்வுடன் பாதுகாத்திடுவீர்கள். மாணவர்கள், படிப்பில் முன்னேற அனுகூலம் மிகுந்திருக்கும்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடத்துவீர்கள். புத்திரரின் செயல் குறையை கண்டிப்பதில் நிதானம் வேண்டும். வழக்கில் சாதகமான தீர்வு கிடைக்க அனுகூலம் உண்டு. இல்லறத்துணை வழி சார்ந்த உறவினருக்கு உதவுவீர்கள். தொழிலில் முன்னேற்றம் பெற, புதியவர்களின் வருகை துணை நிற்கும். பணியாளர்கள், கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வீர்கள். பெண்கள் சந்தோஷ நிகழ்வுகளினால், மனதில் உத்வேகம் பெறுவீர்கள்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

பொறாமை குணம் உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. புத்திரரின் மனக்குறையை இதமான அணுகுமுறையால் சரி செய்வதால், ஒற்றுமை உருவாகும். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். இல்லறத்துணையின் செயல்குறையை பெரிதுபடுத்தி பேச வேண்டாம். தொழில், வியாபாரம் ஓரளவு வளர்ச்சி பெறும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும்.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவது நல்லது. புத்திரரின் மனக்குறையை சரி செய்வதால், உங்கள் மீதான பாசம் அதிகரிக்கும். எதிர்ப்பாளர் உதவுவது போல இடையூறு செய்வர். இல்லறத்துணையின் அன்பு நிறைந்த வார்த்தை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணியாளர்கள், உடல் நலம் பேணுவதால் மட்டுமே, பணி இலக்கை பூர்த்தி செய்ய இயலும்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

புத்திரரின் தேவையை நிறைவேற்ற கூடுதல் பணம் செலவாகும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத்துணையின் மனதில் நம்பிக்கை வளர, இனிய அனுபவங்களை நினைவுபடுத்துவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சிறப்பாக இருக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், கடமையை உணர்ந்து செயல்படுவீர்கள்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

பணச்செலவில் தாராள குணம் பின்பற்றுவீர்கள். புதிய வாகனம் வாங்க, சிலருக்கு அனுகூலம் உண்டு. புத்திரர் அறிவுத்திறனில் முன்னேற்றம் அடைவர். உறவினர்களின் மனதில், உங்கள் மீதான நல்ல எண்ணம் அதிகரிக்கும். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணையிடம் தேவையற்ற விவாதம் பேசக் கூடாது. பெண்கள், குடும்ப நலன் கருதி பொறுமை காத்திடுவீர்கள்.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

குடும்பத்தினரின் தேவை பூர்த்தியாகும். சிலர் வீடு, வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர் செயல்களை ஒழுங்கு செய்வது நல்லது. எதிரியால் வருகிற கெடுசெயல் இஷ்ட தெய்வ அருளால் விலகும். இல்லறத்துணை கருத்து வேற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழிக்க, சில மாற்றம் பின்பற்றுவது அவசியம். பணியாளர்களுக்கு பணி இலக்கு கால அவகாசத்தில் நிறைவேறும். பெண்கள், நகை வாங்க அனுகூலம் உண்டு.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் உத்வேகமுடன் செயல்பட துணை நிற்பீர்கள். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களை உபசரிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். பணியாளர், நற்பெயரை பாதுகாப்பது அவசியம். பெண்கள், வீட்டை அழகுபடுத்த கலை அம்சம் நிறைந்த பொருள் வாங்குவீர்கள்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

நீண்ட தூர பயணங்களில் பாதுகாப்பு முறை தவறாமல் பின்பற்றவும். புத்திரர் நன்மை, தீமை எதுவென உணராமல் நடந்து கொள்வார். இதமாக அறிவுரை சொல்லுங்கள். உறவினர்களிடம் ஏற்பட்ட பகைமை எண்ணம் மாறும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபார நடைமுறை தாமத கதியில் இயங்கும். பணியாளர், தன் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். பெண்கள், உடல்நலத்தில் உரிய கவனம் கொள்ளவும்.

### மகரம்

**திருவோணம், அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

சந்தோஷத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். புத்திரர் அதிக அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். வெளியூர் பயணத்தில் மாறுதல் ஏற்படும். இல்லறத்துணை ஒற்றுமை குணம் பாராட்டுவார். தொழிலில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். பணியாளர், நற்பெயர் பெற அனுகூலம் உண்டாகும். பெண்கள், குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்கள் சிறப்பு பெற உதவுவீர்கள். மாணவர்கள், லட்சியத்துடன் படித்து நல்ல தேர்ச்சி பெறுவீர்கள்.

### கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

தாய்வழி உறவினர், விரும்பி சொந்தம் பாராட்டுவர். புத்திரரின் ஆர்வமிகு செயல் குளறுபடியை உருவாக்கலாம். நிதானம் பின்பற்ற சொல்லுங்கள். அளவான உழைப்பு, சீரான ஓய்வு மட்டுமே உடல்நலம் பாதுகாக்க உதவும். இல்லறத்துணை உங்களின் மதிப்பு, மரியாதை சமூகத்தில் உயர்ந்திட உறுதுணைபுரிவார். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர், பணக்கடன் பெறுவதில் நிதானம் வேண்டும்.

### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சுயலாபம் கருதி புகழ்ந்து பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. தாயின் வழிகாட்டுதல் முக்கியமான நன்மை ஒன்றை பெற்றுத்தரும். புத்திரரின் விருப்பங்களை, தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள். உறவினர் வீட்டு வருகையால், வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், சில சீர்திருத்தம் மேற்கொள்வீர்கள். மாணவர்கள், புதியவர்களின் நட்பை பெறுவர்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 75



இரண்டு வார காலத்தில் தான் இந்தியா திரும்பி விடுவேன் என்றும் நம்பிக்கையோடு கூறினார். விமான நிலையத்துக்கு புறப்படுவதற்கு சற்று முன்பாகத் தம்மை விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனைக்கு கொண்டு செல்லுமாறு காவற்றுறை அதிகாரி குமாரிடம் பாலா வேண்டுகோள் விடுத்தார். தலை மறைவாகிவிட்ட பிரபாகரன் ஓர் அவசர செய்தி அனுப்ப வேண்டும் என்று பாலா தெரிவித்தார். அரசியல் பணிமனையிலேயே காவற்றுறையினர் கட்டடத்தைக் காவல் காத்து நிற்க, விடுதலைப்புலிப் போராளிகளோடு பாலா ஒரு அவசர கூட்டம் நடத்தினார். தமது நாடு கடத்தலின் பின்னணியில் உள்ள காரணங்களை அவர் கவலையோடு நின்ற போரளிகளுக்கு விளக்கி, அரசு தம்மைத் திருப்பி அழைக்க வேண்டும் என்ற பரப்புரையை முடுக்கி விடுமாறு அவர்களை கேட்டுக் கொண்டார். ஒரு இரகசிய வழி மூலம் பிரபாகரனுக்கு செய்தி அனுப்பினார். அதன் பின்னர் விமான நிலையம் புறப்பட்டோம். காவற்றுறை வாகனங்களும் விடுதலைப் புலி வாகனங்களும் பின்னே தொடர்ந்து வந்தன.

மறுநாள் காலை அநேகமாக அனைத்து இந்தியத் தேசிய செய்தித் தாள்களும் தமிழ் - மற்றும் ஆங்கிலப் பதிப்புகள் - பாலா நாடு கடத்தப்பட்டதையே பெரிது படுத்தியிருந்தன. செய்தித்தாள் அறிக்கைகள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக இருந்தன. சில ஆசிரியத் தலையங்கங்கள், அவசர,மூடத்தன நடவடிக்கைகாக ரஜீவ் நிர்வாகத்தை கண்டித்திருந்தன.இந்தியாவிலிருந்து பாலா நாடு கடத்தப்பட்ட உடனடியாகவே தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் அதைப் பெரிது படுத்தியிருந்தன. பாலா நாடு கடத்தப்பட்டதைக் கண்டித்தன. அவர் திரும்பி வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டன.

திம்புப் பேச்சுவார்த்தை முறிவு, பாலாவின் நாடு கடத்தல், பிரபாகரனின் தலைமறைவு ஆகியவை சிறீலங்காவுடனான எதிர்காலப் பேச்சுவார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைத்தன.இந்த நிலையை இந்தியா எதிர்பார்க்கவில்லை. இந்தியாவுக்கு பாலா திரும்பினாலன்றி நிலைமை சுமூகமாகாது என்பது தெளிவாகியது. இந்தியாவுடனோ, சிறீலங்காவுடனோ பேச்சுவார்த்தை மீளத் தொடங்கப்பட வேண்டும் என்றால், பாலா இந்தியாவுக்குத் திரும்பி வந்தாக வேண்டும் என்று பிரபாகரனும் ஈ.என்.எல்.எஃப் இன் ஏனைய தலைவர்களும் நிபந்தனை விதித்தார்கள்.

இதையடுத்து பாலா இந்தியாவுக்கு விரைவிலேயே திரும்பி விடுவார் என்று இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் எனக்கு நம்பிக்கையூட்டும் செய்திகளை அனுப்பினர். இறுதியில்,லண்டனில் உள்ள இந்திய தூதரகம் புதுடில்லி செல்வதற்கு அவருக்கு வீசாவும் விமானச் சீட்டும் வழங்கியது.

அதேசமயம் நான் புதுடில்லி போய் பாலாவைச் சந்திக்க இந்திய அதிகாரிகள் ஏற்பாடு செய்தார்கள்.பாலா திரும்பி வந்த போதிலும், இந்தியாவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே உறவு தொடர்ந்தும் நலிவடைந்தது.

(பதிவு தொடரும்)

# வைதேகி காத்திருந்தாள்

- கர்ணா



யார் இந்த வைதேகி?

எதற்காக காத்திருக்கிறாள்?


இந்தக் கேள்விகளுக்கு பதில் தெரிந்துகொள்ள இந்தப் பதிவைப் படிக்க ஒரு சில நிமிடங்களை செலவழியுங்கள்.

ஏனெனில், உங்கள் நட்போ அல்லது உறவோ இல்லை யாரோ தூரத்து சொந்தமோ அவர்களுக்கு வைதேகியைப் பற்றி நீங்கள் சொல்வதால் நன்மை ஏற்படும்.

வைதேகியைப் பற்றிய சிறு குறிப்பு. அழகான தோற்றம். மென்பொருள் நிறுவனத்தில் வேலை. சரிசமமாக நடத்தும் கணவர். வாழ்க்கைக்கு வசந்தம் சேர்க்க மகள். சுதந்திரத்தைத் தட்டிப் பறிக்காத புகுந்த வீடு. இதுதான் வைதேகியின் வாழ்க்கை. இதைவிட என்ன வேண்டும் ஒரு பெண்ணுக்கு என நீங்கள் கேட்பது புரிகிறது. அப்படித்தான் வைதேகியும் மகிழ்ச்சியாகவே வாழ்ந்து வந்தார். 2014ஆம் ஆண்டு வரை.

எப்போதும் சுறுசுறுப்பாக, பரபரப்பாக வீடு, வேலை, குடும்பம், குழந்தை என இருந்த வைதேகிக்கு திடீரென வலது புற கழுத்தில் ஒரு கட்டி ஏற்படுகிறது. அடுத்தடுத்த நாட்களில் வலி அதிகமாகிறது. காது, மூக்கு, தொண்டை நிபுணரிடம் செல்ல சில மருந்துகளை தருகிறார். தற்காலிக நிவாரணம். உடனே, தனது குடும்ப மருத்துவரிடம் ஆலோசனை செய்கிறார். அவர் இதை அசட்டை செய்ய வேண்டாம் என எஃப்.என்.ஏ.சி. என்ற மிக முக்கியமான பரிசோதனை செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துகிறார்.

மருத்துவ பரிசோதனை முடிவு. வைதேகியின் கணவரிடம் தெரிவிக்கப்படுகிறது. கண்ணீர் கண்களை மறைக்க,



மனைவியையும் மருத்துவரிடம் அழைத்துச் செல்கிறார். மருத்துவர் முதலில் ஒரு மணி நேரம் இருவருக்கும் கவுன்சிலிங் தருகிறார். வைதேகியின் நிலைவரம் அறிந்து மொத்தக் குடும்பமும் நிலை குலைந்து போகிறது.

தனிமையில் சிந்திக்க ஆரம்பிக்கிறாள் வைதேகி. நான் வெஜிடேரியன். ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கம் கொண்டவள். சோம்பேறி இல்லை. வீட்டு வேலை, அலுவலக வேலை என எப்போதும் பரபரப்பாக இருப்பவள். வீட்டையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக பேணுபவள். உடற்பயிற்சிகள் செய்யத் தவறியதில்லை. அப்புறம் எப்படி எனக்கு..? வைதேகியின் யோசனை நீள்கிறது. அவருக்கு ஒரு தெளிவு பிறக்கிறது.

இது போன்ற நோய் ஏற்பட இதுமட்டும்தான் காரணம் என குறிப்பிட்டு வரையறுக்க முடியாது. காரணம் எது வேண்டுமானாலும் இருக்கலாம். வாழ்க்கைமுறை இல்லாமல், பரம்பரை தாக்கம் இல்லாமல், வேறு ஏதோ ஒன்றுகூட காரணமாக இருக்கும் என புரிந்து கொள்கிறார்.

அந்த தெளிவு பிறந்தவுடன் தொடங்குகிறது ஒரு யுத்தம். அது lymphoma என்ற வகையான புற்றுநோயுடனான யுத்தம். இரண்டாவது கட்டத்தை நோய் எட்டியிருந்தது. மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார். புற்றுநோய் என்பதே வேதனை என்றால் அதற்கான சிகிச்சையும் வேதனையளிப்பதாகவே இருக்கிறது. கீமோதெரபி, ஸ்டெராய்டு, நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கும் ஊசிகள். பக்க விளைவுகளும் வந்தன. அழகான, அடர்த்தியான கூந்தல் அனைத்தையும் கொத்து கொத்தாக வைதேகி இழந்து கொண்டிருந்தபோது, வைதேகியின் கணவர் தலையை முழுவதும் மொட்டை அடித்துக் கொண்டு வந்து நிற்கிறார். இறைவா இந்த அன்பைவிட எனக்கு வேறு என்ன வேண்டும் என்ற வைதேகி சிலாகிக்கிறாள்.

சிகிச்சைக்கு ஒத்துழைப்பதைத் தவிர வேறு வழியில்லை. பொறுமையாக காத்திருக்கிறாள் வைதேகி. வைதேகியை முன்பு பார்த்தவர்கள் அவளை அடையாளம் காண முடியாத அளவு உருக்குலைந்து கொண்டிருந்தது. கண்ணாடி பார்ப்பதை தவிர்த்தாள் வைதேகி. 4 சுற்று சிகிச்சைக்கு பின்னர் மீண்டும் பரிசோதனை செய்யப்படுகிறது. வைதேகி உடலில் புற்றுநோய் அறிகுறிகள் முற்றிலும் அழிந்திருந்தன. இருப்பினும் அணு அளவேனும்கூட இருந்துவிடக் கூடாது என்பதால் இன்னும் சில காலத்துக்கு மருந்து, மாத்திரை உட்கொள்ள வேண்டும் என்பது மருத்துவர்கள் அறிவுரை.

முழுமையாக ஓராண்டு கடந்துவிட்டது. இப்போது வைதேகி இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறார். அவரது வருகைக்காகவே காத்திருந்த அவரது நிறுவனம் அவரை மீண்டும் பணியமர்த்திக் கொண்டது. ஸ்டெராய்டு தாக்கம் உடலில் இருந்து மெல்ல, மெல்ல குறைந்து வருகிறது. தலையில் முடி லேசாக எட்டிப்பார்க்க துவங்கியிருக்கிறது. வைதேகி காலையில் எழுந்து குழந்தையை பள்ளிக்குத் தயார் செய்து. உணவு சமைத்து. மின்சார ரயில் பிடித்து, பின்னர் ஒரு ஷேர் ஆட்டோ ஏறி அலுவலகம் செல்கிறார். வைதேகி யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டார் என்று உங்கள் மனசு சொல்வது கேட்கிறது.

இந்த வைதேகியை நீங்கள் எப்படி இந்த எழுத்தின் மூலம் தெரிந்து கொண்டீர்களோ அதேபோல்தான் நானும் எழுத்து மூலம் தெரிந்து கொண்டேன். ஆம், வைதேகியே அவரது வலைப் பதிவு பக்கத்தில் பதிந்திருந்த பதிவில் இருந்து அறிந்து கொண்டேன்.

**முழுமையாக ஓராண்டு கடந்துவிட்டது. இப்போது வைதேகி இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறார். அவரது வருகைக் காகவே காத்திருந்த அவரது நிறுவனம் அவரை மீண்டும் பணியமர்த்திக் கொண்டது. ஸ்டெராய்டு தாக்கம் உடலில் இருந்து மெல்ல, மெல்ல குறைந்து வருகிறது. தலையில் முடி லேசாக எட்டிப்பார்க்க துவங்கியிருக்கிறது. வைதேகி காலையில் எழுந்து குழந்தையை பள்ளிக்குத் தயார் செய்து. உணவு சமைத்து. மின்சார ரயில் பிடித்து, பின்னர் ஒரு ஷேர் ஆட்டோ ஏறி அலுவலகம் செல்கிறார். வைதேகி யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டார் என்று உங்கள் மனசு சொல்வது கேட்கிறது.**

இன்றைய காலகட்டத்தில் அன்றாடம் யாருக்காவது புற்றுநோய் வருகிறது. சிலர் போராடுகிறார்கள் பலர் தோற்றுப்போகிறார்கள் என்றுதானே சொல்கிறீர்கள். உண்மைதான். ஆனால், வைதேகி தனது வெற்றியோடு நின்றுவிடவில்லை. வைதேகி காத்திருக்கிறாள். தன்னைப் போல் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனதிடத்தை வளர்த்துக் கொள்வதற்கான ஆலோசனை வழங்க. சிகிச்சை பெறும் வழிமுறைகள் கூற, சிகிச்சை பின்விளைவுகளை ஏற்றுக் கொள்வது எப்படி எனத் தெரிவிக்க காத்திருக்கிறாள். தன் வலைப்பதிவின் கீழ் அவர் பதிந்திருக்கும் நிலைத்தகவல் இதுவே.

புற்றுநோய் எனக்கு நிறைய பாடம் கற்றுக் கொடுத்திருக்கிறது. நண்பர்கள் யார் என அடையாளம் காட்டியிருக்கிறது. உறவுகளின் நம்பகத்தன்மையை உணர வைத்திருக்கிறது. இவற்றைவிட முக்கியமானது மனக்குழப்பத்தை தவிர்க்க வேண்டும் என்பது. இருப்பது ஒரு லைஃப். அதை அமைதியாக வாழ்வோமே. நீங்கள் என்னை எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொண்டு சிற்சில ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம். நான் வாழத் தொடங்கியிருக்கிறேன். வாழ்ந்து காட்டுவேன்.

இப்போது புரிகிறதா வைதேகி ஏன் காத்திருக்கிறாள் என்று.

வைதேகியின் பதிவில் இருந்து சில பாடங்கள்:

1. புற்றுநோய் பேதம் பார்ப்பதில்லை. ஏழை, பணக்கார, சாதி, மதம், வயது வித்தியாசம் இதற்குக் கிடையாது.
2. நான் ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள் கொண்ட நபர். எனக்கு புற்றுநோய் வர வாய்ப்பே என்ற எண்ணம் தவறானது.
3. அவ்வப்போது மருத்துவ பரிசோதனைகள் செய்து கொள்வது நல்லது.
4. மருத்துவப் பரிசோதனைகளுக்கு செலவு செய்வது தேவையற்றது என்ற எண்ணம் கூடாது.
5. சரி, நோய் வந்தேவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். முடங்கிப் போகாதீர்கள்.
6. இருப்பது ஒரு வாழ்க்கை அதை மகிழ்ச்சியாக அனுபவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

(நோயிலிருந்து போராடி மீண்டு வந்த வைதேகியின் வலைப்பதிவை மையமாக வைத்து எழுதப்பட்டது)

# ஒரு கிழவரும் மூன்று மகன்களும்

மகாலிங்கம் பத்மநாபன்



**அந்தக் குடும்பத்திலும் நிறைய பெண்பிள்ளைகள். ஆண் பிள்ளைகள் குறைவு. ஆண் பிள்ளைகளில் ஒருவன் என்னுடன் சாம் மாஸ்டரிடம் கெமிஸ்றியும் லோரன்ஸ் மாஸ்டரிடம் மற்ஸ் சும் ஒன்றாய் படித்தவன். வகுப்பில் நல்லாய் கதைப்பான். கோவிலில் சகோதரிகளுடனும் மச்சாள்மாருடனும் நிற்கும் போது தெரிந்த மாதிரி காட்டமாட்டான். கவனிக்காமல் இருந்து விடுவான்.**

நான் சொல்லப் போவது உண்மைக் கதையல்ல. முழுவதும் கற்பனையுமில்லை. இதனை உண்மை கலந்த கற்பனைக் கதை என்றோ அல்லது கற்பனை கலந்த உண்மைக் கதை என்றோ கூறலாம்.

கிழவருக்கு மூன்று மகன்கள் தவிர மனைவியும் மகள்மாரும் இருந்தனர். அவர்களைப் பற்றியும் எழுதினால் நாவலாக மாறி விடும். எனவே அவர்களைப் பற்றி இருட்டடிப்பு செய்து விடுகிறேன்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். கிழவரின் மகன்களான மூத்தவன், நடுவிலான், கடைக் குட்டி ஒருவரிடமும் அதை ஆரம்பத்தில் காணவில்லை. பெயர்களை விட்டு விடுவோம். ஏன் சோலி?

குடுக்கிற கடவுள் கூரையைப் பிய்சுக் கொண்டு கொடுக்கும் என்பார்கள். எந்தக் கடவுளும் அந்தக் கிழவருக்கு அப்படிக் கொடுக்கவில்லை. ஒரு வேளை பொடியன்களின் சாதக பலன் தானோ?

கிழவர் யாழ்ப்பாணத்தில் ஒரு பெட்டிக் கடை வைத்திருந்தார். உப்புத் தண்ணீரில் ஊறப் போட்ட நெல்லிக் காய், தோடம்பழ இனிப்பு, மில்க் ரொபி, வாழைப் பழம், வெற்றிலை, பாக்கு, சுருட்டு, பீடி, சிகரெட் இவை தான் விற்பனைப் பொருள்கள். மூன்று வேளை சாப்பாட்டுக்கே தாளம் போடும் நிலை. இவர் பிள்ளைகளைப் படிக்க வைத்ததே சாதனை தான்.

நான் வன்னியில் இருந்து படிக்க யாழ்ப்பாணம் போனவன். என் தந்தை ஒரு சிறிய அரச உத்தியோகத்தவர் என்பதனால் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து ஒரு நடுத்தரப் பாடசாலையில் எங்களைப் படிக்க விட்டிருந்தார். நாமிருந்த வீட்டுக்கு அருகில் தான் பெட்டிக் கடை.

நடுவிலி எனது தோழன். படிப்பும் நடுத்தரம். ஒருவேளை என்னைப் போல டியுசன் வகுப்புகளுக்கும் போயிருந்தால் நல்லாகப் படித்திருப்பானோ, என்னமோ? நல்லவன் எல்லோருடனும் நன்கு பழகுவான். கஷ்டங்களையும் கூறுவான்.

மூத்தவன் புலமைப் பரிசில் கிடைத்து புகழ் பூத்த கல்லூரிக்குப் படிக்கப் போனவன். பல்கலைக்கழகம் சென்று கலைப் பிரிவில் கற்றுக் கொண்டிருந்தான். இறுதி ஆண்டு படிக்கும் போது எழுதிய கிலெரிக்கள் பரீட்சை பாஸ் பண்ண, பட்டம் பெற்று வெளியேறும் போது அரச உத்தியோகமும் பெற்றான். கிழவரின் குடும்பமும் நிம்மதியாகச் சாப்பிட்டது.

நடுவிலானும் ,நானும் ஓ. எல் பரீட்சையை மட்டுமட்டாகப் பாஸ் பண்ணி, நான் ஏ. எல் படிக்கப் போக நடுவிலானை படித்தது போதுமென்று மறித்து விட்டார்கள்.

நாங்கள் குடியிருந்த வீட்டிற்கு அடுத்த வீடு, ஒரு பங்களா. சுற்று மதில். வீட்டுக்காரர் கொழும்பில் பெரிய உத்தியோகம். ஒவ்வொரு கிழமை இறுதியிலும் மெயில் ரெயினில் வந்து போவார். இரண்டு பெண் பிள்ளைகள். தாயாருடன் இருந்து பெரிய பெண்கள் கல்லூரியில் படித்து வந்தார்கள். கல்லூரி செல்ல வாடகைக் கார். எங்கள் கண்களில் பட மாட்டார்கள்.

என் தங்கையின் வயதை ஒத்தவர்கள். எப்போதாவது அரிதாக தங்கள் வீட்டுக் கேற்றில் நின்று, எங்கள் வீட்டுக் கேற்றருகே நிற்கும் தங்கையிடம் சில வேளை கதைப்பார்கள். அதுவும் ஒரு சில நிமிடங்கள் தான். கதை முடிவதற்குள் தாயார் பெயர் சொல்லி அழைத்து விடுவார். அதனால் அவர்களின் பெயர் தெரியும். துணிந்து போய் அவர்களைப் பார்க்கும் தைரியம் இல்லை.

அவர்களின் தகப்பனாரின் கண்களில் தெரியும் இறுமாப்பு கொஞ்ச நஞ்ச தைரியத்தையும் இல்லாமல் செய்து விடும். அவர்களின் அழகு மனதை சிறிது சலனப் படுத்தியது உண்மை தான். படிக்க வந்த நாங்கள் படிப்பை மட்டும் பார்ப்போமென்று விட்டு விட்டோம். யாழ்ப்பாணத்து வசதி மிக்க கன்னியர்கள் வாடகைக் கார்களில் பெண்கள் கல்லூரிக்குச் செல்வது அப்போது, ஐம்பதாண்டுகளுக்கு முன்னர், ஒரு பாஷன்.

என்னடா? இவன் கிழவன் கதையை எழுதுவதாகக் கூறி யாழ்ப்பாணத்துக் கன்னியரைப் பற்றி எழுதுறானே? என்று ஐமிச்சப் படாதீர்கள். அவசரமும் பட வேண்டாம். விசயம் இருக்கிறது.

கடைக் குட்டியைப் பற்றி சொல்லாமல் விட்டு விட்டேனே? என்று யோசிக்காதீர்கள். எட்டாம் வகுப்புடன் படிப்புக்கு பாய் கூறி விட்டான். நல்ல உடல் பலசாலி. எல்லோருடனும் வீண் சண்டைக்குப் போவான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சண்டை. அடி, உதை குடுப்பான். அடி . உதை வாங்குவான். எப்போதாவது மேஷன் வேலைக்குப் போவான். தேர்தல்கள் வந்தால் பிரச்சார வேலைகள்.அது சம்பந்தமான அடி தடியில் முன்னுக்கு நிற்பான்.

என்னுடைய நண்பனான நடுவிலிக்கும் ஒரு வேலை வந்தது. எமது பக்கத்து வீட்டுச் சீமான் நான்கு சீமைப் பசுக்களை வாங்கினார். அவற்றுக்கு புல், வைக்கல் போடுதல், தவிடு, பிண்ணாக்குக் குழைத்து வைத்தல், சாணம் அள்ளுதல், பால் கறத்தல், காலையும் மாலையும் கறந்த பாலை கடைகளுக்குக் கொண்டு செல்லல் என்று முழு நாள் வேலைகளையும் நடுவிலான் ஓடி, ஓடிச் செய்வான். அவ்வப்போது நின்று என்னுடன் சிறுது நேரம் கதைப்பான். மற்றப்படி காணும் பொது ஒரு சிறு புன்னகை மட்டும்.

அவனை நினைக்கும் போது எனக்கு குற்ற

உணர்வாக இருக்கும். எனக்கு படிப்பது, பாடசாலை செல்வது, பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்துக்கு செல்வது, பிற்காலத்தில் பொது நூலகம் செல்வது இவை மட்டும் தான் வேலை. ஓம். முதலாம் குறுக்குத் தெருவிலோ, இரண்டாம் குறுக்குத் தெருவிலோ, யாழ்ப்பாணத்தில் ஒரு பிரிட்டிஷ் கவுன்சில் நூலகம் அந்நாளில் இருந்தது.

அந்த நாள் யாழ்ப்பாண நங்கையரைப் பற்றி மீண்டும் எழுத வேண்டி உள்ளது. மன்னித்து விடுங்கள். ஒரு உத்தரவாதம் தருகிறேன். கதைக்குத் தேவையானதை மட்டும் எழுதுவேன்.

நாங்கள் இருந்த தெருவிலேயே ஒரு ஐந்து, ஆறு ஏக்கர் மதிக்கத்தக்க காணி உயர்ந்த சுற்று மதிலோடு இருந்தது. அந்தக் காணி உயர்ந்த பல மரங்கள் மா, பலா, தென்னை நிறைந்த சோலை. மதில் மேல் கண்ணாடித் துண்டுகள் பதிக்கப் பட்டிருக்கும்.

மேற்குப் பக்கம் எங்கள் தெரு. வடக்குப் பக்கம் ஒரு சிறு வீதி. கிழக்குப் பக்கம் பிரதான வீதி. எங்கள் தெருப் பக்கம் ஒரு பெரிய கேற். அது திறந்திருந்து நான் பார்த்ததில்லை. பிரதான வீதிப் பக்கமாக ஐந்து, ஆறு பெரிய பங்களாக்கள். எல்லா வீடுகளிலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் வாழ்ந்தார்கள். இப்போ, அவை எப்படி இருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. யாழ்ப்பாணத்தின் மையப்பகுதி இப்போ இருந்தால் என்ன பெறுமதி? காணியின் பெறுமதி கூற நான் வரவில்லை.

அந்தக் காணியின் வடக்குப் புறமாக அந்தக் குடும்பத்தினருக்கென்றே கட்டப்பட்ட தனிக் கோவில். பிள்ளையாரோ? வைரவரோ? மறந்து விட்டது. கடவுளை மறந்து விடுவீர்கள், கன்னியரை மறக்க மாட்டீர்கள் என்று நீங்கள் கூறுவது கேட்கிறது. குடும்பத்தினர் மட்டும் உள்ளே போய் வணங்குவர். நாங்கள் வெளியாள்கள் கம்பிக் கேற்றுக்கு வெளியே நின்று வணங்கலாம்.

அந்தக் குடும்பத்திலும் நிறையப் பெண்பிள்ளைகள், ஆண் பிள்ளைகள் குறைவு. ஆண் பிள்ளைகளில் ஒருவன் என்னுடன் சாம் மாஸ்டரிடம் கெமிஸ்றி யும் லோரன்ஸ் மாஸ்டரிடம் மற்ஸ் சும் ஒன்றாகப் படித்தவன். வகுப்பில் நல்லாகக் கதைப்பான். கோவிலில் சகோதரிகளுடனும் மச்சாள்மாருடனும் நிற்கும் போது தெரிந்த மாதிரி காட்டமாட்டான். கவனிக்காமல் இருந்து விடுவான்.

கடவுளை வணங்கப் போவோமோ? கன்னியரைப் பார்க்கப் போவோமோ? ஆனால் ஒவ்வொரு நவராத்திரி பூசைக்கும் நானும் என் நண்பர்களும் ஆஜராகி விடுவோம். கம்பிக் கேற்றுக்கு மேலாலை தாற பிரசாதமும் ஒரு காரணமாக இருக்கலாம். அங்கே நட்சத்திரங்களுக்கு மத்தியிலே ஒரு சந்திரனைப் போல ஒரு பேரழகியும் வருவதுண்டு.

நாங்கள் கிழவரின் கதைக்கு வருவோம். அவர் நிம்மதியாகச் சாப்பிடுவது அந்த இறைவனுக்குப் பிடிக்கவில்லையோ? என்னவோ?

யாழ்ப்பாணத்தில் இந்த நாளிலேயே காதலுக்கு வரவேற்பில்லை. அந்த நாளில் பெற்றோருக்குக் காதல் என்றால் சிம்ம சொர்ப்பனம். காதலிப்பவர்களுக்கு ஒரே தெரிவு. விரும்பியவர்கள் இருவரும் தத்தம் வீட்டுக்குத் தெரியாமல் ஓடிப் போவது தான். நான் இது வரை ஒரு விடயத்தைக் கூற மறந்து விட்டேன். குடிசையில் வாழ்ந்தாலும் கிழவரும் மகன்களும் நல்ல தோற்றப் பொலிவு உள்ளவர்கள்.

நவராத்திரி பூசை முடிந்ததும் எங்களுக்கு அந்த அதிர்ச்சி செய்தி கிடைத்தது. மூத்தவன் நாங்கள் கோவிலில் கண்ட அந்தப் பேரழகியைக் கூட்டிக் கொண்டு ஓடி விட்டானாம். பிறகு தான் அவர்கள் பல்கலைக்கழகத்தில் பல நாளகாதலர்கள் என்று அறிந்தோம். கொழும்பில் வேலை பார்த்ததால் அங்கு ஒரு அறை வாடகைக்கு எடுத்துக் காதலியை மெயில் ரெயினில் கூட்டிச் செல்வது இலகுவாயிற்று. கிழவர் தான் பாவம். புதுக் குடித்தனக்காரன் இனி தகப்பனுக்குக் காசு அனுப்ப எங்கே போவது? பெண் வீட்டார் அப்போதைக்கு பேரழகியைக் கை கழுவி விட்டனர். ஏழைக் கிழவரை சம்பந்தியாக ஏற்க அவர்கள் மனம் துணியவில்லை.

எனக்கும் நண்பர்களுக்கும் எதையோ இழந்தது போலிருந்தது. சரி. எங்கள் படிப்பை நாங்கள் பார்ப்போம். நாள்களும் ஓடின. பரீட்சையும் முடிந்தது. கெமிஸ்றி, பிசிக்ஸ் இரண்டு பாடங்களும் பிறக்ரிக்கல் ரெஸ்ட் செய்ய அனுமதி கிடைத்து, பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு பிறக்ரிக்கல் ரெஸ்ட் செய்யச் சென்று சோதனையையும், ராக்கிங் என்ற வாதனையும் முடித்து மீண்டும் வந்தேன். மீண்டு வந்தவனுக்கு மீண்டும் அதிர்ச்சிச் செய்தி. நடுவிலான் தான் மாட்டுப் பண்ணை வேலை செய்த எங்கள் பக்கத்து வீட்டுக் கன்னியைக் கூட்டிக் கொண்டு கொழும்புக்கு தமயனிடம் ஓடி விட்டான். பக்கத்து வீட்டுக் காரர் உண்மையிலேயே நல்லவர்.

எனக்கும் நண்பர்களுக்கும் எதையோ இழந்தது போலிருந்தது. சரி. எங்கள் படிப்பை நாங்கள் பார்ப்போம். நாள்களும் ஓடின. பரீட்சையும் முடிந்தது. கெமிஸ்றி, பிசிக்ஸ் இரண்டு பாடங்களும் பிறக்ரிக்கல் ரெஸ்ட் செய்ய அனுமதி கிடைத்து, பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு பிறக்ரிக்கல் ரெஸ்ட் செய்யச் சென்று சோதனையையும், ராக்கிங் என்ற வாதனையும் முடித்து மீண்டும் வந்தேன். மீண்டு வந்தவனுக்கு மீண்டும் அதிர்ச்சிச் செய்தி.

மகளையும் மருமகனையும் அழைத்து வந்து, பதிவுத் திருமணம் செய்ய வைத்து, நடுவிலானை அவன் விரும்பிய பண்ணைத் தொழிலைக் கற்க வெளி நாடு ஒன்றுக்கு அனுப்பி வைத்தார். அவன் பட்டம் பெற்று வந்ததும் மகளை முறைப்படி திருமணம் செய்து கொடுத்தார். சில நாள்களில், வறுமை ஒழிய இருந்த நிலையில் கிழவர் ஏழையாகவே இறைவனிடம் போய்ச் சேர்ந்தார்.

பொறுங்கள், இன்னும் கதை முடிவுக்கு வரவில்லை. அந்தத் தெருவில் அவர் ஒரு அரசியல் பிரமுகர். அவரது பிரசாரக் குழுவில் கடைக்குட்டி முதன்மையானவன். அந்த அரசியல் பிரமுகர் ஆதரவாக இருக்கும் தலைவரே பெரும்பாலும் எம்பியாக வருவார்கள். கடைக்குட்டி அவர் சொல்லும் வேலைகளைச் செவ்வனே செய்து முடிப்பான். போஸ்டர் ஒட்டும் குழுவுக்கு அவனே லீடர். எதிர்க் கட்சிக்காரரின் போஸ்டர்களைக் கிழிப்ப தற்கும் அவனே லீடர். தேர்தல் முடிந்தது. பிரமுகரால் ஆதரிக்கப் பட்டவர் எம்பியாக வெற்றி பெற்றார். வெற்றிக் களிப்பு முடிந்த ஒரு நாள்காலை பிரமுகர் எழுந்து பார்த்த போது அவரது பட்டதாரி மருமகளைக் கடைக்குட்டி கூட்டிக் கொண்டு ஓடி விட்டான்.

பிறகு என்ன? பேரப்பிள்ளைகள் பிறந்ததும் எல்லாக் குடும்பங்களும ஒன்று சேர்ந்தனர். மனைவிமாரின் பணத்தில் மகன்கள் சந்தோஷமாக வாழ்ந்தனர். கிழவர் பெரிதான படத்தில் சிறந்த பிரேமில் மூன்று வீடுகளிலும் புன்னகையுடன் காட்சியளிக்கின்றார்.

## சிறுகதை



# ஒஸ்கர் ஆச்சரியங்கள்



தீவிர சினிமா ரசிகர்களால் பெரிதாக எடுத்துக்கொள்ளப்படாத போதிலும், உலகெங்கிலும் உள்ள சினிமா ரசிகர்களால் அன்னாந்து பார்க்கப்படுகின்ற விருது... ஒஸ்கர்.

சிறந்த நடிகர், நடிகை, துணை நடிகர், துணை நடிகை, திரைப்படம், அனிமேஷன் திரைப்படம், ஒளிப்பதிவு, உடையமைப்பு, இயக்கம், ஆவணப் படம், ஆவண குறும்படம், படத் தொகுப்பு, வெளிநாட்டுத் திரைப்படம், சிகை அலங்காரம், பாடல், இசை, கலையமைப்பு, அனிமேஷன் குறும் படம், குறும்படம், ஒலித் தொகுப்பு, ஒலியமைப்பு, விஷுவல் எஃபக்ட், தழுவிய திரைக்கதை, திரைக்கதை என்று 24 பிரிவுகளில் அளிக்கப்படுகின்ற ஒஸ்கர் விருதுகள் ஹொலிவுட் திரைக் கலைஞர்களின் மாபெரும் லட்சியமாக இருக்கின்றன.

**'வரலாறு' முக்கியம்...**

எப்போதும் வரலாற்றையும் சரித்திரத்தையும் பேசும் படங்கள் ஒஸ்கரின் விருதுப் பட்டியலுக்கு தேர்வு செய்யப்படும் என்று ஒரு சொல்லப்படாத நெறி இருக்கிறது.

அந்த வகையில் 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த 9/11 நிகழ்வுக்கு பிறகு ஈராக் செல்லும் அமெரிக்க வீரர்களை பாதுகாக்கும் ஸ்னைபர் வீரராகிய 'கிரிஸ் கைல்' வாழ்க்கையை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்ட 'அமெரிக்கன் ஸ்னைபர்', அமெரிக்க மண்ணில் உள்ள கறுப்பு நிற மக்களின் உரிமைக்காகப் போராடிய 'மார்டின் லூதர் கிங் ஜுனியர்'ரின் பாதையை சொல்லும் . 'செல்மா', விஞ்ஞானி 'ஸ்டீபன் ஹாகிங்க்ஸ்' ஸிக்கும் அவரது மனைவிக்கும் இடையே உள்ள காதலை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்த ' தி தியரி ஒப் எவெரிதிங்' போன்ற படங்கள் இருந்தன.

மேலும், இரண்டாம் உலகப் போரின் போது எனிக்மா என்ற கருவியால் பிற மனிதர்கள் புரிந்து கொள்ளமுடியாத வடிவத்தில் தகவல்களை ஜெர்மனி பகிர்ந்திட அமெரிக்காவுக்கு மாபெரும் சவாலாக இருந்த இந்த 'எனிக்மா' கருவியின் செயல் திறனை கணித மேதை 'அலன் டர்னர்' எப்படி முறியடித்தார் என்று கூறும் 'தி இமிடே ஷன் கேம்'. இப்படி அமெரிக்காவின் வளர்ச்சிக்கு பெரிதும் காரணமாக இருந்த வீரர்களையும், விஞ்ஞானிகளையும், அரசியல் சாதனையாளர்களையும் பேசும் திரைப்படங்கள் இந்த வருட ஒஸ்கரில் பல பிரிவுகளில் இடம் பெற்றிருந்தன.

எப்போதுமே சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படம் பிடிக்கும் திரைப்படங்கள் ஒஸ்கர் பிரிவுக்கு வருவது வழக்கமான ஒன்றே. பார்த்தாலே இது ஒஸ்கர் படங்கள், ஒஸ்காருக்கென்றே எடுக்கப் பட்ட படங்கள் என்று அங்கீகரிக்கக் கூடியவையே மேற்கூறியன எல்லாம்.

இந்தப் படங்களிலிருந்து முற்றிலுமாக மாறுபட்ட பல பிரிவுகளில் தேர்வு செய்யப்பட்டு வெற்றியையும் கண்ட இரு முக்கிய படங்கள் தான் 'தகிராண்ட் புடாபெஸ்ட் ஹோட்டல்' மற்றும் 'பேர்ட் மேன்'.

ஓர் இலக்கிய நகைச்சுவையோடு கலைரசனையுடன் படமாக்கப்பட்ட 'த கிராண்ட் புடாபெஸ்ட் ஹோட்டல்' இந்தமுறை ஒஸ்கரில் நான்கு பிரிவுகளில் வெற்றிபெற்றது.

**பின்னியெடுத்த 'பேர்ட்மேன்'**

சர்வதேச அரங்கங்களில் மாபெரும் பாராட்டைக் குவித்த 'பேபல்', 'அமெரெஸ் பெரொஸ்', 21 கிராம்ஸ்' போன்ற படங்களை இயக்கிய அலெஜென்ட்ரோ கோன் ஸாலேஸ் இயக்கி இந்தவருடம் வெளிவந்த படம் 'பேர்ட்மேன்'. இந்தப் படத்தின் உள்ளடக்கம் மிகவும் வித்தியாசமானது. இதில் அப்படி என்னதான் சொல்லப்பட்டிருக்கிறது என்று சற்றே பார்க்கலாம்.

'கலைஞனாவதற்கு வழியற்றவன் தான் விமர்சகன் ஆகிறான், நீ ருவிட்டரில் இல்லை... பேஸ்புக்கிலும் உனக்கு கணக்கு இல்லை... உண்மையில் கூறினால் நீ இந்த உலகத்தில் இயங்கிடவே இல்லை, யாரோ ஒருவன் உருவாக்கிய கலைக்கு உயிர் கொடுப்பதாகக் கூறி நீ யாரை ஏமாற்றப் பார்க்கிறாய் உண்மையில் கூறினால் உனக்கு இங்கே அடையாளம் இல்லை. அதனால் நீ உன்னதமாக நடிப்பதாகக் கூறி உனக்கு நீயே அடையாளம் அளித்துக் கொள்ளப் பார்க்கிறாய். கலைக்காக செய்கிறேன் என்று சொல்வதெல்லாம் வெறும் கட்டுக்கதை.'

இப்படி ஹொலிவுட்டின் நாளிதழ்களையும், விமர்சகர்களையும், ரசிகர்களையும், நடிகர்களையும் எள்ளி நகையாடிய 'பேர்ட்மேன்', விமர்சகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. ஹொலிவுட்டை கேலி செய்த ஒரு படம் நான்கு ஒஸ்கர்களை குவித்தது தான் ஆச்சரியம். .

எப்போதும் 'கோல்டன் க்ளோப்' விருதுகளுக்கென்று தேர்வு செய்யப்பட்ட படங்கள் ஒஸ்கரிலும் விருதுகளை குவிப்பது யதார்த்தம். அதே வழக்கம் இந்த முறையிலும் நிறையப் பிரிவுகளில் பிரதிபலித்தது. 'கோல்டன் க்ளோப்'பில் சிறந்த நடிகைக்கான விருதை 'ஸ்டில் அலைஸ்' திரைப்படத்துக்காக பெற்ற நடிகை 'ஜுலியானா மூர்' ஆஸ்கரிலும் வென்றது. 'தியரி ஒப் எவெரிதிங்' படத்துக்காக சிறந்த நடிகருக்கான விருதை குவித்த 'எடி ரெட்மெயின்' ஒஸ்கரிலும் வெற்றி பெற்றது போன்ற நிகழ்வுகள் குறிப்பிட்டத்தக்கது.

எந்த வகையிலும் குழந்தைகளுக்குத் தீமையைப் புகட்டாமல், பெரியவர்களும் ரசிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்த 'பிக் ஹீரோ 6' திரைப்படம் சிறந்த அனிமேஷன் திரைப்படத்துக்கான பிரிவில் வெற்றி கண்டது. சிறந்த படத்துக்கான பிரிவில் 'பேர்ட்மேன்' வெற்றி பெற்றது.

**சிறந்த வெளிநாட்டுத் திரைப் படம்**

சிறந்த வெளிநாட்டு திரைப்படத்துக்கான பரிந்துரையில் இடம்பெற்றுள்ள Ida, Leviathan, Tangerines, Timbuktu, Wild Tales ஆகிய 5 திரைப்படங்களுமே அற்புதமான காவியங்கள். ஆஸ்கர் என்பது வணிகமயமாக்கப்பட்ட விருது என்றாலும், இம்முறை விருது பெற்றுள்ள போலந்தின் Ida படத்துடன், மற்ற நான்கு படங்களையும் பார்க்கத் தவறாதீர்கள்'

**பாய்ஹூட்... ஏமாற்றம்!**

ஒரு சிறுவன் பருவநிலை அடையும் வரை அவனுள் நடக்கின்ற மாற்றங்களை பன்னிரெண்டு வருடங்களாக படமாக்கிய 'பாய்ஹூட்' திரைப்படம் துணை நடிகைக்கான விருதினை மட்டும் வென்றது. 'கோல்டன் க்ளோபில்' சிறந்த படத்துக்கான விருதையும், சிறந்த இயக்குநருக்கான விருதை யும் குவித்த படம் இந்தப்படம் ஒஸ்கரில் பெரிய வெற்றிகளைக் குவித்திடாமல் போனது ஏமாற்றமே.

எப்போதும் போல் விமர்சகர்களால் பாராட்டப்பட்ட இயக்குநர் கிறிஸ்டோபர் நோலன் இந்த முறையும் ஒஸ்காருக்கு ஒரு பிரிவில் கூட தேர்வு செய்யப்படாமல் போனதும்... அவர் இயக்கி இந்தவருடம் வெளிவந்த 'இன்டெர்ஸ்டெல்லார்' திரைப் படம் விஷுவல் எஃபக்டிக்கு மட்டும் ஒஸ்கர் விருதினை வென்றதும் வழக்கமாக ஒஸ்கரில் நடக்கின்ற பாரபட்சத்தையே பிரதிபலித்தன.

# சுயநலவாதி

மே.இ.தீவுகளுக்கு எதிரான உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் படுதோல்வி யடைந்ததையடுத்து முன்னாள் பாக். வீரர்கள் அந்த அணியின் மீதும் கப்டன் மிஸ்பா மீதும் கடும் விமர்சனங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

ஜியோ நியூஸ் சானலில் ஷோயப் அக்தர் கூறும்போது, அதாவது அழிவை நோக்கி நம் அணி சென்று கொண்டிருக்கிறது என்று நான் நீண்ட நாள்களாகக் கூறிவருகிறேன். மிஸ்பா உல் ஹக் போல் ஒரு சுயநலம் மிக்க கோழையான ஒரு கப்டனை நான் என் வாழ்நாளில் கண்டதில்லை.

அணிக்கு உத்வேகம் மிக்க ஒரு தலைவர் தேவை என்ற நிலையில் 3ஆம் நிலையில் மிஸ்பா களமிறங்கி யூனிஸ் கான் போன்ற வீரர்களைப் பாதுகாத்திருக்க வேண்டும். மிஸ்பா எப்போதும் ஒரு சுயநலமியே. தான் எவ்வளவு ரன்கள் எடுக்கிறோம் என்பதுதான் அவருக்கு முக்கியம். அணி இரண்டாம் பட்சம்தான் என்று சாடியுள்ளார்.

முன்னாள் ஓஃப் ஸ்பின்னர் சக்லைன் முஷ்டாக் கூறுகையில், ஒட்டு மொத்த தேசமும் கோபமாக உள்ளது. ஒரு தொழில்பூர்வ நிர்வாகத்திடமிருந்து இத்தகைய தொழில் பூர்வமற்ற முடிவுகள் வருவது ஆச்சரியமே என்றார்.

முன்னாள் வீரர் முகமது யூசுப் கூறும்போது, சர்பராஸ் அகமட், அல்லது லெக் ஸ்பின்னர் யாசிர் ஷா ஆகியோரை எப்படி உட்கார வைக்கலாம். இத்தகைய பிட்ச்களில் விளையாட தற்போதைய பாக்.வீரர்களிடத்தில் சிறந்த உத்திகள் இல்லை. இந்த இலக்கல்ல எந்த ஒரு இலக்கையுமே நம்மால் துரத்த முடியாது. இனிமேலாவது யூனிஸ் கான் ஒரு நல்ல முடிவை எடுப்பாரா? என்று கூறினார்

மியாண்டட் மட்டும் கொஞ்சம் ஆறுதலாக, அணிச்சேர்க்கை சரியாக அமைந்து ஒரு வெற்றி வந்துவிட்டால் போதும், உலகக் கிண்ணத்தில் அதன் பிறகு பாகிஸ்தான் சரியாக விளையாடும். என்று கூறினார்.



YK

## யாழ் நகரில்

PEARSON | University of Wolverhampton | London South Bank University

edexcel
**HNDs IN...**

- Quantity Surveying
- Civil Engineering
- Biomedical Science
- Business Management
- Computing



சவால்களை வெல்லும்
சர்வதேச கல்வித் தகைமைகள்

Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) from more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...

- உயர் கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற் தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற்கான வாய்ப்பு
- மேலுள்ள துறைகளில் HND ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 க்கு மேற்பட்ட பிரித்தானிய, அமெரிக்க, அவுஸ்ரேலிய மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு
- கடந்த 15 வருடங்களில் HND உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
Tel : 021 221 9910
**Hotline : 077 710 2131**

15 YEARS

www.bcas.lk

Colombo | Mt.Lavinia | Kandy | Batticaloa | Kurunegala | Ampara | Jaffna | Qatar

## குறைந்த விலையில்
## அதிக பயனைக் கொண்ட
### அபான்ஸ் போத்தல் குளிரூட்டி



5 வருட உத்தரவாதம்

- குளிரூட்டலுக்கான விசிறி செயற்பாடு
- பனி படியாத கண்ணாடிக்கதவு
- பனிபடியாது
- தேவைக்கேற்ப மாற்றியமைக்க கூடிய இறாக்கை
- நீர் வடிந்து செல்வதற்கான பகுதி
- பூட்டுடன் கதவு
- போத்தல் திறப்பிற்கான பகுதி
- அசைக்க கூடிய வகையில் சக்கரங்கள்

SCP131
140 Ltr - ரூ. **49,900**
SCP161
180 Ltr - ரூ. **58,400**
SCP1181
230 Ltr - ரூ. **62,900**

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

நிபந்தனைகள் உண்டு

அழைப்புகளுக்கு 0714020799

நாடுபூராகவும் அபான்ஸ் மற்றும் அபான்ஸ் அன்லிமிட்ட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்

**Abans**

ABS GARDNER DIXON HALL

## மருத்துவக் கல்வி

USA | Canada | Australia | UK | Europe | Malaysia | Nepal

### க.பொ.த மாணவர்களுக்கான அரிய வாய்ப்பு

- **Monash University** (Australia/ Malaysia)
- **Melaka Manipal Medical College** (India/ Malaysia)
- **Vitebsk State Medical University** (Belarus - Eastern Europe)
- **St.George's University** (UK/ Granada/ USA)
- **Riga Stradins University** (Latvia - Europe)
- **International Medical University** (Malaysia/ UK/ Aus/ NZ)
- **Gomel State Medical University** (Belarus - Eastern Europe)
- **Angeles Medical University** (Philippines)
- **Thribhuvan University** (Nepal)
- **Kathmandu University** (Nepal)

- **Recognized By SLMC (Sri Lanka)**
- **Recognized By ECFMG (USA)**
- **Recognized By AMC (Australia)**
- **Recognized By GMC (UK)**
- **Recognized By WHO**

**2015 விண்ணப்பங்கள் ஆரம்பம்**

**வருடாந்த கட்டணம் 560,000 முதல்**

மேலதிக விபரங்களுக்கு:- Dr. தாரங்கன் பத்தசீலன்
**0773 017 666, 0777 662 233**

PATHE STUDY MEDICINE

PATHE Study Medicine No. 111 1/2, Maya Avenue, Colombo 06
www.pathestudy.org

## சேவை வழங்குநர்கள் தேவை
### SERVICE PROVIDERS

softlogic
BEST IN THE BUSINESS

நீங்கள் வீடுகளுக்கான மின்சாரம் மற்றும் மின்சார உபகரணங்களைப் பொருத்துதல், சேவை வழங்கல் மற்றும் புதுப்பித்தல் துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தக நிறுவனத்தினரானால் இந்த அரிய வாய்ப்பு உங்களுக்காகக் காத்திருக்கிறது.

நீங்கள் குளிரூட்டி, குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், வீட்டு மின்சார உபகரணங்கள், கணினி, தையல் இயந்திரம் ஆகிய மின்சார உபகரணங்களை பழுது பார்ப்பதில் புரிச்சயமும் கீழ் காணும் தகுதி களையும் கொண்ட பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றை நடத்துபவரானால் கீழ்க்காணும் முகவரிக்கு ......... திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.








- ✓ முக்கிய நகரச் சுற்றாடலில் தங்களது வர்த்தக நிலையம் அமைந்திருத்தல் வேண்டும்.
- ✓ குறித்ததொரு பரந்த பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தத்தக்க வகையில் போக்குவரத்து வசதியை கொண்டிருத்தல் வேண்டும்.
- ✓ ஒரு இலட்சம் (100,000/=) ரூபாவை வைப்புப்பணமாகச் செலுத்தும் வசதி கொண்டிருத்தல் வேண்டும்.
- ✓ தங்களது வர்த்தக நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ் மற்றும் காப்புறுதி பத்திரம் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
**Softlogic Service Centre**
268, Nawala Road, Nawala.
careers@softlogic.lk

TOSHIBA
Leading Innovation >>>

e-STUDIO

# நழுவவிட முடியாத அரிய வாய்ப்பு!



**e-Studio 2006**

20 PPM | A3 - A5 | 250 Sheet Cassette
512MB RAM | USB Print | USB Colour Scan

**பிரதியெடுக்கும் இயந்திரம் ரூ.99,000 தொடக்கம்.**

இந்த வழங்கல் 2015பெப்ரவரி 22 முதல் மார்ச் 31 வரை மட்டுமே*

கொழும்பு - 0777 386 909
வெளியில் - 0777 725 241



| e-Studio 2505H | e-Studio 2007 | e-Studio 257/307 | e-Studio 357/457 | e-Studio 557/657/757/856 | e-Studio 2051/2551 | e-Studio 2050/2550 |
|---|---|---|---|---|---|---|
| 25 PPM<br>A3 - A5<br>512MB RAM<br>Duplex<br>NW Print & Colour Scan<br>Automatic Document Feeder | 20 PPM<br>A3 - A5<br>512MB RAM<br>Duplex<br>PCL 6 Network Print<br>Colour Scan to Email | 25/30 PPM<br>A3 - A5<br>2GB RAM/320GB<br>Duplex<br>Electronic Filing<br>PCL6/PS3 Network Print<br>Colour Scan to Email* | 35/45 PPM<br>A3 - A5<br>2GB RAM/320GB<br>Duplex<br>Electronic Filing<br>PCL6/PS3 Network Print<br>Colour Scan to Email* | 55/65/75/85 PPM<br>A3 - A5<br>2GB RAM/320GB<br>Duplex<br>3600 Paper Supply<br>PCL6/PS3 Network Print*<br>Colour Scan to Email* | 20/25 PPM<br>A3 - A5 Full Colour<br>2GB RAM + 8GB SSD<br>250 Sheet Cassette<br>Trimming & Masking<br>PCL 6 Network Print<br>Colour Scan to Email | 20/25 PPM<br>A3 - A5 Full Colour<br>2GB RAM + 8 GB SSD<br>160GB Hard Disk<br>250 Sheet Cassette<br>PCL6/PS3 Network Print<br>Network Colour Scan to Email<br>Electronic Filing System* |

**Authorized Dealers for John Keells Office Automation (Pvt) Ltd.**

Ampara Badurcom and Stationery – 077 9350738/Talbah Marketing (Pvt) Ltd. – 077 7725241, Ambalantota MRI Office Automation (Pvt) Ltd. – 071 8307218/077 3539568, Anuradhapura Vanoj Office Automation – 077 7916945, Badulla Imtiaz Pakeerdeen – 055 2222497/Nunet Computers (Pvt) Ltd. – 055 2223450, Batticaloa Jilans Macsar Techno – 065 2226664/ JBRT Tower – 077 5550602, Colombo 10/Battaramulla Sears Technology – 011 2693232, Colombo 06 Geotrans (Pvt) Ltd. – 011 5757444, Galle Lanka Technology Appliances (Pvt) Ltd. – 091 5672492/Kent Business System – 091 3098989/Metro Computers Technology – 091 4545439, Gampaha AMW Computers (Pvt) Ltd. – 077 3386011, Hatton VKR Telecom – 051 2222967, Kegalle Nicstop Computers – 077 7775884, Kurunegala K. T. Office Automation (Pvt) Ltd. – 077 7771069, Kandy The Office Shop – 081 2202830/I. H. C. Technologies – 081 2201278, Matara Metro Computers Technology – 071 5335148/Kent Business Systems – 076 6927767, Matale PC Care & Cure – 066 2232032, Mawanella Stylee Computers – 035 2247650, Mannar North Link Engineering – 023 2251341, Monaragala Kent Business System – 077 7003802, Maharagama Just Technologies – 011 4542355, Moratuwa T. S. P. Management Services (Pvt) Ltd.–011 2644741, Nuwaraeliya Mitta – 052 2234697, Negombo AMW Computers – 031 2228992, Polonnaruwa M. N. Office Automation – 077 3050108, Ratnapura NEC Technologies – 045 2228162/Nunet Computers (Pvt) Ltd. – 045 2228784, Trincomalee Trinco Stationers – 026 2223071/Trintec Computers (Pvt) Ltd. – 026 2222552, Vavuniya North Link Engineering – 077 7593743, Wattala Dyntech Enterprises – 011 2780008.

JKOA **John Keells Office Automation (Pvt) Ltd.**
80, Union Place, Colombo 2, Sri Lanka | Tel +94 (0) 11 231 3000
Fax +94 (0) 11 243 1745 | E-mail jkoa@keells.com | Web www.jkoa.com

*Conditions apply

---

FULLY LOADED **EXIDE**

140 வருட நம்பிக்கையை வென்ற பிரவுன்ஸ் இடமிருந்து அதி உயர் தொழிநுட்பத்துடன் சிறந்த சேவையை வழங்கும் Exide தற்போது Fully loaded



வருடங்கள் 5 வரை உத்தரவாதம்

SLS தரச் சான்றிதழ்

பாரிய வியாபாரிகள் வலையமைப்பு

Browns 140 வருட நம்பிக்கை

BATTMOBILE சேவை

பிரவுன்ஸ் அண்ட் கம்பனி பீஎல்சி,
107 பி, ஹெவலொக் வீதி, கொழும்பு 05, தொலை பேசி: 011 2555333
BATTMOBILE சேவைக்கு: அழையுங்கள் 0777 714 714

Browns

---

இளம் வயதில் ஏற்படும் நரை மற்றும் முடியுதிர்தலை தடுக்க கைகண்ட மருத்துவ தீர்வு



மென்மையான வாசனையூட்டிய

LINK NATURAL **அகாலபலித** இளநரை, முடியுதிர்தலை தடுப்பதற்காக கைகண்ட ஆயுர்வேத மருத்துவ தைலம்

இளநரை, முடியுதிர்தல் போன்றவற்றை தடுப்பதற்காக,
ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பாவித்து நிரூபிக்கப்பட்ட அதிவிஷேட ஆயுர்வேத செயன்முறைக்கமைய,
விஞ்ஞான முறைப்படி நவீன தொழிநுட்பத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.



ரூ 350/-

LINK NATURAL லிங்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் சீ.ஐ.சீ. இல்லம் 199, கிங் வீதி, கொழும்பு 02. தொ.பே.எண். : 011-2409294 மின்அஞ்சல் : info@linknaturalproducts.com இணையம் : www.linknaturalproducts.com

---

65

YAMAHA
Revs Your Heart

வலி. தெற்கு பிரதேச
27 FEB 2015



# இது மோட்டார் சைக்கிள் அல்ல, வாழ்க்கை...

மகிழ்ச்சி வெள்ளத்தில் முன்னேற உங்களுக்கும் எனக்கும்

RAY

ரூ. 216,500/-

AMW bringing the world to you

தலைமை அலுவலகம்
**அசோஷியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**
107, டீ.எஸ். சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08.
www.yamahaworld.lk

மின்னஞ்சல் yamaha@amwltd.com | www.facebook.com/YamahaLK | 077 304 7253 | 077 296 7063 | 077 304 7255 | 077 084 8593 | அலுவலகம்: 0112 680 840-2

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 பெப்ரவரி 25ஆம் திகதி வெளியிடப்பட்டது.